தர்மசக்கரம்



சித்தார்த்தி ஹு புரட்டாசி மீ சக்கரம் 28 ஆரம் 9

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா.

Chandra arts.

திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

அந்தர் யோகம்

1979 ஆம் ஞு நவராத்திரி பூஜையின் கடைசி மூன்று தினங்களாகிய செப்டம்பர் மாதம் 28, 29, 30 தேதிகளில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதி வியாழக்கிழமை இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 5-00 விதம் ரூ. 15-00 உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். தாய்மார்களுக்கும் இதில் இடமுண்டு. பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை	6 மணிமுதல்	7 மணிவரை	தியானம்
,,	8 ,,	9 ,,	பஜனை
,,	9 ,,	10 ,,	லலிதாநாம விளக்க உபந்யாசம்
,,	11 ,,	12 ,,	அர்ச்சனை
மாலை	2 ,,	3 ,,	லலிதாநாம விளக்க உபந்யாசம்
,,	5 ,,	6 ,,	அர்ச்சனை
,,	6 ,,	7 ,,	தியானம்
இரவு	8 ,,	9 ,,	பஜனை

தியானம், லலிதாநாம விளக்க உபந்யாசம், அர்ச்சனை, பஜனை இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் நேரங்கள் போக பாக்கியிருக்கும் 16 மணி நேரத்தில் இடைவிடாது நாமஜபம் நடந்துகொண்டிருக்கும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் ஒவ்வொருவரும் காலையில் ஒருமணி நேரமும் மாலையில் ஒருமணி நேரமும் அகண்டநாம பஜனையில் கலந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இரவு 10 மணிமுதல் காலை 4 மணி வரையில் மாணவர்கள் செய்யும் நாமபஜனையில் அன்பர்கள் தங்களுக்கு வசதிப்பட்டால் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் இரவு 10 மணிமுதல் காலை 6 மணிவரை நடைபெறும் நாமஜபத்தில் கலந்து கொள்ளமாட்டார்கள்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 28	சித்தார்த்தி ஸ்ரீ புரட்டாசி மீ	ஆரம் 9

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்மசக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையைப் பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 10 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டுசந்தா ரூபாய் பத்துச் செலுத்த இயலாதவர்கள் ரூபாய் ஐந்து மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடு செய்து கொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பத்துச் செலுத்த இயலுகிற வர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

இலவச சந்தா: தமிழ் நாட்டிலும் பண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அன்பர்களின் உதவியால் அவை அனைத்துக்கும் தர்ம சக்கரம் இனாமாகத் தொடர்ந்து அனுப்பப்பெற்று வருகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் 1-00. வெளிநாடு வருட சந்தா ரூ. 20-00

அந்தர்யோக விவரங்கள்

கோவை ஜில்லா—திருப்பூர் அங்கேரி பாளையத்தில் 23—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: *திருவருள் நிலையம் (A. V. P. தோட்டம்)*

நேரம்: *காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை*

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலம் ஜில்லா—மேச்சேரியில் 23—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: *சன்மார்க்க சங்கக்கட்டடம்*

நேரம்: *காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை*

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

மதுரை—ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிரார்த்தனாலயத்தில் 23—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: *பங்கஜம் காலனி ("தினமணி" பேப்பர்-பஸ் ஸ்டாப்)*

நேரம்: *காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை*

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—செட்டிமேடு 23—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: *டோனாவூர்*

நேரம்: *காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை*

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நிர்வாணந்தர்

மதுரை ஜில்லா—சுருளியில் 2—10—79 செவ்வாய்க்கிழமை

இடம்: *சுருளித்தீர்த்தம்*

நேரம்: *காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை*

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலத்தில் 7—10—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: *ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனை கொட்டகை*

நேரம்: *காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை*

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: *நேரில் ரூ. 1-50 செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்*

கன்னியாகுமரி ஜில்லா—நாகர்கோவிலில் 7—10—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: *தேசிய விநாயகர் உயர்நிலைப்பள்ளி*

நேரம்: *காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை*

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

பெங்களூரில் 14—10—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: *கன்டோன்மென்ட் அஜந்தா டாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம்*

நேரம்: *காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை*

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—கம்பத்தில் 14—10—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: *ஸ்ரீ முத்தையாபிள்ளை ஞாபகார்த்த உயர்நிலைப்பள்ளி*

நேரம்: *காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை*

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணிக்குத் தொகை சுமார் ஆறு இலட்சம் ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆச்ரம கட்டடவேலை பெரும்பாலும் பூர்த்தியாகிவிட்டது. வெள்ளையடித்தல், பெயிண்ட் பூசுதல், தண்ணீர் குழாய்கள் பொருத்துதல், மின்சார விளக்குகள் போடுதல் போன்ற சில்லரை வேலைகள் நடைபெற்றுக்கொண்டுள்ளன. ஆச்ரம நிர்வாகிகள் இப்பொழுது அதில் வசித்துக்கொண்டு ஸ்தாபன கட்டட நிர்வாக வேலைகளை கவனித்து வருகிறார்கள். ஆச்ரமம் அமைப்பதற்கு இரண்டு லக்ஷம் ரூபாய் செலவாகியுள்ளது. ரோடு மாற்றி அமைப்பதற்கு வேண்டிய அனுமதி அரசாங்கத்திடமிருந்து வந்துள்ளது. அதற்குத் தேவையாயுள்ள 2500 சதுர அடி விஸ்தீர்ணத்துக்கு பக்கத்திலுள்ள எட்டு குடியிருப்பு வீடுகளை இடித்து வாங்குவதற்கு ரூபாய் அறுபதாயிரம் செலவாகியிருக்கிறது. அடுத்தபடி தபோவனத்தின் செலவில் சுமார் 300 அடி நீளத்துக்கு முனிஸிபாலிடிக்குரிய சாலையை மாற்றி அமைத்துத்தரவேண்டும். அதன் பிறகு கோவிலை இடித்து புதுக்கட்டட வேலை துவக்கப்பெறும்.

1979 ஆகஸ்ட் மாத நன்கொடை விவரம்

தேதி	விலாசம்			ரூபாய்
	ஜூலை மாதம் முடிய நன்கொடை வசூல்			3 64 454
2-8-79	ஸ்ரீ J. S. நடராஜ கவுடர்	உ. அம்மாபட்டி, உத்தமபாளையம்		107
7-8-79	ஸ்ரீ S. திருப்பதி ரெட்டியார்	காரணி கிராமம், சித்தூர், ஆந்திர பிரதேசம்		111
9-8-79	ஸ்ரீ M. வீரப்பன்	மத்திய சிறை மருத்துவமனை, கோவை		101
10-8-79	ஸ்ரீ N. S. ஷண்முகம்	ஸ்டார் ஸ்டுடியோ, நாகர்கோயில்		101
11-8-79	ஸ்ரீ P. M. R. வேலப்ப நாடார் & சன்ஸ்,	தளவாய்புரம், இராமநாதபுரம்		101
15-8-79	ஸ்ரீ A. நிரஞ்சன் சங்கர்	மதுரை		1 000
18-8-79	ஸ்ரீமதி N. அண்ணுமலையம்மாள்	ஸ்ரீ சாரதா கல்லூரி ரோடு, சேலம்		180
21-8-79	ஸ்ரீ P. நல்லசாமி கவுண்டர்	பெத்தங்கோட்டை, நாகம்பள்ளி, கரூர்		100
22-8-79	ஸ்ரீ S. பழனிச்சாமி கவுண்டர்	மன்னூர் காட்டுக்களம், பொள்ளாச்சி		101
25-8-79	M/s. தி ஓரியண்ட் லித்தோ பிரஸ்	முண்டக நாடார் தெரு, சிவகாசி		1 000
	ஸ்ரீ S. துரைராஜ்		,,	600
	M/s. லார்டு மேட்ச் இண்டஸ்டிரீஸ்		,,	500
	M/s. லவ்லி ஆப்செட் பிரிண்டர்ஸ்	வடக்கு ரதவீதி	,,	500
	ஸ்ரீ S. S. சங்கரலிங்கம், சுந்தரவேலு மேட்ச் இண்டஸ்டிரீஸ்		,,	500
	ஸ்ரீ V. K. சந்திரசேகர செட்டியார் & சன்ஸ்	செவ்வாய்ப்பேட்டை, சேலம்		251
	ஸ்ரீ K. A.P.A. பாலகிருஷ்ண	பாலகிருஷ்ண லாட்ஜ், சிவகாசி		250
	சிவகாசி இந்து நாடார்கள் உறவின்முறை மகமை பண்டு		,,	250
	M/s. தி காரனேஷன் மேட்ச் ஒர்க்ஸ்		,,	250
	M/s. பெர்கோ பிக்ஸர் பேலஸ்		,,	250
	M/s. K. S. S. பெரியகருப்பநாடார் & பிரதர்ஸ்		,,	250
	ஸ்ரீ S. S. A. சங்கர தியாகராஜன்		,,	250
	ஸ்ரீ R. விவேகானந்தன்	ஸ்ரீனிவாஸ் பைன் ஆர்ட்ஸ்	,,	206
	ஸ்ரீ S. சந்திரசேகர்	சார்டர்ட் அக்கவுண்டெண்ட்	,,	156
	ஸ்ரீ K. ரவீந்திரன்	மேற்கு ரதவீதி	,,	101
	ஸ்ரீமதி A. K. R. ரஞ்சிதம் அம்மாள்	திருமங்கலம்		100

28-8-79	சிவகாசி சிதம்பரம் ஞானகிரி எஜுகேஷனல் அசோசியேஷன்,	சிவகாசி	1 000
29-8-79	ஸ்ரீமதி M. ராஜாம்பாள் அம்மாள்	குமரகோவில் தெரு, திருவண்ணமலை	501
30-8-79	ஸ்ரீமதி R. ஜெயம்மாள்	G-A ரோடு, சென்னை.21	250
	ஸ்ரீ T. S. தண்டபாணி செட்டியார்	R. K. வித்யாலயா, கோவை	153
	ஸ்ரீ D. சுந்தரம்	லாடக்காரத் தெரு, செவ்வாய்பேட்டை	101
31-8-79	ஸ்ரீ M. V. R. வெங்கட்ராமன் செட்டி	பெரியகடைவீதி, இராமநாதபுரம்	1 008
	ஸ்ரீ R. திருப்பதி செட்டியார்&பிரதர்ஸ்	ரைஸ்மில், பட்டுக்கோட்டை	501
	ஸ்ரீ M. சிதம்பரம் செட்டியார்	சித்திவிநாயகர், புதுக்கோட்டை	501
	ஸ்ரீ T. M. முத்துசாமிபிள்ளை	பெரியகடைவீதி, திருச்சி	500
	ஸ்ரீ P. வெங்கடேசன் செட்டியார்	அழகன் குளம், இராமநாதபுரம்	251
	ஸ்ரீ P. R. M. ரெத்தினம் செட்டியார்	ஆலங்குடி, புதுக்கோட்டை	250
	ஸ்ரீ M. M. முருகன் செட்டியார்	மெயின்ரோடு ,, ,,	250
	ஸ்ரீ M. R. நடனம் செட்டியார்	ஆலங்குடி, புதுக்கோட்டை	201
	ஸ்ரீ T. R. M. திருப்பதி ரைஸ்மில்	,, ,,	201
	ஸ்ரீ K. சுப்பராயன் & K. ராஜமாணிக்கம்	ஆலங்குடி புதுக்கோட்டை	201
	ஸ்ரீ M. R. சோலையப்பன்	தங்கமாளிகை, தெற்கு ராஜவீதி ,,	201
	ஸ்ரீமதி N. T. ஞானம்பாள் திருநாவுக்கரசு செட்டியார்	திருச்சி	200
	ஸ்ரீ வடிவேலர் & கோ	ரைஸ்மில், பட்டுக்கோட்டை	151
	ஸ்ரீ K. M. சுப்பையா செட்டியார்	நாடிமுத்து நகர் ,,	151
	ஸ்ரீ S. ஸ்ரீநிவாசன் M. S.	தெற்கு 4வது தெரு, புதுக்கோட்டை	151
	ஸ்ரீ P. A. கோவிந்தசாமி செட்டியார்,	அரிசி வியாபாரம், பட்டுக்கோட்டை	101
	ஸ்ரீ A. N. நடனசபாபதி செட்டியார்	அட்வகேட், பட்டுக்கோட்டை	101
	ஸ்ரீ M. பழனியப்ப செட்டியார் ரைஸ்மில்	ஆலங்குடி, புதுக்கோட்டை	101
	ஸ்ரீ R. R. M. A. மணி செட்டியார் & பிரதர்ஸ்	,, ,,	101
	ஸ்ரீ S. லெக்ஷ்மணன்	ராசி ஜுவல்லரி, புதுக்கோட்டை	101
	ஸ்ரீ வயி. ஷண்முகம்பிள்ளை,	ஜுவல்லரி, பெரியகடைவீதி ,,	101
31-8-79	ஸ்ரீ S. சுயம்பிரகாசம்	அட்வகேட், ஆலங்குடி ரோடு, புதுக்கோட்டை	101
	ஸ்ரீ K. S. கருப்பையா தேவர்	ஆவணம், தஞ்சை	101
	ஸ்ரீ C. நாகரத்தினம்	நாயக்கமார் தெரு, விருதுநகர்	100
	ஸ்ரீ P. M. S. N. கனகசபாபதி நாடார் & சன்ஸ்,	விருதுநகர்	100
	ஸ்ரீமதி P. சரஸ்வதியம்மாள்	தெ. சி. கிட்டங்கி தெரு, ,,	100
	ஸ்ரீ S. V. S. ரத்தினவதி சிவசாமி நாடார்,	SV.P N.S. தெரு, ,,	100
	ஸ்ரீ T. C. J. ஜெகதாம்பாள்	ஆலத்துடையான்பட்டி, திருச்சி	100
	ஸ்ரீ U. கஸ்தூரி உலகநாதன் செட்டியார்	நடுகுஜிலித் தெரு, ,,	100
	Dr. செந்தூரம்மாள் துளசிராமன்	அருப்புக்கோட்டை	100
	ஸ்ரீ K. முத்துசாமி கவுண்டர்	விசாங்காடு, சேலம்	100
	ஸ்ரீமதி S. T. A. கோசலையம்மாள் அருணசல நாடார்	சிவகாசி	100
	ஸ்ரீமதி உமா சுரேந்திரன்	கார்னேசன் காலனி, ,,	100
	ஸ்ரீ P. S. குமாரசுவாமி முதலியார்	பொழிச்சலூர், சென்னை	100
	ரூ. 100க்கு கீழ்வந்த நன்கொடைகள்		1 456
		ஆகக் கூடுதல்	3 81 85 7

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 28 | சித்தார்த்தி ௵ புரட்டாசி ௴ | ஆரம் 9

பிரார்த்தனை

यादेवी सर्वभूतेषु बुद्धिरूपेण संस्थिता ।
नमस्तस्यै, नमस्तस्यै, नमस्तस्यै नमो नमः ॥

— श्री देवीमाहात्म्यम्

யாதேவீ சர்வபூதேஷு புத்திரூபேண சம்ஸ்திதா ।
நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை நமோ நம: ||

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களிடத்தும் புத்தி வடிவில் உறைகின்ருளோ அவளுக்கு வணக்கம், வணக்கம், வணக்கம்.

— ஸ்ரீ தேவீ மாஹாத்மியம்

தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல் எவ்விடத்தும்
நீயிருந்தும் நான் தளர்ந்து நின்றேன் பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

மனிதன் இவ்வுலகில் வழிப்போக்கனாக வந்திருக்கிறான்.

தோல்வியுறுங்கால் முயற்சியைப் பலப்படுத்தவேண்டும்.

மனிதன் யாண்டும் ஒரு ஞான விளக்காகத் திகழ்வானாக.

அறிவு ஓங்குதற்கேற்ப அநித்தியப் பொருள்களில் ஆசை குறைகிறது.

நிலையற்றதை ஒதுக்கிவிட்டு நிலையுற்றதை உறுதியாகப் பிடித்துக்கொள்.

தெய்விகத்தைச் சார்ந்திருப்பதற்கேற்ப மானுட வல்லமை மேலோங்குகிறது.

எந்திர பலத்தை அதிகப்படுத்துவதற்கேற்ப மானுட ஆற்றல் குன்றிப்போம்.

செய்தகுற்றத்துக்கு உள்ளூர வருந்துபவன் அக்குற்றத்தைத் திருத்தியவனாகின்றான்.

இயற்கையின் நடைமுறையே இறைவனுடைய வல்லமைக்கு எடுத்துக்காட்டு ஆகிறது.

உள்ளம் உடலை நடாத்துகிறது. அங்ஙனம் சான்றோர் சமுதாயத்தை நடாத்துகின்றனர்.

அமைதியாக இறைவனோடு இணக்கம் பூணுபவன் ஆடம்பரமான பேச்சுக்களை ஒதுக்குகிறான்.

மதமாற்றம் செய்பவன் மேலோன் ஆகான். மனம் திருந்தியமைபவன் மேலோன் ஆகிறான்.

நல்ல எண்ணமும், நல்ல செயலும் மனிதனுடைய உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்றன.

திருவருள் திட்டத்தை மானுட திட்டம் மாற்றமாட்டாது. அதை அவன் சிந்தித்துப் பார்ப்பானாக.

பூவின் மணம் காற்றை எதிர்த்துப் போவதில்லை. ஆனால் நல்லானுடைய நலன் எதையும் எதிர்த்து மேலோங்குகிறது.

நீரைப் பின்பக்கம் தள்ளுவதால் மனிதன் நீந்திமுன்னேறுகிறான். அங்ஙனம் தேவையற்றதை ஒதுக்கித் தள்ளுவதால் மனிதன் மேன்மையுறுகிறான்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் மகேந்திரரோடு உரையாடுகிறார்.

மகேந்திரர் : " ஐயனே, தாங்கள் அப்படியே செய்யலாம். எங்கள் பள்ளிக்கூடத்தைப் பார்வையிடுவதற்குச் சிலர் இடையிடையே வருகிறார்கள். அது ஐதிகமாக இருக்கையில் தாங்களும் தாராளமாக வரலாம் "

இப்பொழுது பரமஹம்சதேவருடைய மனது ஆழ்ந்து அந்தர்முகத்தில் மூழ்கியிருந்தது. மகேந்திரரும், கோபாலும் தங்களுடைய இரவு போஜனத்தை முடித்துக்கொண்டார்கள். அதன் பிறகு மகேந்திரர் மறுபடியும் பரமஹம்ச தேவருக்கு அருகில் வந்து தரையின்மீது அமர்ந்துகொண்டார். அப்பொழுது தாங்களிருவரும் வாத்திய மண்டபத்தில் படுத்துறங்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்தார்கள்.

பரமஹம்சதேவர் : (மகேந்திரருடன்) "வாத்திய மண்டபத்தில் ஒருவேளை பாத்திரங்கள், பண்டங்கள் வைக்கப்பட்டிருக்கலாம். இந்த அறையினுள்ளே நீங்கள் ஏன் உறங்கலாகாது?"

மகேந்திரர்: "அப்படியே செய்கிறோம் ஐயா."

அப்பொழுது இரவு மணி சுமார் பதினொன்று இருக்கும். ஒரு தலையணை மீது சாய்ந்துகொண்டு தமது சிறிய கட்டிலின்மீது பரமஹம்சதேவர் அமர்ந்திருந்தார். மகேந்திரர் தரையின் மீது அமர்ந்துகொண்டார். அவரோடு பரமஹம்சதேவர் உரையாடிக்கொண்டிருந்தார். சுவருக்கருகில் ஒரு தீபக் கம்பத்தின் மீது தீபம் எரிந்துகொண்டிருந்தது. பக்தர்கள்மீது பரமஹம்சதேவர் பெரும் கருணை வைத்திருந்தார். குருமூர்த்திக்குக் குற்றேவல்கள் புரிவது சிஷ்யன் ஒருவனுக்கு வாய்க்கும் பெரிய பேறு ஆகும். அதை மகேந்திரருக்கு வழங்கக் குருதேவர் திருவுளம் கொண்டார்.

பரமஹம்சதேவர் : " என் பாதங்கள் அரிக்கின்றன. மிருதுவாக அவைகளைத் தடவிக் கொடுப்பாயாக".

அருகிலிருந்த சிறிய கட்டிலின் மீது மகேந்திரர் அமர்ந்துகொண்டார். பிறகு பரமஹம்சதேவருடைய பாதங்களைபற்றி எடுத்துத் தமது மடியின்மீது வைத்துக்கொண்டார். நிதானமாக அவர் அவைகளை அமுக்கிக்கொண்டிருந்தார். இடையிடையே ஏதேனும் கேள்வி ஒன்றைப் பரமஹம்சதேவர் சிஷ்யனிடம் கேட்கலாயினர்.

பரமஹம்சதேவர் : (புன்னகை பூத்தவராய்) " இன்று நிகழ்ந்த சம்பாஷணையைப் பற்றி நீ கருதுவது யாது ?"

மகேந்திரர் : " ஐயனே அதை நான் மிகவும் பாராட்டுகிறேன். "

பரமஹம்சதேவர் : (புன்னகை பூத்தவராக) " அக்பர் சக்கரவர்த்தியைப் பற்றிய பேச்சு எப்படி இருந்தது ?"

மகேந்திரர்: "ஐயனே அதுமிகவும் பொருத்தமானது"

பரமஹம்சதேவர் : "அதை எடுத்து இயம்பு பார்ப்போம்."

மகேந்திரர் : " அக்பரைக் காணுதல் பொருட்டுச் சாது ஒருவர் வந்தார். அவ்வேளையில் அக்பர் சக்கரவர்த்தி பிரார்த்தனை பண்ணிக்கொண்டிருந்தார். தமக்குச் செல்வத்தையும், உடைமைகளையும் கொடுத்து உதவும்படி கடவுளிடம் அவர் பிரார்த்தனை பண்ணிக்கொண்டிருந்தார். அதைப் பார்த்த சாது அமைதியாக எழுந்து அறையை விட்டு வெளியே போக எத்தனித்தார். வந்திருந்த விஷயத்தை எடுத்து இயம்பாது அந்தச் சாதுவானவர் ஏன் வெளியேக வேண்டும் என்று சக்கரவர்த்தி வினவினார். அதற்குச் சாது விடுத்த விடையாவது. "வேந்தே, தம்மிடமிருந்து கொஞ்சம் பொருளுதவி பெற்றுப்போக வேண்டுமென்று அடியேன் இங்கு வந்தேன். சக்கரவர்த்தியாகிய தாமே தெய்வத்திடமிருந்து செல்வத்தை யாசிப்பதை நான் கவனித்தேன். யாசிப்பது எனக்கு அவசியமென்றால் அதை வள்ளலாகிய பரம்பொருளிடத்தே கேட்டுக்கொள்ளலாமே. அதற்குப் பதிலாக மற்றொரு யாசகனிடத்து நான் ஏன் யாசகம் பண்ணவேண்டும் என்று கருதினேன். "

பரமஹம்சதேவர் : "மேலும் நாம் பேசிக்கொண்டிருந்தது யாது ?"

மகேந்திரர் : "எதிர்காலத்துக்காகப்பொருள் சேமித்து வைப்பதைப் பற்றித் தாம் விரிவாக எடுத்து விளக்கினீர்கள்."

பரமஹம்சதேவர் : (புன்னகை பூத்தவராக) "நான் இயம்பியது யாது ?"

மகேந்திரர் : "தன் தேவைகளைப் பூர்த்தி பண்ண வேண்டுமென்ற எண்ணம் ஒரு மனிதனிடத்து இருக்குமாகில் அந்த எண்ணத்தை நிறைவேற்ற அவன் பெருமுயற்சி எடுக்கவேண்டும். 'சிந்தி' என்னும் பட்டணப்பகுதியில் நான் குடியிருந்தபொழுது இக்கோட்பாட்டைத் தாம் தெளிவுற இயம்பினீர்கள்."

பரமஹம்சதேவர்: "நான் பகர்ந்ததுயாது?"

மகேந்திரர்: "யாரொருவன் முற்றிலும் தெய்வத்தையே சார்ந்திருக்கிருனே அத்தகையவனுடைய பொறுப்புக்கள் அனைத்தையும் தம்முடையவைகளாகத் தெய்வம் எடுத்துக்கொள்ளுகிருர். அது இன்னும் வயது முதிராத இளைஞன் ஒருவனுடைய சொத்தைக் காப்பாற்றும் பொறுப்பை காப்பாளன் ஒருவன் எடுத்துக் கொள்வதற்கு நிகர். மற்றும் ஓர் உபமானத்தை நீங்கள் பகர்ந்தீர்கள். விருந்து உண்ண வந்த கூட்டத்தில் சிறுவன் ஒருவன் தனக்காகவென்று இடந்தேடிப் பிடித்துக்கொள்ள இயலாதவனய்த் திண்டாடுகிருன். அப்பொழுது அவனுக்குப் பொருத்தமான இடம் ஒன்றைக் கண்டுபிடித்து அவனை அமரப்பண்ண யாராவது ஒருவர் முன்வருகின்றனர்."

பரமஹம்சதேவர் : "இல்லை. நீ பகருவது பொருத்தமானதன்று. குழந்தையின் கையைத் தந்தை பிடித்துக்கொண்டு நடந்து சென்ருல் அக்குழந்தை கீழே வீழ்வதில்லை என்று நான் இயம்பினேன்."

மகேந்திரர் : "மூன்றுவிதமான பாங்குகளை உடைய சாதுக்களைப் பற்றியும் தாங்கள் எடுத்து விளக்கினீர்கள். தலைத்தரமான சாது ஒருவன் தனக்குத்தேவையாயிருக்கும் உணவை நாடி இங்குமங்கும் போவதில்லை. அவன் ஒரே இடத்தில் வசித்திருக்கிருன். அவன் இருக்கும் இடத்தை நாடி உணவுகொண்டு வரப்படுகிறது. உலக வியவகாரம் அறியாதிருந்த வாலிபச் சாது ஒருவரைப்பற்றியும் தாங்கள் எடுத்து உரைத்தீர்கள். பிக்ஷையை நாடிச் சென்ற அந்த இளம் சாது மாது ஒருத்தியின் மார்பு ஏன் வீங்கியிருக்கிறது என்று கேட்டார். அது வீக்கம் அன்று, ஸ்தனபாரம் என்று அவருக்கு விளக்கப்பட்டது. இனி பிறப்பெடுக்கும் குழந்தைக்கு முற்கூட்டியே பால் ஊட்டுவதற்கான ஏற்பாட்டை இயற்கைத் தாய் அதன் மூலம் செய்து வைத்திருக்கிருள் என்னும் விஷயம் உலக நடைமுறையை அறியாத அந்த இளம் துறவிக்கு எடுத்து இயம்பப்பட்டது. அப்படியானல் பரமன் எனக்கும் முற்கூட்டியே உணவுக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து வைத்திருக்கிருர். அதை நாடி நான் அலைந்து திரிய வேண்டியதில்லை என்று சாது கூறினர். இவை போன்ற இன்னும் சில அரிய பெரிய விஷயங்களை தாம் நிகழ்த்திய சம்பாஷணையில் எடுத்துச் சொன்னீர்கள்."

பரமஹம்சதேவர் : (புன்னகை பூத்தவராக) "மேலும்நான் எதை மொழிந்தேன்."

மகேந்திரர் : "பம்பாசரசிலிருந்த காக்கையைப் பற்றித் தாங்கள் எடுத்துக் கூறினீர்கள். அல்லும் பகலும் அக்காக்கையானது ராம நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தது. ஆதலால்தான் தடாகக் கரையோரத்துக்குச் சென்றிருந்த போதிலும் நீர் அருந்த அக்காக்கைக்கு இயலவில்லை. மற்றும் ஓர் விஷயத்தைத் தாங்கள் தெரிவித்தீர்கள். சாது ஒருவர் புஸ்தகம் ஒன்று வைத்திருந்தார். அப்புஸ்தகத்தில் ஓம் ராம் என்னும் மந்த்ரம் ஒன்று மட்டும் ஒவ்வொரு பக்கத்திலும் பொறிக்கப்பட்டிருந்தது. பின்பு ராமனிடம் ஹனுமான் பகர்ந்த விஷயத்தையும் தாங்கள் எடுத்துச் சொன்னீர்கள்."

பரமஹம்சதேவர் : "ராமனிடம் ஆஞ்சனேயன் பகர்ந்தது யாது ?"

மகேந்திரநாதர் : (அனுமான் இராமனிடம் இயம்பியதாவது :) "இலங்கையில் நான் சீதையைக் கண்டேன். ஆனல் சீதா பிராட்டியாரின் சரீரம் மட்டும் ஆங்கு இருந்தது. அவளுடைய உள்ளமும், உயிரும் உன் திருவடிகளில் நாட்டப் பெற்றவைகளாக இருந்தன.

சாதக பட்சியைப் பற்றிய பேச்சும் வந்தது. அப்பறவையானது மழை நீரைத் தவிர வேறு எந்த நீரையும் பருகாது. அதே போக்கில் ஞான யோகத்தைப் பற்றியும், பக்தி யோகத்தைப் பற்றியும் பேச்சுக்கள் நிகழ்ந்தன."

பரமஹம்சதேவர் : "அவைகளைப் பற்றி நான் இயம்பியது யாது ?"

மகேந்திரர் : "ஜாடியைப் பற்றிய எண்ணம் எவ்வளவு காலத்துக்கு இருக்கிறதோ அவ்வளவு காலத்துக்கு அகங்காரமும் நிலைத்திருக்கும். சாதகன் ஒருவனிடம் 'நான்' என்னும் உணர்வு எவ்வளவு காலத்திற்கு நீடித்திருக்குமோ அவ்வளவு காலத்துக்கு 'நான் பக்தன்' இறைவா, நீ என் தலைவன் என்னும் எண்ணமும் நிலைத்திருக்கும்."

பரமஹம்சதேவர் : "இல்லை. அப்படியன்று. ஜாடி மறைந்து போவதில்லை. அதைப்பற்றிய உணர்வு ஒருவனிடம் இருக்கிறது அல்லது இல்லாது மறைந்துபட்டுப்போகிறது. 'நான்' என்னும் எண்ணத்தை ஒருவன் ஒழித்து விட முடியாது. ஆயிரம் தடவை ஒருவன் விசாரித்துப் பார்க்கலாம். ஆயினும் அந்த எண்ணம் அவனை விட்டகலாது."

மகேந்திரர் சிறிது நேரம் மௌனமுற்றிருந்தார்.

மகேந்திரர் : "தாங்கள் காளி கோயிலில் ஈசான முகர்ஜியுடன் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தீர்கள். அப்பொழுது நாங்கள் ஆங்கு இருந்ததினால் இதைக் கேட்கும் பாக்யம் எங்களுக்கு வாய்த்தது."

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக) : "ஆம் அப்படித்தான். அப்பொழுது நான் இயம்பியது யாது ? அதை எடுத்துச் சொல் ?"

மஹேந்திரர் : "பணிவிடை பண்ணுவது வெறும் முதல் படியே என்று தாங்கள் எடுத்து இயம்பினீர்கள். சம்புமல்லிக்கரிடம் தாங்கள் பகர்ந்ததையும் எங்களுக்கு எடுத்துச் சொன்னீர்கள். தாங்கள் அவரிடம் சொல்லியதாவது: 'உம் எதிரே கடவுள் தோன்றி காட்சிதருகிறார் என்று வைத்துக்கொள்ளும். அப்பொழுது தாம் கடவுளைப் பார்த்துப் பல ஆஸ்பத்திரிகள் கட்டுதற்கும், வைத்தியசாலைகள் அமைப்பதற்கும் அனுமதி தாருங்கள் என்று கேட்பீரா ?

"தாங்கள் மற்றும் ஒரு விஷயத்தை எடுத்துச் சொன்னீர்கள், மானுடன் ஒருவன் தான் புரிகிற பணிவிடைகளில் பற்றுதல் வைத்திருக்கும் பரியந்தம் தமது காட்சியைக் கடவுள் அன்னவனுக்குக் காட்டித்தருவதில்லை. கேசவ சந்திரசேனரிடம் இதைத் தாங்கள் எடுத்து இயம்பினீர்கள்."

பரமஹம்சதேவர்: "நான் சொன்னது யாது?"

மகேந்திரநாதர் : "குழந்தையொன்று பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுகிறது. அவ்வேளையில் அதன் தாய் சமைப்பது போன்ற வீட்டுக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் அக் குழந்தையோ பொம்மைகளைத் தூர எறிந்து விட்டு 'கோ'வெனக் கதறி அழுகிறது. அவ் வேளையில் தாய் சாதத்தின் கஞ்சியை வடித்துக் கொண்டிருக்கிறாள். அப்பாண்டத்தை அடுப்புக் கரையிலேயே போட்டு வைத்துவிட்டுக் குழந்தையைக் கவனிக்க ஓடிவருகிறாள்.

அன்று மற்றொரு விஷயத்தைத் தாங்கள் எடுத்து இயம்பினீர்கள். மானுடனொருவன் கடவுளை எங்கே காணக்கூடும் என்று ராமனிடம் இலக்ஷ்மணன் கேட்டான். ராமன் இளையவனுக்குச் சொன்னதாவது : 'தம்பீ, யார் ஒருவனிடம் பரவச பக்தி ஏராளமாக நிறைந்திருக்கிறதோ அம்மனிதனிடம் நான் வசித்திருக்கிறேன். அது எப்படிப்பட்ட பக்தி என்றால் அதன் மேலீட்டால் அவன் சிரிக்கவும் அழவும் ஆடவும் பாடவும் செய்கிறான். என்னுடைய சாந்நித்யமே கடவுள் காட்சியாகிறது."

பரமஹம்சதேவர் : "ஆ! அது தான் உண்மை. ஆ! அது தான் உண்மை.".

இப்பொழுது பரமஹம்சதேவர் சில நிமிஷங்கள் மௌனமுற்றிருக்கிறார்.

மகேந்திரர் : "அன்று தாங்கள் ஈசானரிடம் தியாகத்தைப்பற்றிப் பேசிய பேச்சு எங்களில் பலர்க்கு விவேகத்தை ஊட்டியது. அன்று மற்றொரு விஷயத்தைத் தாங்கள் எடுத்து இயம்பினீர்கள். 'ராவணன் இலங்கையில் மடிந்து போனான். அவனுடைய அழிவைக் குறித்துப் பெருளன் கதறிப் பதறி அழுதான்."

இதைக் கேட்ட பரமஹம்சதேவர் கொல்லென்று உரக்கச் சிரித்தார்.

மகேந்திரர் (பணிவுடன்) : "ஐயனே சிக்கல்கள் பல புதைந்துள்ள கடமைகளை ஒருவன் குறைத்து வருவது அவசியமல்லவா?"

பரமஹம்சதேவர் : "ஆம். ஆனால் சாது ஒருவரையோ ஏழை ஒருவனையோ சந்திக்க நேர்ந்தால் ஊக்கத்தோடு அவர்களுக்குப் பணிவிடை பண்ணவேண்டும்.

மலைவளர் காதலி

(தாயுமானவர் இயற்றியது)

பாகமோ பெறஉனைப் பாடஅறி யேன்மல
பரிபாகம் வரவும் மனதில்
பண்புமோ சற்றுமிலை நியமமோ செய்திடப்
பாவியேன் பாபரூப
தேகமோ திடமில்லை ஞானமோ கனவிலுஞ்
சிந்தியேன் பேரின்பமோ
சேரஎன் றுற்கள்ள மனதுமோ மெத்தவுஞ்
சிந்திக்கு தென்செய்குவேன்
போகமோ மதமோ குரோதமோ லோபமோ
முற்றுமாற் சரியமோதான்
முறியிட்டெனைக்கொள்ளும் நிதியமோதேடஎனின்
மூகவரி வண்டுபோல
மாகமோ டவும்வல்லன் எனையாள வல்லையோ
வளமருவு தேவை அரசே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண்உமையே.

மானுடனொருவனுக்குத் தெய்விகப் பேராற்றல் ஏதேனும் வாய்க்குமானல் அதைக் கடவுள் வழிபாட்டுக்கென்றே அவன் பயன்படுத்த வேண்டும். அத்தகைய பேராற்றல்களுள் பரம்பொருளைக் குறித்துப் பக்தி பூர்வமாக பொருள் செறிந்த கருத்தை இனிய சொற்களைக்கொண்டு பாடுவது நல்ல வழிபாடு ஆகும். அத்தகைய வாய்ப்புத் தமக்கு அமையவில்லையென்று தாயுமான சுவாமிகள் 'பாகமோ பெறவுனைப் பாட அறியேன், என்ற சொற்றொடர் மூலம் தெரிவிக்கிறார். இதில் பாகம் பெற என்னும் சொல் தொடர் பொருள்சுவையும், சொற்சுவையும் பொதிந்திருக்கவேண்டும் என்னும் கருத்து அமைந்திருக்கிறது. ஜீவாத்மன் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவைகளில் கட்டுண்டவனாக இருக்கிறான். இம்மலங்களை ஒதுக்குதல் பொருட்டே அவன் ஆத்மசாதகன் ஆகிறான். அவனுக்கு இன்றியமையாத மனதானது சீர்மையே வடிவெடுத்திருத்தல் வேண்டும். அத்தகைய பாங்கு தமக்கு அமையவில்லை என்னும் கருத்தை 'மலபரிபாகம் வரவும் மனதில் பண்புமோ சற்றுமிலை' என்று அவர் முறையிடுகின்றார்.

யோகத்தில் எட்டு அங்கங்கள் இருக்கின்றன. ஆகையினால் அது அஷ்டாங்க யோகம் என அழைக்கப்படுகிறது. இந்த எட்டு அங்கங்களுள் யமம், நியமம் ஆகிய இரண்டும் மிக முக்கியமானவைகள். வீடு கட்டுவதற்கு அஸ்திவாரம் எங்ஙனம் இன்றியமையாததாக இருக்கிறதோ அங்ஙனம் யமமும், நியமமும் ஆத்மசாதனத்திற்கு முற்றிலும் அவசியமானவைகளாகின்றன. கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பொறிவழி செல்லாமை, பொருள் மிகப்படையாமை ஆகிய ஐந்தும் யமத்துக்குரியவைகளாகின்றன. பிறகு தூய்மை, ஆழ்ந்த மன இனிமை, நூல் ஆராய்ச்சி, தவம், ஆத்ம சமர்ப்பணம் ஆகிய ஐந்தும் கூடி நியமம் எனப்படுகின்றன. மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களையும் தூய்மையாக வைத்திருப்பது சௌசம். மனத்தில் வியாகூலம் தோன்றலாகாது; வரம்புகடந்து களி கொள்ளுதலும் பொருந்தாது. மனம் எப்பொழுதும் இனிமையோடு கூடிய உற்சாகமும், சாந்தமும் உடைத்திருக்க வேண்டும். அத்தகைய மனநிலைக்குச் சந்தோஷம் என்று பெயர். பாரமார்த்திக விஷயங்களைப் புகட்டும் நூல்களைச் சிரத்தையோடு கற்றறிவது சுவாத்யாயம் ஆகிறது. மானுட வாழ்க்கையைப் பாரமார்த்திகப் பெருநெறிக்கென்றே பயன்படுத்துவது தபசு. ஈசுவர விசுவாசம் வைத்து ஈசுவரப் பிரீதிக்காக அவரிடம் ஆத்மசாதகன் ஒருவன் தனது வாழ்வை ஒப்படைப்பது ஆத்ம சமர்ப்பணம். இவ்வைந்தும் ஒழுங்காக அமையப்பெற்றிருப்பவன் நியமத்திலேயே நிலைத்திருப்பவனாகிறான். நல்லொழுக்கத்தில் நிலைபெற்றிருப்பதற்கு உடல் திட்பம் முற்றிலும் தேவையாகிறது. வலிவற்றவனே மனம்போன போக்கில் எல்லாம் போய்ப்பாபம் புரிகிறான். அப்படி நெறி வழுவுவது ஆத்ம சாதகனுக்கு ஒவ்வாது. இக்கோட்பாட்டை 'நியமமோ செய்திடப் பாவியேன் பாபரூப தேகமோ திடமில்லை' என அவர் முறையிடுகின்றார். நூல்பல கற்கின்றவன் பண்டிதனாகலாம். ஆனால் அவனை ஞானி எனலாகாது. கடவுள் ஒருவரே மெய்ப்பொருள் என யுக்தி பூர்வமாக அறிந்துகொள்கின்றவன் ஞான மார்க்கத்தில் பிரவேசிக்கின்றான். பிறகு உலகம்

முழுதையும் பரம் பொருள் சொரூபமாக அனுபூதியில் அறிந்துகொள்பவனே ஞானி யாகின்றான். இப்படி ஞானியாவதற்கு உரிய கோட்பாடுகளைக் கேள்வியளவிலாவது தெரிந்து கொள்கிறவர்கள் மிகச் சிலரே. கேட்டதை சிந்தித்துப் பார்ப்பவர்கள் அவர்களிலும் சிலரே. இத்தகைய அரிய நிலையை 'ஞானமோ கனவிலும் சிந்தியேன்' என்று அண்ணல் விமரிசனம் பண்ணுகிறார்.

நெறியில் ஒழுங்காகச் செல்லுபவர்களே குறியைச் சென்றடைகின்றனர். நெறியில் நிலைநிற்பதற்கேற்ப இன்பம் பேரின்பமாக மாறுகிறது. உணவை ஏற்பதற்கேற்பப் பசி அடங்குகிறது. நன்னெறியில் நிலைத்திருப்பதற்கேற்பப் பேரின்பம் சுரக்கிறது. நன்னெறியில் நிலைநிற்கக் கபட மனது மறுதளிக்கிறது. இம்மேலாம் கோட்பாட்டை 'பேரின்பமோ சேரவென்றால் கள்ள மனதுமோ மெத்தவும் சிந்திக்குது, என் செய்குவேன் ?' என ஆரம்ப சாதகன் நிலையில் தம்மை வைத்துக்கொண்டு தாயுமானவர் இயம்புகின்றார். ஏதேனும் ஒரு பொருளில் பொருத்தமற்ற பற்றுதல்வந்தால்அது மோகம் எனப்படுகிறது. மாரீச மானிடத்துச் சீதைக்குவந்த பற்றுதலை மோகம் எனலாம். ஆத்ம சாதனத்துக்கு அது உதவாது. தற்பெருமை மதம் எனப்படுகிறது. வெறி பிடித்துள்ள நிலையும் மதம் எனப்படுகிறது. மதம் பிடித்துள்ள யானைக்குப் பக்கத்தில் யாரும் போகக்கூடாது. அதே விதத்தில் தற்பெருமை பூண்டிருப்பவர்கள் தத்துவ ஆராய்ச்சிக்கு உதவமாட்டார்கள். அத்தகைய பொருந்தாத மனநிலை மதம் எனப்படுகிறது. குரோதம் என்றால் சினம் அல்லது கோபம். வரம்புக்கு மீறி ஒருவன் சினத்துக்கு ஆளாவானாகில் அவ்வேளையில் அவன் பைத்தியக்காரன் போன்று நடந்து கொள்கிறான். ஆதலால் குரோதம் சன்மார்க்கத்துக்குச் சத்துருவாக வந்தமைகிறது. லோபம் என்பது தான் சம்பாதித்துள்ள சொத்தில் மிகைப்பட்ட பற்றுதல் வைப்பதாம். ஆத்ம சாதகன் எதை அடையப் பெற்றாலும் அதை மற்றவர்களோடு பங்கிட்டுக் கொள்கிறான். அதற்கேற்றபடி அவனுடைய சுயநலம் தேய்கிறது. அகப்பட்டவைகளையெல்லாம் தனக்குரியவைகளென்று வைத்துக்கொள்கிறவன் லோபி. அத்தகையவன் ஒரு பொழுதும் மனத்தெளிவு அடையமாட்டான். மாச்சரியம் என்பது பொறாமை. பிறர் அடைகின்ற முன்னேற்றத்தைப் பார்த்துச் சகிக்க முடியாத வனாக இருக்கிறவன் பொறாமைக்காரனாகிறான். அப்படிப் பொறாமைப்படுவதால் அவன் மேலும் மேலும் க்ஷீணதசை அடைகிறான். பிறர் அடைகின்ற நலன்களையெல்லாம் போற்றிப் பாராட்டுகின்றவன் மேன்மையுறுகின்றான். பிறர் அடைந்துவரும் நலன்களைக் கண்டு மனம் சகிக்க முடியாதவனாய் யாரொருவன் மனம் வெந்து கொண்டிருக்கின்றானோ அவன் பொறாமைக்காரன். அத்தகையவனுக்கு ஒரு பொழுதும் ஆத்ம சாதனத்தில் முன்னேற்றம் வாய்க்காது. இத்தகைய பொறாமையானது அடிமைச் சீட்டு எழுதி என்னைத் தனக்குரிய தாக்கிக்கொண்டதோ (முறியிடுதல்—அடிமைச் சீட்டு எழுதி உரிமையைப் பறித்துக் கொள்ளுதல்) என்று அண்ணல் வினவுகின்றார். இக்குறைகளையெல்லாம் தொகுத்து மோகமோ, மதமோ, குரோதமோ, லோபமோ முற்றும் மாச்சரியமோ தான் முறியிட்டு என்னை ஆட்கொள்ளும் என்று அண்ணல் இயம்புகின்றார். முறையாகப் பொருளைத் திரட்டி அதைப் பாதுகாத்து வைப்பதும் நல்ல வழியில் செலவிடுவதும் தெய்வ சம்பத்து ஆகும். அதைத் தேடுதற்கு வண்டு வெட்டவெளியில் பறந்தோடுவது போன்று மனிதன் வெவ்வேறு இடங்களுக்கு விரைந்து ஓடவேண்டும். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது கோட்பாடு. (நிதியம்—செல்வம்) மூசு—மொய்க்கும்; வரி வண்டு—கோடுகளையுடைய வண்டு; மாகம் ஓடுதல்—வானத்தில் பறந்து செல்லுதல். அல்லும் பகலும் படாதபாடுபட்டுப் பொருள் சம்பாதிக்கும் திறமை தமக்கு இல்லை என்பதை 'நிதியமோ தேடவெனின் மூசுவரிவண்டு போல மாகம் ஓடவும் வல்லன்' என்று இயம்புகிறார். இத்தகைய குறைபாடுகளை உடைத்துள்ள என்னை நீ ஆட்கொள்ளுவாயா என்னும் கேள்வியை எனையாளவல்லையோ எனப் பரிவுடன் விண்ணப்பிக்கிறார். வனப்பு யாவும் வாய்க்கப்பெற்ற ராமேசுவரத்தில் எழுந்தருளியிருக்கும் உமாதேவியே, பர்வதராஜனுக்கு இரு கண்மணி போன்று தோன்றிய தாயே என விளிக்கிறார்.

அருள் நெறி

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யரான சுவாமி அபேதானந்தரின் போதனை)

'அடியார்க்கும் அடியேன்' என்பது கோட்பாடு. உண்மையான கடவுள் தொண்டர்களுக்குத் தொண்டு புரிவது கடவுளுக்குத் தொண்டுபுரிவதற்கு நிகராகும். கடவுளைக் காணமுடியாவிட்டாலும் கடவுள் தொண்டர்களை நீ காணமுடியும். அப்பூதி அடிகள் சிவத் தொண்டராகிய அப்பரடிகளுக்குத் தொண்டு செய்து பெருநிலையடைந்தார். தொண்டர் தம் உள்ளத்து இறைவன் சாந்நித்தியத்தை உணரலாம். தொண்டர்கள் இறைவனுடைய கையில் கருவிகளாக இருக்கிறார்கள். குருவும் தெய்வத்துக்கு நிகர் ஆகிறார். உண்மையான ஞான குரு உனக்குச் சாதனையில் ஏற்படும் தடைகளையெல்லாம் நீக்கி வைக்கின்றார். உனக்குரிய சாதனமார்க்கம் எது என்பதையும் அவர் தெளிவாகக் காட்டித்தருகிறார். குருவும், இஷ்டதெய்வமும் ஒன்று ஆகின்றார்கள். குரு உனக்குரிய இஷ்டதெய்வத்தைக் காட்டித் தருகிறார். இஷ்ட தெய்வத்தின் காட்சி உனக்குக் கிடைக்கும்படி குரு அருள் புரிகின்றார். இஷ்டதெய்வத்தின் காட்சி பெறவேண்டுமென்ற நாட்டம் உன்னிடம் தீவிரமாக இருக்கவேண்டும். தீவிரமான முயற்சியும், உண்மையான விசுவாசமும் இருந்தால்தான் கடவுள் காட்சி பெறமுடியும். தேவியின் காட்சிபெறுவதற்காக ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்ன பாடுபட்டார் தெரியுமா? ஆறு மாத காலம் ஊண் உறக்கமில்லாது தேவியின் எண்ணத்திலேயே மூழ்கிக்கிடந்தார். கோயிலில் மாலைப்பொழுதில் பூஜைமணி அடிக்கும். அம் மணி ஓசை காதில் விழுந்ததும், 'தாயே, என் வாழ்நாளில் ஒருநாள் கழிந்துபோய்விட்டதை இம்மணி ஓசை அறிவிக்கிறது. எனக்கு இன்னும் உன் காட்சி கிட்டவில்லை. இப்படியே வாழ்நாள் முழுவதும் கழிந்து விடுமோ! உன் காட்சி பெறாது நான் வாழ்க்கையை முடித்துக் கொள்வேனோ? தாயே, அப்படி வாழ்வு அனர்த்தமாய்ப் போய்விடக்கூடாது. விரைவில் உன் காட்சியைத் தந்தருள்' என்று கதறி அழுவார். தேவியின் காட்சி கிட்டவில்லையே என்ற துயரம் தாங்கமாட்டாது முகத்தைத் தரையில் போட்டுத் தேய்த்துக்கொள்வார். இத்தகைய அருள் வேட்கை ஏற்படுவதற்கு நீ சாதனை புரியவேண்டும்.

கடவுளிடம் உன்னை ஒப்படைத்துவிடு. தாயை நம்பியிருக்கும் குழந்தை கவலையற்றிருப்பதுபோன்று கடவுளை நம்பி நீ கவலையற்றிருக்கலாம். விஷய சுகத்தை விட்டுவிடு. உலகப் பொருள்கள் மூலம் வரும் சுகமோ நிலையானதன்று. உடலழகிலிருந்து காமம் உண்டாகின்றது. உடலழகை உன் உள்ளம் சிந்திக்கக் கூடாது. மனம் அதில் இன்பம் காணலாகாது. உடலமைப்பை ஆராய்ச்சி செய்து பார். அருவருப்புக்கான தோல், ரத்தம், மாமிசம், நரம்பு, எலும்புகளாலானது இவ்வுடலாகும். பொருட்காட்சிச்சாலையில் மனிதனுடைய எலும்புக்கூடு வைக்கப்பட்டிருக்கும். அதைப் பார்த்தால் உன் உடலமைப்பு எத்தகைய அருவருப்புக்குரியது என்று உனக்கு விளங்கும். இத்தகைய அருவருப்பான உடலில் நீ ஏன் மோகம் கொண்டுள்ளாய்? கடவுள் சிந்தனையில் மனதைச் செலுத்து. கடவுள் நாமத்தை உச்சரித்து வா. கடவுளுக்காகத் தொண்டுபுரி. உடல் அழகில் உனக்குள்ள மோகம் நீங்கவேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்தித்துக்கொள். தெய்வப் பற்று அதிகரிக்கும்பொழுது உடல்பற்றும், உலகப்பற்றும் குறைந்துவிடும்.

கடவுள் கருணைக் கடல் ஆகின்றார். அவருடைய மகிமைகள் அளப்பரியவை. நூல்களைப் படித்து அவர் மகிமைகளை அறிந்து கொள்ள முடியாது. சாதனையின் மூலம் மனதைப் பண்படுத்து. பண்பட்ட மனதைக் கொண்டு அவரைத் தியானம் செய். தியானத்தின்மூலம் உன் மனதுக்கு அவருடைய மகிமைகள் விளங்குகின்றன. அனுபூதிமான் ஆவதன் மூலமாகத்தான் நீ அவரை அறிந்துகொள்ள முடியும். வெறும் தத்துவ ஆராய்ச்சி உன் மனதைக் குழப்பத்தில்தான் கொண்டு சேர்க்கும். சாதனை செய்து ஆத்மானுபூதி வாய்க்கப் பெறாதவன் சமயநெறிகளைக் குறித்துக் குழப்பமடைந்த நிலையில் இருக்கின்றான். குருவின் துணைகொண்டு நீ கடைப்பிடிக்க வேண்டிய மார்க்கத்தைத் தீர்மானம் செய்துகொள். அந்த

மார்க்கத்தில் ஆழ்ந்து சாதனையில் ஈடுபடு. குரு வார்த்தையிலும், கடவுளிடத்திலும் அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கவேண்டும். சாதனையின் ஆரம்பத்தில் ஐயப்பாடுகள் ஏற்படலாம். கடவுள் நம்பிக்கை மூலம் அவ் ஐயப்பாடுகளையெல்லாம் அகற்று. கடவுள் காட்சி உண்டாகிவிட்டால் ஐயப்பாடுகள் அகன்று விடுகின்றன; கர்மங்களும் அகன்றுவிடுகின்றன.

பொறிபுலன்களுக்கும் மனதுக்கும் அப்பாற்பட்ட நிலையில் மெய்ப்பொருள் ஒருவர்தாம் இருக்கிறார். அவர் பரமாத்மன் என்று அழைக்கப்படுகின்றார். அவர் எத்தகையவர் என்று சொல் கொண்டு விளக்கமுடியாது. சொல் கொண்டு விளக்க வேண்டுமானால் அகண்ட சத் சித் ஆனந்தம் எனலாம். குணங்களோடு கூடிய கடவுள் ஈசுவரன் என்று அழைக்கப்படுகின்றார். அவரை வேண்டியவாறு போற்றலாம். பக்தர்கள் அவருடைய குணங்களை மகிழ்ந்து பாடி இருக்கின்றார்கள். குணங்களோடு கூடிய கடவுள் பல வடிவங்களில் தோற்றமளிக்கின்றார். பக்தர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ற வடிவத்தை உபாசனைக்கு அமைத்துக்கொள்ளலாம். குணத்திற்குக் கட்டுப்படாதவர் ஈசுவரன் அல்லது சகுணப் பிரம்மம். குணத்திற்குக் கட்டுப்பட்டிருப்பவன் ஜீவாத்மன். குணத்துக்குக் கட்டுப்பட்டிருக்கின்ற ஜீவன் இன்ப துன்பங்களுக்கு ஆளாகின்றான். அவனுடைய உடலும் மனதும் போகத்திற்குக் கட்டுப்பட்டவையாக இருக்கின்றன. உடல் நோய்க்கு ஆளாகும்பொழுது வைத்தியருடைய உதவியும் மருந்தினுடைய உதவியும் தேவைப்படுகின்றன. உடற்பற்றை வென்று பழகுமளவு ஈசுவர நாட்டம் அதிகரிக்கிறது. நீ தெய்வத்தை முற்றும் நம்பியிருந்தால் உனக்குத் தெய்வத்திடமிருந்து எல்லா நன்மைகளும் வருகின்றன. உடலோடு கூடிய வாழ்வுக்கிடையில் உள்ளத்தைத் தெய்வத்தின்பால் திருப்பிப் பழகு. உலக விருத்திகள் உன் உள்ளத்தில் இடம் பெற்று இருக்குமானால் உலக சம்பந்தமான எண்ணங்களும் உணர்ச்சிகளும் உனக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கும். தெய்விக சம்பந்தமான விருத்திகளை உன் உள்ளத்தில் ஏற்படுத்து. தெய்வீக சம்பந்தமான எண்ணங்கள் உன் உள்ளத்தில் அதிகமாகி உறுதி பெறுகின்றபொழுது உலக சம்பந்தமான விருத்திகளின் வேகம் குறைகிறது. இதனை மாணிக்க வாசகர் 'வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க' என்று பகர்ந்துள்ளார். ஜடசக்தியை மாற்றி அமைக்க விஞ்ஞானம் வழி கண்டுபிடித்திருக்கின்றது. மின்சக்தியை ஒளிச் சக்தியாகவும், ஒலிச் சக்தியாகவும் மாற்றி அமைக்கலாம். அங்ஙனம் சரீர சக்தியை மனோசக்தியாகவும் பிறகு மனோ சக்தியை ஆத்ம சக்தியாகவும் மாற்றி அமைக்கலாம். தெய்வீக விருத்திகள் மனதில் இடம் பெறுகின்ற அளவு மேற்கூறிய மாறுதல் மனிதனிடத்தில் வெகு விரைவாக நிகழ்கிறது. உலக விருத்திகளைப் புறக்கணித்துத் தெய்வீக விருத்திகளை வளர்க்கும் பொழுதுதான் மனிதன் தெய்வீகமாக மாறி அமைகின்றான். பிறகு தெய்வீக விருத்திகள் உன்னுடைய நிஜசொரூபத்தை அறிவதற்குத் துணை புரிகின்றன. தெய்வத்தைப் பற்றிய சம்ஸ்காரம் தெய்வ சம்பந்தமான அறிவைத் தருகின்றது. அது விருத்தி ஞானம் என்று சொல்லப்படுகின்றது. மனம்,விருத்தி ஞானத்தையும் கடந்து சொரூபத்தை அடையும் பொழுது சொரூப ஞானம் உண்டாகின்றது. சொரூபஞானத்தில் மனம்பரத்தோடு ஒன்றுபட்டுக் கரைந்துபோகின்றது. சொரூபமே எஞ்சி இருக்கின்றது. மனதற்ற பரிசுத்த நிலையென்று அப்பெரு நிலையைப் பகரலாம். அப்பெரு நிலையையடையும்பொழுதுதான் பிறப்பற்றநிலை உண்டாகின்றது.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்'

என்பது குறள். அந்தக்கரணம் நடுவிலிருந்து கொண்டு உன்னை இறைவனிடமிருந்து பிரித்து வைத்திருக்கின்றது. மனோ நாசம் நிகழும் பொழுதுதான் அந்தக்கரணமும் அழிகின்றது. மனம் சூட்சுமமானது. சங்கல்ப விகல்ப சொரூபமாக அது இருக்கின்றது. சங்கல்ப விகல்பத்தை நாசம்செய்யவேண்டும். சங்கல்பம் ஈசுவரனைப்பற்றியதாக அமைந்து விகல்பமும் அதற்கு உதவியாக ஈசுவரனைப் பற்றியதாக உனக்கு அமைந்து விடுமாயின் எளிதில் நீ மனோநாசம் செய்துவிடலாம்,

வழிபாடும் மனத்தூய்மையும்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ஆம் ஆண்டு திருப்பராய்த்துறை தபோவனம் சக்திபூஜை அந்தர் யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

ஜீவாத்மாக்கள் சரீரத்தில் கட்டுண்டு கிடக்கின்றார்கள். சரீரத்தைத் தாங்கள் என்று அபிமானிப்பவர்கள் ஜீவர்கள் ஆகின்றார்கள். ஜீவர்களாகிய நாம் நம்மை உள்ளபடி அறிந்து கொள்வது அவசியமாகிறது. ஆகாயம் பூதங்களுக்குப் பொதுவாக இருக்கின்றது. அங்ஙனம் ஆத்மா பொதுவாக இருக்கின்றது. இதை விளக்குவதற்கு ஓர் உபமானம் கூறலாம். திரைப்படக் காட்சியில் பலவிதமான காட்சிகளைக் காண்கின்றோம். திரை பொதுவாக இருக்கின்றது. அதனிடத்தில் எந்த மாறுதலும் உண்டாவது இல்லை. எல்லார்க்கும் பொதுவாக இருக்கின்ற ஆத்மாவில் எத்தகைய வேறுபாடும் இல்லை. மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களில் வேறுபாடு இருக்கின்றது. திரிகரணங்களை முன்னிட்டு மக்களைப் பாகுபடுத்துகின்றோம். புறத்தோற்றத்தைப் பார்த்து இது ஸ்தாவரம் என்றும், இது ஜங்கமம் என்றும் சொல்லுகின்றோம். ஜங்கமத்தில் பறவை, விலங்கு, மக்கள் என்றெல்லாம் பாகுபாடுகள் இருக்கின்றன. மக்களுடைய உடலைப் பார்த்து இவர் இன்ன மாகாணம், இன்ன தேசம், இன்ன கண்டம் என்பதைச்சரியாகச் சொல்லிவிடலாம். ஒருவர் பேசுவதைக் கவனித்து அவர் ஆங்கிலேயன் என்றும், தமிழன் என்றும், மலையாளி என்றும் பாகுபடுத்தி விடலாம். ஆக்ஸ்போர்டில் பயிற்சிபெறுகின்றவர்கள் யாவரும் ஆங்கிலம் பேசுவார்கள். சரீர அமைப்புக்களில் கூட அவர்களுக்கு இடையில் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். ஆக்ஸ்போர்டில் படித்தவர்களுடைய நடை அலாதி போக்குடையதாக இருக்குமென்று பகர்வார்கள்.

உடலை எப்படித் தெய்வத்திற்குரிய ஆலயமாக்குவது என்பதைப் பற்றியும், சொல்லை எப்படிச் சாதனத்துக்குப் பயன்படுத்துவது என்பதைப் பற்றியும் ஆராய்ந்தோம். இப்பொழுது மனதை எப்படி வழிபாட்டிற்கு உரியது ஆக்கலாம் என்பதை ஆராய்வோம். மனதையும் ஆராய்ந்து விட்டால் திரிகரணங்களையும் பூர்த்தியாக ஆராய்ந்தவர்கள் ஆகின்றோம். உடல் ஸ்தூலமானது. அதைக் காட்டிலும் சொல் சூக்ஷ்மமானது. மனம் சொல்லினும் சூக்ஷ்மமானது. சூக்ஷ்மத்திற்குச் செல்லச் செல்ல வலிவு அதிகம். மனம் எத்தகையது என்பதை மாகாணவாரியாகப் பிரிக்கமுடியாது. மொழியை முன்னிட்டும் மனதைப் பிரிக்கமுடியாது. மொழி இன்ன மாகாணத்திற்குரியது என்று சொல்லலாம். ஆனால் அதன் மூலம் விளக்கப்படும் கருத்தை இன்ன மாகாணத்திற்குரியது என்று பிரிக்கமுடியாது. கருத்து எல்லார்க்கும் உரியதாகின்றது. மனிதன் எத்தகைய கருத்தில் ஊறி இருக்கின்றானோ அதற்கு ஏற்ப அவனிடம் பண்பு உண்டாகின்றது. உள்ளத்தின் பாங்கு கருத்து மயமாக இருக்கின்றது. கருத்துக்கு ஏற்ப மனம் மேலானது அல்லது கீழானது ஆகின்றது. சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிக்கின்றது. உடல் பரிணாமம் மானுட சரீரம் எடுத்தான பிறகு பூர்த்தியாகின்றது. வாக்கைப் பண்படுத்தி ஓரளவிற்குச் செல்லலாம். அதற்கு மேலே போகமுடியாது. மனம் மனிதனிடத்தில் தோற்றத்திற்கு வந்திருக்கிறது. மனம் இன்பதுன்பங்களை அறிகின்றது. மனோமயகோசத்திற்குக் கீழ் இருக்கின்ற பிராணமய கோசம் துன்பங்களை அறிவது இல்லை. எல்லா உயிர்களுக்கும் இன்ப துன்பங்கள் இருக்கின்றன. மழை பெய்தால் செடி கொடிகள் துளிர்விட்டுச் செழுமையாக இருக்கின்றன. மழையில்லாது காய்ந்து கிடக்கும்பொழுது செடிகள் வாடிக் கிடக்கின்றன. ஆனால் இன்ப துன்பங்களின் உணர்ச்சிமயமான தோற்றத்தைச் செடிகளிடத்துக் காணமுடிவதில்லை. மனம் படைத்திருப்பவைகளிடத்து இன்பமும் துன்பமும் தெளிவாக வெளியாகின்றன. பறவைகளும், விலங்குகளும் கஷ்டப்படுவதையும் மகிழ்வுற்றிருப்பதையும் நாம் காண்கின்றோம். உள்ளம் உணர்ச்சி மயமாக இருக்கின்றது. சங்கல்ப விகல்ப மயமாக மனம் அமைந்திருக்கின்றது. எண்ணங்களை எண்ணுவது சங்கல்பம். ஏற்கனவே எண்ணப்பட்ட எண்ணம் நம்முடைய முயற்சி

இல்லாது தானுகத் தோன்றிவருவது விகல்பம். பாடிப் பழகுவது சங்கல்பம். தன்னை அறியாது பாடுவது விகல்பம். சங்கல்பம் விகல்பம் ஆகிய இரண்டிற்கும் சித்த விருத்தி என்று பெயர். மனம் விகல்ப சொரூபமாகச் சதா இருந்து கொண்டு இருக்கிறது. யோக : சித்த விருத்தி நிரோத: என்பது யோகத்துக்குரிய விளக்க மாகும். மனது என்னும் தடாகத்தில் தோன்றி வருகின்ற விருத்திகள் என்னும் அலைகளைத் துடைத்துத் தள்ளுவதே யோகம் எனப்படும். சங்கல்பம் விகல்பமாக மாறுகிறது. சங்கல்பம் போன பிறகு விகல்பம் தானுக ஒடுங்கிப் போகிறது. "எண்ணுத எண்ணமெலாம் எண்ணியெண்ணி ஏழை நெஞ்சம் புண்ணுகச் செய்ததினிப் போதும் பராபரமே" என்கிருர் தாயுமானவர். மரம் செடி கொடிகள் எண்ணு வது இல்லை. அவைபோன்று மனிதர்களுள் எண்ணிப் பழகாத மனிதர்களும் இருக்கின்ருர் கள். அவர்கள் மாக்கள் கூட்டம் ஆகின் றனர். மனிதனுடைய முன்னேற்றத்திற்கு அளவை இல்லை. பரத்தை அடையும் பரியந் தம் முன்னேறிக்கொண்டே இருக்கவேண்டும்.

முக்கரணங்களையும் திருத்தி அமைப்பது ஆத்மசாதனம் ஆகிறது. ஆத்ம தரிசனத்திற்கு முக்கரணங்களும் துணைபுரிகின்றன. மனம் மேல் நிலைக்குப் போகின்ற அளவு மனிதன் மேலோன் ஆகின்ருன். உயரமான மனிதனை மகாத்மா என்று சொல்லுவது இல்லை. அகஸ் தியர், வாமனர் போன்றவர்கள் குள்ளமானவர் கள். ஆனுல் அவர்கள் மகாத்மாக்கள். பண் பாட்டில் அவர்கள் உயர்ந்தவர்களாக இருந் தார்கள். "பெரியோரெல்லாம் பெரியருமல் லர், சிறியோரெல்லாம் சிறியருமல்லர்" என்பது உடலை வைத்துக்கொண்டு சொல்வ தாகும். உடலை எடை போட்டு அது எவ் வளவு என்று சொல்லிவிடலாம். ஒருவன் பேசுவதைப் பார்த்து அவன் பேச்சுத்திற மையை அளந்துவிடலாம். ஆனுல் மனதை அளக்கக் கருவி இல்லை. கார் எவ்வளவு வேகம் போகிறது என்பதை ஸ்பீடாமீட்டர் காட்டுகிறது. நம் உள்ளத்தில் எழும் எண் ணங்களைக் காட்டும் கருவி நம் சரீரத்தில் அமைந்திருக்குமாகில் நாம் வெளியே போக முடியாது. பெரும்பான்மையோர் கீழ்மை யான எண்ணங்களில் உழன்றுகொண்டிருக் கிருர்கள். கீழ்மையான எண்ணங்களில் உழன்றுகொண்டிருக்கும் மனதை மேல் நிலைக் குக் கொண்டு வருவதுதான் ஆத்ம சாதனம் ஆகின்றது. அவரவர் உள்ளத்தில் இருப்பது அவரவருக்குத் தெரியும். ''தன் நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்" என்பது கோட்பாடு. நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் செய்யமுடி யாது. ஆனுல் நம் நெஞ்சில் இருப்பது நமக்கு மட்டும்தான் தெரியும். அதை வெளியில் நாம் காட்டமாட்டோம். பிறரும் அதை அறிந்து கொள்ளமுடியாது. மனதினுடைய 'பாங்கு அளப்பரியதாக இருக்கின்றது. அதை எவ் வளவு வேண்டுமென்ருலும் திருத்தி அமைக்க லாம். திருத்தி அமைப்பதற்கு ஒரு வரையறை இல்லை. மனதைச் சரிப்படுத்துவது மானுட ருடைய தனிச்செயலாகின்றது. மேலான எண்ணங்களை எண்ணி வரவர அது கடவுள் வழிபாடு ஆகின்றது. மட்டமான எண்ணங் களை எண்ணினுல் அது லௌகிகமாகின்றது. மனதை நல்ல மனதாகத் திருத்தி அமைப்பதற் குத்தான் மானுடராகப் பிறந்திருக்கின்ருேம். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் நாம் மானுடராகப் பிறந் திருப்பது கடவுள் வழிபாட்டுக்கேயாம் என்று பகர்ந்திருக்கின்ருர். கடவுள் வழிபாடு செய்யாத மனிதன் தன் கடமையிலிருந்து தவறியவன் ஆகின்ருன்.

வாக்குண்டாம் என்று ஔவையார் பகர்ந் திருக்கின்ருர். ஒருவரைப் பார்த்தவுடன் அவரு டைய பேச்சைக் கேட்கின்ருேம். அவர் பேச்சு அவர் மனதின் பாங்கை விளக்கிக் காட்டு கிறது. உடலைத் தெய்வத்துக்குரிய ஆலயமாக வைத்திருந்து சொல் சுத்தமும் கருத்துச் சுத்த மும் உடையவராக இருக்கவேண்டும். சொல்லை யும், உடலையும் மனம் ஆண்டு வருகின்றது. மனம் மாறி அமைவதற்கு ஏற்ப உடலிலும் மாறுதல் உண்டாகின்றது. மனம் திருந்தி அமையும்பொழுது சொல்லும் திருந்தி அமை கின்றது. எனவே மனதைத் திருத்தி அமைத் தால் மற்ற இரண்டு கரணங்களாகிய சொல் லும், உடலும் தாமாகத் திருந்தி அமைகின்றன. इन्द्रियाणां मनश्चास्मि இந்திரியாணும் மனச்சாஸ்மி என்பது கீதா வாக்கியம். இந்திரியங்களுள்

நான் மனதாக இருக்கின்றேன் என்று கிருஷ்ணன் சொல்லுகின்றார். மனதுக்குக் கிருஷ்ணன் அவ்வளவு சிறப்புத் தந்திருக்கின்றார். ஒவ்வொரு இந்திரியத்தோடும் மனம் இணைந்தால்தான் அவ் இந்திரியத்தின் மூலம் விஷயம் நமக்கு வருகின்றது. கண்கொண்டு ஒரு பொருளைக் காண்பதாக வைத்துக்கொள்வோம். மனம் கண்ணோடு பொருந்தாது வேறு எதைப் பற்றியோ நினைத்துக்கொண்டு இருக்குமானால் பார்த்த பொருள் நமக்கு விளங்காது. கண்ணோடு மனது பொருந்தினால்தான் பார்த்த பொருளைப் பொருள்படுத்தமுடியும். ஆழ்ந்த சிந்தனையுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்தால், சாப்பிட்டது என்ன என்றே தெரியாது. இந்திரியத்தோடு மனது பொருந்துகிற பொழுதுதான் இந்திரியங்களுக்கு உரிய விஷயம் நமக்கு விளங்குகிறது. மனம் இந்திரியத்தோடு பொருந்தாதபொழுது இந்திரியம் வேலை செய்தும் செய்யாததாகிறது. தூங்குகின்ற பொழுது கண் திறந்திருக்கின்றது. கண்ணுக்கு எதிரில் நடக்கின்ற காட்சி அதற்கு எட்டாது. தூங்குகின்றவனுக்குப்பக்கத்தில் நாம்பேசினால் அப்பேச்சை அவன் காது புலப்படுத்துவது இல்லை. அவன் நாவில் தேனை வைத்தால் அதை அவனுடைய நா சுவைக்கும். ஆனால் சுவை அவனுக்குத் தெரியாது. கசப்பு மருந்தை அவன் நாவில் வைத்தால் அதைத் துடைத்துவிடுவான். ஆனால் விழித்தெழுந்தவுடன் இனிப்பையும் கசப்பையும் வைத்தது தனக்குத் தெரியாது என்பான். உறங்குகின்றபொழுது உடல் மனம் ஆகிய இரண்டும் ஓய்வெடுத்துக்கொள்கின்றன. கனவில் உடல் மட்டும் ஓய்வெடுத்துக்கொள்கின்றது. மனது கனவில் ஓய்வெடுத்துக்கொள்ளாது தனக்குள்ளே செயல் புரிந்து ஒரு பிரபஞ்சத்தை உண்டுபண்ணுகிறது. விகல்பங்கள் அப்பொழுது தாமாகத் தோன்றி வருகின்றன. விகல்பத்திற்குக் கனவு நல்ல சான்றாகின்றது. விழித்திருக்கும் வேளையில் மனம் சங்கல்ப விகல்பமாக இருந்து பாகிய பிரபஞ்சத்தை மனது புலப்படுத்துகின்றது. மனம் செயல்புரியாவிட்டால் இந்தப் பிரபஞ்சக்காட்சி நமக்கு இல்லை. நாம்காண்கின்ற உலகம், நம் மனதும் புறத்திலிருக்கின்ற ஏதோ ஒன்றும் சேர்ந்ததாகும். புறத்திலிருக்கின்ற ஏதோ ஒன்றை நாம் முற்றிலும் அறிந்தவர்கள் அல்லர். மனப்பான்மைக்கு ஏற்ற பிரகாரம் அதை நாம் பொருள்படுத்துகின்றோம். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். துரியோதனன் உலகத்தில் உள்ள எல்லாரையும்கெட்டவர்கள் என்று பொருள்படுத்தினான். தர்மர் உலகத்தில் உள்ள எல்லாரையும் நல்லவர்கள் என்று பொருள்படுத்தினார். அவரவர்கள் மனப்பான்மைக்கு ஏற்றபிரகாரம் உலகத்தைப் பொருள்படுத்துகின்றனர். ஞானிகளுக்குப் பரவஸ்து உலகத்தில் உள்ள இத்தனை வடிவங்களில் விளையாடுபவராகத் தென்படுகின்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: “வெளி உலகை உன் மனம் என்னும் கண்ணாடி மூலம் காண்கின்றாய். பச்சைக் கண்ணாடி போட்டுக்கொண்டிருப்பவனுக்கு உலகமெல்லாம் பச்சை நிறமாகத் தோன்றும். சிவப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டிருப்பவனுக்கு உலகமெல்லாம் சிவப்பு நிறமாகத் தோன்றும். மேடுபள்ளமான கண்ணாடி அணிந்திருப்பவனுக்கு உலகில் உள்ள பொருள்கள் கோணல்களாகத் தென்படும்.” ஞானியர்கள் மனதுக்கு உலகமெல்லாம் நலம் நிறைந்ததாகத் தென்படுகின்றது. உலகமெல்லாம் கீழ்மை உடையதாகக் கெட்ட மனம் உடையவனுக்குத் தென்படுகின்றது. ஞானியர் மனதுக்கு உலகமெல்லாம் தெய்வ சொரூபமாகத் தென்படுகிறது. மனதின் துணை கொண்டுதான் அகம், புறம் ஆகிய இரண்டையும் நாம் பொருள்படுத்துகின்றோம். மனம் திருந்தி அமையும் பொழுது புற உலகின் காட்சியும் திருந்தி அமைகின்றது.

அம்பிகைக்கு मनोरूप इक्षु-कोदण्डा ‘மனோரூப இக்ஷு கோதண்டா’ என்ற பெயர் உண்டு. அம்பிகை நான்கு கரங்களிலும் நான்கு ஆயுதங்களை வைத்திருக்கின்றாள். மேலேயுள்ள இரண்டு கரங்களில் அங்குசம், பாசம் ஆகியவற்றை வைத்திருக்கின்றாள். கீழேயுள்ள இடக்கையில் கரும்பை வில்லாகப் பிடித்திருக்கின்றாள். அக் கரும்பு வில் மனோதத்துவத்துக்குச் சின்னமாக இருக்கின்றது. पञ्चतन्मात्र सायका ‘பஞ்சதன் மாத்ர சாயகா’ என்பது அம்பிகைக்கு மற்றொரு பெயர். வலக்கையில் ஐந்து இந்திரியார்த்தங்களை ஐந்து அம்புகளாக வைத்திருக்கின்றாள். அம்பை வில்லோடு

இணைக்கவேண்டும். அங்ஙனம் மனமும் ஒவ்வொரு இந்திரியத்தோடும் சேரவேண்டும். உலகம் நமக்கு எப்படிப் புலனாகின்றது என்பதை அம்பிகை இவ்விரண்டு கரங்கள் மூலமாக விளக்கிக்கொண்டு இருக்கின்றாள். கரும்பை வில்லாக வைத்திருப்பதில் ஒரு விசேஷம் இருக்கிறது. கரும்பின் நுனிப் பகுதியில் இருந்து சாப்பிட்டுக்கொண்டு அடிப் பகுதிக்கு வந்தால் சுவை அதிகமாக இருக்கும். அடிப்பகுதியிலிருந்து சாப்பிட்டுக் கொண்டு நுனிப் பகுதிக்குப் போனால் சுவை குறைந்து கொண்டே போகும். அடிப்பகுதி அதிக காலம் பூமியின் சத்தை வாங்கி வளர்ந்திருக்கிறது. எனவே அதற்குச் சுவை அதிகமாக இருக்கிறது. அங்ஙனம் பல பிறவிகளில் பண்பட்ட மனதிற்கு அனுபவம் அதிகம். மூத்தோர் சொல்லும் முது நெல்லிக்கனியும் முன்னே கசக்கும் பின்னே இனிக்கும் என்பது கோட்பாடு. முதியோர்களுடைய மனம் அனுபவம் பெற்றுள்ளது. ஆகையால் அவர்கள் சொல்லை ஏற்கவேண்டும். இளைஞர்களுடைய மனம் அனுபவம் இல்லாதது. அவர்களுக்கு முறையாக எண்ணத் தெரியாது. அனுபவமுள்ள மனதுக்குத்தான் மதிப்புத் தரவேண்டும்.

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''

என்பது குறள். மெய்ப்பொருள் காணும் அறிவு அனுபவப்பட்ட மனதுக்குத்தான் வருகின்றது. முடியரசும், குடியரசும் ஒன்றுபட்ட நிலைதான் ராமராஜ்ஜியமாகும். வயதில் அனுபவமுடையவர்களையும், மனபரிபாகம் உடையவர்களையும், சீலம் பொருந்தியவர்களையும் முதலில் மக்களுக்கு இடையில் இருந்து பொறுக்கி எடுக்கவேண்டும். அப்படிப் பொறுக்கி எடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் கூடி இருந்து விஷயங்களை நடுநிலையில் ஆராயவேண்டும். அவர்கள் செய்கின்ற தீர்மானம் தெய்வ சங்கல்பத்துக்கு நிகராக அமையும். அவர்கள் செய்த தீர்மானப்படி செயல் புரிய வேண்டும். அவர்கள் தீர்மானத்திற்கு வேண்டிய மதிப்புத்தரலாம்.

"மனோ மயீ, மனஸ்வினி" என்ற அம்பிகையினுடைய இரண்டு நாமங்கள் மனதினுடைய மகிமைகளை விளக்குகின்றன. மனோமயீ என்பதற்குப் பொருள் மனமாக வடிவெடுத்திருப்பவள் என்பதாகும். மனம் எங்கே இருக்கின்றது என்ற கேள்வி எழலாம். மனதைக் குறிப்பிட பொதுப்பட நெஞ்சம் என்ற சொல்லைக் கையாளுகின்றோம். தெய்வச் சிந்தனைசெய்கின்றபொழுது தெய்வத்தை இதயத்தில் வைத்துத் தியானம் செய்கின்றோம். ஆனால் உடல் முழுவதும் மனோமயமாக இருக்கின்றது. கால் விரலில் கொசு ஒன்று கொட்டினால் கை உடனே அக்கொசுவை விரட்டுகிறது. அவ்வுணர்ச்சி அறிவுக்கு எட்டியதனால் அச் செயல் நிகழ்கிறது. அன்னமய கோசத்திற்கும் பிராணமயகோசத்திற்கும் உணர்ச்சி இல்லை. உணரும் தன்மை மனதுக்கு உண்டு. உடல் முழுவதும் உணர்ச்சி இருப்பது உடல் முழுதும் மனம் இருப்பதற்குச் சான்றாகிறது. ஆனால் மனம் நெஞ்சில் சிறப்பாக இருக்கிறது என்று சொல்லுகிறோம். கடவுள் தத்துவத்துக்குச்சொல்கின்ற கோட்பாடு மனதுக்கும் பொருந்தும். கடவுள் எங்கும் நிறைந்துள்ள பொருள் ஆகின்றார். நம்போன்றவர்கள் அவரைச் சிறப்பாக ஆலயத்தில் காண்கின்றோம். அன்பர்களின் உள்ளத்திலும் காண்கின்றோம். பசுவினுடைய உடல் முழுவதும் ரத்தம் பரவி இருக்கின்றது. அந்த ரத்தம் பாலாக மாறிவருவது மடியின் மூலமாகத்தான் நிகழ்கிறது. அங்ஙனம் மனம் உடல் முழுவதும் வியாபித்து இருப்பினும் அது நெஞ்சில் சிறப்பாக உணரப்படுகிறது. அம்பிகை அகிலாண்டத்தில் மனோமயமாக வியாபித்து இருக்கின்றாள். மனதை நன்கு பயன்படுத்தத் தெரிந்துகொள்ள வேண்டும். மனதைப் பயன்படுத்தாதவர்களுக்கு அது வளர்ச்சி அடைவதில்லை. மனதைப் பயன்படுத்தாதவர்கள் ஜடநிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் காரியத்துக்குப் பயன்படமாட்டார்கள். அவர்களுக்கு வளர்ச்சி இல்லை. மனதைப் பயன்படுத்தாது ஜடநிலையில் இருந்த மனிதனைப் பார்த்துச் சுவாமி விவேகானந்தர் பகர்ந்ததாவது: "நீ வெறுமனே ஜடம் போன்று இருப்பதால் என்ன பயன்? ஏதாவது செயல் புரி. பொருந்தாத செயலாகிய திருட்டுப் போன்ற செயலையாவது செய். அப்படிச் செய்வதன் மூலம் நீ ரஜோகுணத்தை வளர்ப்பவனாகின்றாய்." தமோகுணமுடைய மனதை முதலில்

செயலுடையதாக்கவேண்டும். பின் அதை நற் செயலில் ஈடுபடுத்துகின்றவளவு அது திருந்தி அமைகின்றது. மனதைச் சரியாகப் பயன் படுத்துவதன் மூலமாகவே மனதைச் செய லுக்கு அப்பால் எடுத்துச் செல்ல முடியும். பயன்படுத்தவேண்டிய காரியத்திற்கு மனதை நன்கு பயன்படுத்துபவளாக அம்பிகை இருக் கின்ருள். விருந்து ஒன்றில் மக்கள் உண்பதற் குப் பசியோடு காத்துக்கொண்டிருந்தார்கள். இலைகளெல்லாம் போட்டு உணவுப் பொருள் களும் பரிமாறிமுடிந்தன. இன்னும் ஒன்றுதான் பாக்கி இருந்தது. அது என்ன என்ற கேள்வி கேட்டபொழுது மனம் வேண்டும் என்று பதில் வந்தது. இலையில் நல்ல பதார்த்தம் பரிமாறியிருக்கலாம். ஆனல் சாப் பிட வேண்டுமென்ற மனம் இல்லாவிட்டால் அதைச் சாப்பிட முடியாது. மனம் உற்சாகமாய் இருக்கும்பொழுதுதான் காரியம் முடிகிறது. மனதை நல்லதில் பயன்படுத்துகிற அளவு மனதுக்கு வளர்ச்சி உண்டாகிறது. மனதைப் பயன்படுத்தாது விட்டுவிடுகின்ற பொழுது அது குன்றிப்போய்விடும். மனம் குன்றிப் போனல் அது நமக்கு நஷ்டம். சந்ததமும் இளமையோடு இருக்கலாம் என்பது வாழ்க் கையைப்பற்றிய ஒரு கோட்பாடு. அம்பிகைக் கும் நித்திய யௌவன என்ற நாமம் உண்டு. நம்முடைய சரீரம் சந்ததமும் இளமையோடு இருக்காது. ஆனல் மன அமைப்பில் நாம் எப்பொழுதும் இளமையோடு இருக்கலாம். ஒரு இயல்பில் ஊறிப்போன மனது புதிதாக எதையும் வாங்கிக்கொள்ளாது. அது பழுது பட்டுப் போன மனது ஆகிறது. சரீரத்துக் குத் தொண்ணூறு வயது ஆகியிருக்கலாம். மனம் பதிறு வயது யௌவனம் போன்று எழில் வாய்ந்ததாக நல்லதை ஏற்பதற்கு ஆயத்தமாக இருக்கிறவிடத்து அது இளமை யோடு இருப்பதாகிறது. இளமையினிடத்து எழில் இருக்கின்றது. ஆற்றல் இருக்கின்றது. ஊக்கம் இருக்கின்றது. முதுமை வரும் பொழுது இவை எல்லாம் தேய்கின்றன. அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்ததாக மனம் இருக்கட்டும். செயல்படுவதில் புத்தம் புதியதாக இருக்கட்டும். மனபரிபாகத்தில் உள்ள வித்தியாசமே மக்களுக்கிடையிலுள்ள வித்தியாசமாகிறது. "வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு" என்பதற்கேற்ப உள்ளம் உயர்வு அடைகிற அளவு மனிதன் மேலோனுகின்ருன். மனதைப் பண்படுத்துவதற்காகச் சாதனங்கள் செய்து வருகின்ரேம். நல்ல மனம் படைத்தவர்களாக நாம் இருக்கின்றபொழுது நித்திய யௌவனத் தில் இருந்து வருகின்ரேம்.

இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி சொரூபிணீ என்று அம்பிகை அழைக்கப்படு கின்ருள். அன்பு, அறிவு, ஆற்றல் சொரூப மாக அம்பிகை இருக்கின்ருள் என்பது பொருள். பக்தி, ஞானம், யோகம் ஆகிய இம் மூன்றுக்கு மேல் சாதனத்தில் ஒன்றுமில்லை. ஒரு பறவைக்கு இரண்டு சிறகுகள் இருப்பன போன்று பக்தியும் ஞானமும் அமைந்திருக்கின் றன. பறவையினுடைய வால் போன்று யோகம் அமைந்திருக்கின்றது. பறவை பறப்பதற்குச் சிறகுகள் இரண்டும், வாலும் தேவைப்படு கின்றன. பரத்தை நோக்கிச் செல்கின்றவனுக் குப் பக்தியும் ஞானமும் இரண்டுசிறகுகளா கவும், யோகம் அவற்றைச் சமன்படுத்துகின்ற வாலாகவும் இருக்கின்றன. அறிவு, அன்பு ஆகிய இவ்விரண்டையும் செயலுக்குக்கொண்டு வருவதற்கு ஆற்றல் தேவைப் படுகிறது. அன்பு உயிர்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உண்டு பண்ணுகிறது. விஷயங்களை உள்ளதை உள்ள படி அறிவதன் மூலம் உலக வாழ்வு நன்கு நடை பெறுகிறது. அவை செயலாகப் பரிணமிக்கு மிடத்து ஆற்றல் வளர்கிறது. உலக வாழ்க் கைக்கும் அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய மூன் றும் தேவை. இம் மூன்றும் சேர்ந்தது மன அமைப்பாகும் இம்மூன்றும் அமையப்பெற்ற வர்கள் உலகில் திறம்பட வாழ்ந்து வருகின்ற னர். பக்தி, ஞானம், யோகம் ஆகிய மூன்றை யும் சரியாக வளர்ப்பவர்கள் கடவுளை அடையத் தகுதி உடையவர்களாகின்றனர். நிறை மனதி னிடத்து இம் மூன்றும் பரிபூரணமாக இருக் கின்றன. கீதையில் முதல் ஆறு அத்தியாயங் கள் ஆற்றலைப்பற்றியும், அடுத்த ஆறு அத்தியா யங்கள் அன்பைப் பற்றியும், கடைசி ஆறு அத் தியாயங்கள் அறிவைப்பற்றியும் விளக்குகின் றன. சிறு குழந்தை துள்ளிக் குதிப்பதன் வாயி லாகத் தன் ஆற்றலை முதலில் வெளிப்படுத்து

கிறது. பொம்மைபோல இருக்கும் குழந்தை ஒன்றுக்கும் உதவாது. நரேந்திரன் சிறுவனாக இருந்தபொழுது அவனைக் கவனிப்பதற்குத் தாதிமார் இரண்டுபேர் அமர்த்தப்பெற்றிருந்தார்கள். சிற்சில சமயம் அவனுடைய குறும்பு அவர்களாலும் அடக்கமுடியாது போய்விடும். அப்பொழுது தாயார் "சிவனாரிடம் பிள்ளை வரம் கேட்டேன்; அவர் தம் பூதகணங்களுள் ஒன்றை அனுப்பி வைத்துவிட்டார்" என்று நொந்துகொள்வார். அவருடைய அவ்வளவு ஆற்றலும் பின்னால் பயன்பட்டது. சுவாமி விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சந்தித்தபொழுது சுவாமி விவேகானந்தருக்கு அன்புக்கு விளக்கம் கிடைத்தது. அன்பு எத்தகையது என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர்மூலம்தான் அவர் அறிந்துகொள்கிறார். ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சந்தித்த பின் விவேகானந்தருடைய உள்ளத்திலிருந்த அன்பு பெருக்கெடுக்கலாயிற்று. அவருடைய உள்ளத்தில் அன்பை வளர்த்த பிறகு தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருக்கு ஞானத்தைத் தந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரிடமிருந்து பிரம்ம ஞானத்தை சுவாமி விவேகானந்தர் பெற்றார். தாம் பெற்ற ஞானத்தைத் தரணியிலுள்ள மக்களுக்கு எடுத்து வழங்கிய பேருள்ளம் அவருடைய அன்பை விளக்கிக் காட்டுகின்றது. அன்பைச்செயல்முறையில் கொண்டுவருவதற்கு அவருடைய ஆற்றல் பேருதவியாக இருந்தது. இங்ஙனம் சுவாமி விவேகானந்தரிடத்தில் ஆற்றல், அன்பு, அறிவு விளக்கம் பெறுகின்றன. முதன்முதலில் குழந்தை தாயைப்பற்றி அறிந்து தாயின் மீது அன்பை வளர்க்கிறது. தாயின் துணையைக்கொண்டு தந்தையை அறிகிறது. குழந்தையின் வளர்ச்சியில் ஆற்றல், அன்பு, அறிவு முறையாக விளக்கம் பெறுகின்றன. சிற்றுயிர் பேருயிர் ஆகிய எல்லா உயிர்களிடத்தும் ஆற்றல் முதலில் வெளிப்படுகிறது. ஆற்றல் இருக்கின்றவளவு உயிர்கள் வளர்ச்சி அடைகின்றன. ஆற்றல் தேயத் தேய வளர்ச்சி குறைகிறது. வாழ்வு சிறுமையுறுகின்றது. அன்பு செயலாக வடிவு எடுக்கவேண்டும். அன்பையும் அறிவையும் செயலில் காட்டுகின்ற விடத்து வளர்ச்சி ஏற்படுகின்றது. ஆற்றலைத் தெய்வீக ஆற்றலாக மாற்றுவது கர்மயோகமாகும். கர்மத்தில் ஜீவர்களுடைய வாழ்வு துவங்குகிறது. சுவாசிப்பது, உண்பது, வளர்வது எல்லாம் கர்மங்களாகின்றன. நொடிப்பொழுதும் கர்மம் செய்யாது ஓர் உயிரும் இருப்பதில்லை. கர்மத்தைக் கர்மயோகமாக மாற்றும் வழி கீதையில் காட்டப்பட்டிருக்கிறது.

உயிர்கள் அனைத்தும் அன்பு சொரூபம். தாய்ப்பறவையும் குஞ்சும் பரஸ்பரம் அன்பு வைத்திருக்கின்றன. விலங்கினத்திலும் அத்தகைய அன்பு இருக்கிறது. தேனீ மோப்பத்தின் மூலமாகத் தன் கூட்டத்தை அறிகின்றது. தேன் கூட்டின் வாயிலில் சில ஈக்கள் போலீஸ்காரர்கள் போன்று காவல் புரிந்துகொண்டிருக்கும். மற்ற ஈக்கள் உள்ளே புக முயன்றால் மோப்பத்தால் அவைகளைக் கண்டு பிடித்து ஓட்டி விடுகின்றன. அன்பு இல்லாவிட்டால் குடும்பம் நிகழாது. சமுதாயத்தில் அன்பு இல்லாவிட்டால் சமுதாய வாழ்க்கை நடைபெறாது. பிரபஞ்சம் முழுவதும் அன்பு சொரூபம். இந்த அன்பைத் தெய்வீக அன்பாக மாற்றுகின்ற இடத்து அது பக்தியாகின்றது. மன அமைப்பில் மேலே வரவர அன்பு தீவிரமாக வடிவெடுக்கின்றது. அனுகூலமாக இருப்பவர்களிடத்து அளவு கடந்த பற்றுதலும் பிரதிகூலமாக இருப்பவர்களிடத்து அளவு கடந்த வெறுப்பும் உண்டாவது அன்பினுடைய தோற்றங்களேயாம். வெறுப்பாக உருவெடுப்பதும் அன்பின் எதிர்மறைத் தோற்றமாகும். பற்றுதலாக உருவெடுப்பது அன்பின் உடன்பாட்டு விளக்கமாகும். "வேண்டா விருப்பும் வெறுப்பும்; இந்த வில்லங்கத்தாலே விளையும் ஜனனம்" என்பது முதுமொழி. ஒரு கூட்டத்தினரிடையே பற்றுதலையும் மற்றொரு கூட்டத்தினரிடையே வெறுப்பையும் கொள்ளுகிற விடத்து மனது குற்றமுடையது ஆகிறது. வெறுப்பை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரந்த பாங்கில் அன்பு கொள்ளவேண்டும். பரந்த பாங்கைக் குழந்தைகளிடையே காணலாம். குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். தாய் அக்கூட்டத்திலிருந்து தன்னுடைய குழந்தையை மட்டும் தனியாக அழைத்துக்கொண்டு வந்து அதற்குத் தின்பண்டம் கொடுப்பாள். அப்படி அக்குழந்தைகளிடத்துக் காட்டுகிற அன்பு குறுகிய அன்பு ஆகிறது. இதுதான் உலகியல் அன்பு. இது

பொருந்தாது. விரிந்த அன்பு எத்தகையது என்று பாலகிருஷ்ணன் விளக்கிக் காட்டியிருக்கின்ருன். பாலகிருஷ்ணன் மற்ற சிறுவர்களோடு சேர்ந்து விளையாடிக் கொண்டிருப்பான். கோபிமார்கள் கண்ணனுல் கவரப் பெற்று அவன் வசப்பட்டு விடுவார்கள். தங்களை மறந்த நிலையில் கண்ணனுக்கு மட்டும் தின்பண்டம் தருவார்கள். கண்ணன் தன்னேடு விளையாடும் சிறுவர்களுக்கெல்லாம் தர வேண்டுமென்பான். "கண்ண, உனக்குத்தான் நாங்கள் தின்பண்டம் தருவோம். மற்றவர்களுக்கு நாங்கள் தரமாட்டோம்" என்று கோபிமார்கள் பகர்வார்கள். "நீங்கள் அவர்களுக்குத் தராவிட்டால் உங்கள் வீட்டிலுள்ள தின்பண்டங்களை எடுத்து நான் அவர்களுக்குக் கொடுத்து விடுவேன்" என்பான் கண்ணன். கோபிமார்கள் சிறுவர்களுக்கு எட்டாத உயரத்தில் தயிர், பால், வெண்ணெய் முதலியவற்றை வைத்திருப்பார்கள். கண்ணன் தன் தோழர்களோடு அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் வீட்டில் புகுந்து விடுவான். சிறுவர்களின் முதுகின் மேலேறி உறியிலிருந்து பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றை எடுத்துத் தோழர்களுக்குப் பங்குபோட்டுத் தருவான். கோபிமார்கள் வீட்டுக்கு வரும் சமயம் பார்த்து இச்செயலைச் செய்வான். கண்ணன் செய்தது திருட்டு அன்று. கோபியர்களோடு அவன் விளையாடினன். அவன் அப்படி விளையாடிய விளையாட்டில் என்ன கருத்து அடங்கியிருக்கிறது என்பதைப் பார்ப்போம். கோபியர்கள் தங்களுடையது என்று உரிமை பாராட்டி வந்த சொத்தை எடுத்து எல்லார்க்கும் கண்ணன் பங்குபோட்டான். பொருளைத் தன்னுடையது என்று பாராட்டினல் அன்பு சுருங்குகிறது. செல்வமும் சுருங்கிவிடும். நாம் சம்பாதிக்கும் செல்வத்தை மற்றவர்களுக்குப் பங்கு போட்டுத் தந்தால் அன்பும் வளர்கிறது; செல்வமும் வளர்கிறது. இந்தப் பெரிய செய்தியைக் கண்ணன் தன் விளையாட்டில் செய்து காட்டினன். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மூலம் நரேந்திரர் நிர்விகல்ப சமாதியில் பேரின்பத்தை அனுபவித்தார். நிர்விகல்ப சமாதியை விட்டுத் தாம் கீழிறங்கியதும் தம்மை அப்பேரின்பநிலையிலேயே யாண்டும் இருக்க ஆசீர்வதிக்கும்படி ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கேட்டுக் கொண்டார். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரைக் கேள்வி ஒன்று கேட்டார். "உன் கையில் மாம்பழம் ஒன்றைக் கொடுத்தால் நீ அதை என்ன செய்வாய்?" என்பது அக்கேள்வியாகும். "என் கையில் கிடைத்த மாங்கனியை மற்றவர்களுக்கெல்லாம் பங்கிட்டுத் தந்துவிட்டு அருந்துவேன்" என்ருர். "அருட்கனியை மட்டும் நீயே அருந்தலாமா? அதை உலகத்தவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டாமா?" என்ருர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். அன்பு தூய அன்பாக மாறும்பொழுது அவ்வன்பு அனைவருக்கும் உரியதாகிறது. குழந்தையினிடத்து எல்லாரும் அன்பு பாராட்டுகிருர்கள். அதை நாம் ஏற்றுக்கொள்ளுகின்ருேம். காதலர்களுக்கிடையே உள்ள அன்பில் மற்றவர் பங்குக்கு வந்தால் கொலை நிகழ்ந்து விடும். அவர்களுக்கிடையே உள்ள அன்பு மாசுபடிந்த அன்பாகும். பரந்த அன்பை வளர்த்து வரவேண்டும். கீதையில் 'அத்வேஷ்டா சர்வபூதானும் மைத்ர: கருண ஏவ ச' என்று பகர்ந்துள்ளார் கிருஷ்ண பரமாத்மா. யாரிடத்திலும் வெறுப்பு வைக்கக் கூடாது. வெறுப்பில்லாது இருந்தால் மட்டும் போதாது. அனைவரிடத்திலும் சிநேக பாவனை கொள்ள வேண்டும். சிநேக பாவனை கொள்வதோடு யாவருடைய நலத்திலும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். அங்ஙனம் வெறுப்புணர்ச்சி இல்லாது யாவரிடத்திலும் மித்ர பாவனையுடன் பரநல நோக்கத்தோடு ஒழுகுவதே அன்புக்கு விளக்கமாகும். 'அத்வேஷ்டா, மைத்ர: கருண' என்ற மூன்று பதங்களைக்கொண்டு கீதையில் கிருஷ்ணன் அன்புக்கு விளக்கம் தந்திருக்கிருர். பக்தி யோகத்தில் மேலே போகப்போக மனம் மேலானது ஆகிறது. எல்லாப் பொருள்களிடத்தும் பேரன்பு செலுத்துவது அம் மேலாம் மனதின் இயல்பாகும். அன்பைப் பேரன்பாக மாற்றி அமைப்பது பக்தியோகத்தின் குறிக்கோள். தூய மனதில் பேரன்பு ஊற்றெடுத்து வருகிறது. பேரன்பு மயமான மனது எல்லா உயிர்களையும் கடவுள் மயமாகக் கருதித் தொண்டு செய்கிறது. "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால், இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே" என்பது தாயுமானவர் வாக்கு. (தொடரும்)

அனுமன் - 12

(சுவாமி ஆத்மானந்தர்)

திருவடிதொழுதல்

சீதையினிடம் விடைபெற்றுச் சென்ற அனுமன் இலங்கைக்குப் பக்கத்திலுள்ள ஒரு குன்றின் உச்சியை வந்தடைகின்றான். அனுமன் குன்றின் மீது நின்ற பொலிவு சூரியன் உதய கிரியை வந்தடைந்தது போன்று இருந்ததாம். இராமன் இருப்பிடத்தை விரைவில் அடைய விரும்பிய அனுமன், உலகளந்த திருமாலைப் போல் மிகப் பெரிய வடிவு கொள்ளுகின்றான். இராமன் திருவடிகளைத் திக்குநோக்கித் தொழுகின்றான். வான்வழியே மேலெழும்பி இராமத்தியானத்திலேயே விரைந்து செல்கின்றான். வழியில் மைநாகமலை தென்படுகின்றது. முன்பு வாக்களித்தபடி அம்மலை மீது இறங்கி, அது அன்பினோடு படைத்த விருந்தினை ஏற்றுக் கொள்ளுகிறான். இலங்கையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அதனிடம் எடுத்துரைக்கின்றான். பின்பு, அதனிடம் விடைபெற்றுக் கொண்டு, தன் வரவினை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும் அங்கதன் முதலிய வானர வீரர்கள் இருந்த மகேந்திர மலையினை வந்தடைகின்றான். அனுமன் முகப் பொலிவே அவன் வெற்றியோடு வினைமுடித்து வந்திருக்கிறான் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தியது. இரைதேடிச் சென்ற தாய்ப் பறவையின் வரவினைக்கண்ட இளங்குஞ்சுகளைப் போல, அனுமன் வரவினைக் கண்ட வானர வீரர்கள் பெருமகிழ்வடைகின்றனர். அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லை இல்லை. மகிழ்ச்சி மேலீட்டினால் ஆடவும், பாடவும், ஆரவாரிக்கவும் செய்கின்றனர். கைகளால் தொழுதும், தோளில் வைத்துச் சுமந்தும், மெய்யுறத் தழுவியும், வாயால் துதித்தும் தங்கள் தங்கள் மகிழ்ச்சியினை வெளிப்படுத்துகின்றனர். “நீ வினைமுடித்து வெற்றியுடன் மீண்டு வந்தாய் என்பது சொல்லாமலே விளங்குகின்றது. நீ இப்போது உண்டு இளைப்பாறு ; பின்னர் நிகழ்ந்தவைகளை உரைக்கலாம்” என்று கூறி இனிய கனிகளைக்கொடுத்து உபசரித்தனர்.

வானர வீரர் அன்பினோடு அளித்த அதிமதுரக் கனிகளை உண்டுகளித்த அனுமன், தான் சென்று திரும்பிய செய்தியினைச் சொல்லுமுன், முதலில் இளவரசனான அங்கதனையும், வயதில் முதிர்ந்த ஜாம்பவானையும் வணங்கி, ஏனையோருக்கும் அவரவருக்கேற்ற உரிய மரியாதைகளைச் செய்தனன். பின்னர் வானரர்களை நோக்கி, “இங்கே கூடியுள்ள உங்கள் அனைவருக்கும் எம்பெருமாட்டி சீதாதேவி வாழ்த்துக் கூறினாள்” என்றான். அது கேட்ட வானர வீரர் அனைவரும் எழுந்து நின்று, சீதையிருந்த திக்கு நோக்கித் தெண்டனிட்டனர். பின்னர் அனுமன், இலங்கை சென்று மீண்ட நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கின்றான். அப்படிக் கூறும்போது, சீதையின் கற்பின் திறத்தினையும், சூடாமணி பெற்றுத் திரும்பியதையும் கூறினானேயன்றி, தான் அசோகவனத்தை அழித்ததையும், அரக்க வீரரைப் போரில் வென்றதையும், இலங்கையை எரியூட்டியதையும் பற்றிச் சிறிதும் எடுத்தியம்பவில்லை. அவ்வாறு கூறாது இருந்ததற்குக் காரணம் தற்புகழ்ச்சி செய்தல் தன் பெருமைக்கு இழுக்கெனக் கருதியதனாலேயாம்.

ஆண்தகை தேவி உள்ளத்து
    அருந்தவம் அமையச் சொல்லி
பூண்டபேர் அடையாளம் கைக்
    கொண்டதும் புகன்று போரில்
நீண்ட வாள் அரக்கரோடு
    நிகழ்ந்ததும், நெருப்புச் சிந்தி
மீண்டதும், விளம்பான்தான்தன்
    வென்றியை உரைப்பவெள்கி.

அனுமன் உரையினைக் கேட்ட வானரவீரர் அவனை நோக்கி, ‘நீ அரக்கரோடு போரிட்டு வென்றதையும், இலங்கையை எரியூட்டி அழித்ததையும் கூறினாயில்லை. நீ கூறாவிடினும் அரக்கரோடு போர் செய்தாய் என்பதை உனது உடம்பிலுள்ள புண்களும், போரில் வென்றாய் என்பதை நீ திரும்பிவந்த செயலும், இலங்கையை எரியூட்டி அழித்தாய் என்பதை எரிகின்ற இலங்கையினின்று உயர்ந்தெழுந்த பெரும் புகையும் தெளிவாக எங்களுக்குத் தெரிவிக்கின்றன. இனிமேல் நாம் செய்யவேண்

டியது யாது என்பதனைச் சொல்வாயாக' என்றனர்.

'பொருநமை புண்ணே சொல்ல,
வென்றமை பொந்த தன்மை
உரைசெய, ஊர்தீ இட்டது
ஓங்கு இரும்புகையே ஓத,
கருநலர் பெருமை தேவி
மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர உணர்ந்தேம்; பின்னர்
என் இனிச் செய்தும்? என்றார்.'

அனுமன், சீதாதேவி க்ஷேமமாய் இருக்கும் செய்தியினை விரைந்து சென்று இராமனுக்குத் தெரிவித்து அவன் கவலையைப் போக்க வேண்டும் என்றான். உடனே எல்லாரும் ஒருமுகமாக எழுந்து விரைந்து புறப்பட்டனர். உச்சிநேரத்தில் கிஷ்கிந்தைக்கு அருகிலுள்ள மதுவனத்தை அடைந்தனர். பசியினைப் போக்கக் கனிகளை அருந்தியும், தேனைப் பருகியும் இளைப்பாறினர்.

இனி, கிஷ்கிந்தையில் இராமன் எத்தகைய நிலையில் இருக்கிறான் என்பதைப் பார்ப்போம். சீதையின் பிரிவால் இராமன் துன்புறுகிறான். சோகமே வடிவெடுத்தவனாகத் தென்படுகிறான். சுக்ரீவன் அவனுக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லித் தேற்றுகிறான். கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகளிலும் சென்ற வானரர் சீதையைக் காணாது திரும்பினர். தெற்கு நோக்கிச் சென்ற அனுமன் சீதையைக் கண்டு வருவான் என்ற நம்பிக்கையில் இராமன் சிறிது ஆறுதல் அடைகின்றான். நெடுநாட்களாகியும் அனுமன் முதலியோர் வராதது கண்ட இராமன் சுக்ரீவனைப் பார்த்து, "சீதையைத் தேடச் செய்த முயற்சி பயன்படவில்லை. குறித்த காலம் கடந்துவிட்டது. ஆயினும் அவளைத் தேடித் தென்திசை சென்ற அனுமன் முதலியோர் இன்னும் வரவில்லையே! ஒருவேளை, அவர்கள் சீதையைக் காணாமையினால் செத்துப் போனார்களோ? அல்லது அவர்களுக்கு வேறு ஆபத்து ஏதேனும் நேர்ந்ததோ? சீதை இறந்துவிட்டனளோ? அல்லது இறப்புச் செய்தியைக் கூறுதலினும் நாமும் மாண்டொழிதலே மேல் என்று மாண்டுவிட்டனரோ? இராக்கதரை எதிர்த்து மாண்டனரோ? அல்லது அவர்களால் சிறைபிடிக்கப்பட்டனரோ? காலம் கடந்து சென்று தண்டனை அடைவதைவிடத் தவம் செய்தலே மேல் என்று தவம்தான் செய்கின்றனரோ? அவர்கள் நிலையினைச் சொல்லுக" என்றான்.

'அனுமன் சீதையைக் கண்ட நற்செய்தியைக் கொண்டுவருவான்; கவலையற்று இருப்பீராக' என்று இராமனுக்குச் சுக்ரீவன் ஆறுதல் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, தென்திசையில் சூரியன் உதித்தது போன்று அனுமன் தோன்றலானான். இராமனும் அனுமனை அன்பு கூற நன்கு நோக்கினான்.

என்புழி, அனுமனும், இரவி என்பவன்
தென்புறத்து உளன் எனத் தெரிவது ஆயினான்;
பொன் பொழி தடக்கைஅப் பொரு இல் வீரனும்,
அன்புறு சிந்தையன், அமைய நோக்கினான்.

நொடிப்பொழுதில் அனுமன் இராமன் இருக்குமிடம் வந்து சேருகிறான். வந்தவன் இராமன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கவில்லை. அதற்கு மாறாக, சீதை சிறையிருந்த தென்திசையை நோக்கி வணங்கிய தலையும் கையும் உடையவனாய்ப் பூமியின் மீது நெடிது வீழ்ந்து பணிகின்றான்.

எய்தினன் அனுமனும், எய்தி, ஏந்தல் தன்
மொய் கழல் தொழுகிலன் ; முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன், கையினன்
வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி, வாழ்த்தினான்.

ஒருவனைப் பார்த்தமாத்திரத்தில் அவன் உள்ளத்தினுள்ளே நிகழ்வதைத் தெரிந்துகொள்ளும் வல்லமையுடைய இராமன், அனுமனின் அசாதாரணமான செயலை நன்கு கவனித்தான். அனுமன் வழக்கத்துக்கு மாறான செயலிலிருந்து, சீதை க்ஷேமமாய் இருக்கின்றாள் என்பதையும், அனுமன் சீதையைக் கண்டதுண்டு என்பதையும், சீதையின் கற்புநிலை கலங்கவில்லை என்பதையும் தெரிந்துகொள்ளுகிறான்.

தென்திசை நோக்கித் தொழுது எழுந்த அனுமன் இராமனை நோக்கி, 'தெய்வநாயகனே, கற்பையே அலங்காரமாகக் கொண்ட சீதாபிராட்டியை இலங்கையிலே என் கண்களால் கண்டேன். இனி சீதையின் கற்புநிலை குறித்து ஐயப்படத் தேவையில்லை. அவள் உயிருடனிருக்கிறாளோ இல்லையோ என்று வருந்தவும் வேண்டியதில்லை' என்று கூறுகிறான்.

கண்டனென், கற்பினுக்கு அணியை, கண்களால்,
தென் திரை அலைகடல் இலங்கைத் தென் நகர் ;
அண்டர் நாயக ! இனி, துறந்தி, ஐயமும்
பண்டுஉள துயரும், என்று அனுமன் பன்னுவான்.

நான் வழிபடும் தெய்வமாகிய சீதாதேவி, உனது கோப்பெருந்தேவி என்ற உரிமைப்பாட்டிற்கும், தசரத சக்ரவர்த்தியின் மருமகள் என்ற வார்த்தைக்கும், ஜனக மன்னனின் அருந்தவப் புதல்வி என்ற தகுதிக்கும் ஏற்பப் போற்றத்தக்கவள். அவள் புகழ் இத்துடன் நின்றுவிடவில்லை. இன்னமும் கேட்பாயாக என்று மேலும் கூறுகிறான்.

பொன்னுக்கு ஒப்பான பொருள் பொன்னைத் தவிர வேறில்லை என்பதுபோலச் சீதைக்கு ஒப்பாவார் சீதையைத்தவிர வேறொருவருமில்லை. உன்னுடைய குலம் இக்ஷ்வாகு குலம், ரகு குலம், ககுஸ்தகுலம் என வழங்குதலொழிந்து இராம குலம் என வழங்கும்படியாகவும், தனது குலம் ஜனககுலம் என்பது தவிர்ந்து ஜானகி குலம் எனவழங்கும்படியாகவும், தன்னை உன்னைவிட்டுப்பிரியும்படி செய்த அரக்கர் குலத்தை எமனுக்குரியதாகும்படி செய்தும், வானர குலத்தை அனுமன் குலமென எனது பெயரால் வாழச்செய்தும் எனக்குப் பெருமை தந்தாள். இனி சீதை செய்வதற்கு இதைவிடச் சிறந்த செயல் வேறு யாதிருக்கிறது?

'உன்குலம் உன்னது ஆக்கி
உயர் புகழ்க்கு ஒருத்தி ஆய
தன்குலம் தன்னது ஆக்கி,
தன்னை இத் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக்கு ஈந்து,
வானவர் குலத்தை வாழ்வித்து
என்குலம் எனக்குத் தந்தாள்,
என் இனிச் செய்வது, எம் மோய்?'

வில்லேந்திய தடந்தோள் வீரனே! இலங்கையில் கற்பொழுக்கமாகிய தவத்தில் நிலைத்து நிற்கும் சீதையை மட்டும் நான் காணவில்லை. உயர் குடிப் பிறப்பு, மகத்தான பொறுமை, கற்பு ஆகிய மூன்றும் அவளிடத்தில் ஆனந்த நர்த்தனம் புரிந்துகொண்டிருத்தலைக் கண்டேன்.

விற்பெருந் தடந்தோள் வீர!
வீங்குநீர் இலங்கை வெற்பில்,
நற்பெருந் தவத்தள் ஆய
நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற் பிறப்பு என்பது ஒன்றும்,
இரும்பொறை என்பது ஒன்றும்,
கற்பு எனும் பெயரது ஒன்றும்,
களி நடம் புரியக் கண்டேன்.

நீ எப்போதும் சீதாதேவியின் கண்களில் இருக்கின்றாய்; அவள் கருத்திலும் இருக்கின்றாய்; உன்னைவிட்டு அவள் பிரிந்திருக்கிறாளென்பது பொருத்தமற்றதேயாம். இலங்கையிலுள்ள அசோகவனத்தில்,பஞ்சவடியில் இலக்குவன் அமைத்த அதே பர்ணசாலையில்தான் சீதாதேவி தவம்செய்துகொண்டிருக்கின்றாள். உன் திருநாமத்தை ஸதா ஜபித்துக் கொண்டிருக்கின்றாள். உன் திருவுருவத்தையே நினைந்து தியானித்துக் கொண்டிருக்கின்றாள். அவளுடைய கற்புத்தீயின் வெம்மையினாலும், அயல் மாதைக் கற்பழித்தால், தலைவெடித்துவிடும் என்ற சாபம் இருத்தலாலும் இராவணன் சீதையைத் தீண்ட அஞ்சி, பர்ணசாலையோடு பெயர்த்தெடுத்துச் சென்றான். 'தக்கவன் ஒருவன் வாழத் தன் குலமெல்லாம் வாழும்' என்ற பழமொழிக்கேற்ப, சீதாதேவியினால் பெண்ணினத்திற்கே பெருமை வந்திருக்கிறது. அவள் பிறப்பினால் மண்ணக மாதரேயன்றி விண்ணக மாதரும், மும்மூர்த்திகளின் தேவிமாரும் உயர்வடைந்தனர் என்றான்.

கடல் கடந்து இலங்கையை அடைந்த நான் அசோக வனத்தில் சீதாபிராட்டியைக் கண்டேன். அப்போது சீதை சோகமே வடிவெடுத்தவளாய், கண்ணீர்க் கடலில் மூழ்கியவளாய்க் காட்சியளித்தாள். உடல் மெலிந்து உயிர் போகும் நிலையில் இருப்பவளைப்போன்று தென்பட்டாள். கொடிய அரக்கியர் சூழ்ந்து துன்புறுத்தச் சோக உருக்கொண்டு காட்சியளித்தாள். உன்பால் வைத்த பேரன்பினால்தான் அவள் உயிர் உடம்பினின்றும் பிரியாது ஒட்டியிருக்கின்றது. நின்பால் வைத்த அன்புதான் அவள் அச்சத்தை அகற்றி அரக்கர் மத்தியிலும் அஞ்சாது இருக்கச் செய்திருக்கிறது. அவளைக் காணச் சமயம் எப்போது வாய்க்கும் என்று நான் காத்திருக்கையில், இராவணன் அங்கு வந்தான். தன்னை நேசிக்கும்படி சீதையை வேண்டினான். இன் சொல் பல கூறிக் கெஞ்சினான். அருவருக்கத் தக்க அவன் பேச்சைக் கேட்ட சீதை கடுங்

கோபம் கொண்டாள். அவன்மீது கடுஞ்சொற்களைச் சரமாரியாகப் பொழிந்தாள். அதைக் கேட்ட இராவணன், சிதையைக் கொல்வதாக அச்சுறுத்தினன். முடிவில் தன் இச்சைக்கு இணங்க இரண்டு மாதகாலம் தவணைகொடுத்து விட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்ருன். அரக்கியர் சீதையைக் காத்து நின்றனர். அவர்கள் விழித்திருக்கும்போது பிராட்டியுடன் நான் பேசமுடியாதாகையால் ஒரு மந்திர சக்தியால் காவல் அரக்கியரை உறங்கவைத்தேன். அவர்களும் பிணங்கள் போன்று உறங்கிவிட்டனர்.

அரக்கியர் உறங்குவதைக் கண்ட சீதை தன் துர்க்கதியை நினைந்து உயிர்விடத் துணிந்தாள். கொடியொன்றினை எடுத்துத் தன் கழுத்தில் சுருக்கிட்டு உயிரைவிட யத்தனித்தாள். அதைக்கண்ட அடியேன் பதறிப்போயினேன். அருகில் சென்று கையால் தடுக்கமாட்டாது, ராம, ராம என்ற உன் திருநாமத்தை உச்சரித்தேன். அதைக் கேட்டதும் தற்கொலை செய்தலை விடுத்தாள். நான் சீதாபிராட்டிமுன் வணங்கி நின்றேன். ராம தூதன் என்றேன். முதலில் என்னை அவள் குரங்கு உருக்கொண்ட அரக்கனே என ஐயுற்ருள். நீ சொல்லியனுப்பிய அடையாள வார்த்தைகளைக் கூறிக் கணையாழியையும் காட்டினேன். கணையாழியைக் கையில் வாங்கிய சீதை, 'வஞ்சகம் மிக்க அரக்கர் வாழும் ஊர் வந்து அசுத்தம் அடைந்ததே என்று ஆயிரம் கலசம் புண்ணிய தீர்த்தத்தினல் அபிஷேகம் செய்பவளைப்போல ஆனந்தக் கண்ணிரினல் முழுக்காட்டினள். மெய் சிலிர்த்தாள். ஆச்சரியத்தால் மூச்சடங்கி வாய் பேசாதிருந்தாள். பின்னர், அவள் பிரிவினல் நீ வருந்தும் தன்மையை எடுத்துரைத்தேன். அது கேட்டுக் கண்ணிர் தாரை தாரையாக உதிர்த்தாள். இன்னும் ஒரு மாதகாலமே உயிரோடு இருப்பேன் அதற்குள் எம்பெருமான் என்னை வந்து மீட்காவிடில் உயிரோடு இரேன் என்று தெரிவித்து உன் திருவடிகளைத் தன்திருமுடியில் வைத்துத் தியானித்தாள். பின்னர் தன் முந்தானையில் முடிந்து வைத்திருந்த சூடாமணியை அவிழ்த்தெடுத்து உன்னிடம் சேர்க்கும்படி அடியேனிடம் கொடுத்தாள். அதனைக் கண் குளிரக் காண்பாயாக என்று அனுமன் இராமன் கையிற் கொடுத்தான்.

......துகிலின் வைத்த மா
மணிக்கு அரசைவாங்கி,
கைத்தலத்து இனிதின் ஈந்தாள்;
தாமரைக் கண்கள் ஆர
வித்தக! காண்டி!' என்று,
கொடுத்தனன்—வேதநல் நூல்
உய்த்துள காலம் எல்லாம்
புகழோடும் ஒக்க நிற்பான்.

சூடாமணியைப் பெற்ற இராமன், சீதையைப் பெற்றது போன்றே கருதி அளவிலா மகிழ்ச்சியடைகின்ருன். கணையாழியைக்கண்டு சீதை அடைந்த மெய்ப்பாட்டினை, சூடாமணியைக்கண்டு இங்கு ராமன் அடைகின்ருன்.

அப்போது அங்கதன் முதலியோர் வந்து இராம சுக்ரீவரை வணங்கினர்கள். சுக்ரீவன் இராமனை நோக்கி, 'தேவியைத் தேடச்சென்ற சேனைகளெல்லாம் திரும்பி வந்து விட்டன. சீதை இருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டோம். இனிக் காலதாமதம் செய்யலாகாது' என்ருன். உடனே 'இராமன், நம் படைகள் புறப்படட்டும்' என்ருன். சேனைகளெல்லாம் திரண்டு தெற்கு நோக்கிப் புறப்படலாயின. அப்போது அனுமன் இராமனை வணங்கி, புன்தொழில் குரங்கு என்று தன்னை அலட்சியம் செய்யாது, தன் தோள்மேல் ஏறிக்கொள்ளும்படி வேண்டினன். இராமன் இசைந்து அனுமன் தோளில் அமர்ந்தான். அங்கதன் கேட்டுக் கொண்டதற்கேற்ப இலக்குவன் அவன் தோளில் அமர்ந்துகொண்டான். தேனும் பழங்களும் கிழங்குகளும் எளிதில் கிடைக்கும் மலைப் பிரதேச மார்க்கமாகச் சேனை சென்றது. இலங்கையின் அமைப்பு, கோட்டை கொத்தளங்கள், அரக்க வீரரின் போர்த் திறன் முதலியவற்றை அனுமன் கூறிக்கொண்டே சென்ருன். அதைக் கேட்டுக்கொண்டு சென்ற சேனை பன்னிரண்டாம் நாள் தென்திசைக் கடலை அடைந்தது.

வீரரும் விரைவில் போஞர்;
விலங்கல் மேல் இலங்கை, வெய்யோர்
பேர்வுஇலாக் காவற்பாடும்,
பெருமையும், அரணும், கொற்றக்
கார்நிறத்து அரக்கர் என்போர்
முதலிய, கணிப்பு இலாத,
வார்கழல் அனுமன் சொல்ல,
வழி நெடிது எளிதின் போஞர்.

சங்க இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

சங்க இலக்கியங்களில் சில இடங்களில் புராண நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதிகள் வருகின்றன. அவ்வாறு வருபவை ஏதோ ஒரு வகையில் உவமானங்களாக வரும். பாடலில் சொல்லப்படுகின்ற அரசனின் இயல்புகளைப் புகழ்ந்து பாராட்டுகின்ற காரணத்துக்காகவும் வரும். பாடல்களைப் பாடும் புலவர், பாடல்களுக்கு இடையே, தமக்குத் தெரிந்திருந்த, அக்கால வழக்கத்தில் இருந்த புராணச் செய்திகளைக் கூறுவார்.

எட்டுத்தொகை நூல்கள் சங்க இலக்கிய நூல் தொகுதியைச் சார்ந்தவை. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு. புறநானூறு புலவர் பெருமக்கள் பலரால் பல காலத்தில் பாடப்பட்ட பாடல்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூல். இந்நூலில் சில இடங்களில் புராண, இதிகாசக் கருத்துக்கள், நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன.

"அலங்குஉளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலம்தலைக் கொண்ட பொலம்பூம் தும்பை
ஈர் ஐம் பதின்மரும் பொருது களத்து ஒழிய
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்
[தோய்!"

—அசையும் தலை ஆட்டம் கொண்ட குதிரையை உடைய பாண்டவர் ஐந்து பேருடன் சினந்து, நிலத்தைப் பறித்துக்கொண்ட பொன் தும்பைப் பூவை உடைய துரியோதனன் முதலாகிய நூறு பேரும் போர் செய்து போர்க்களத்தில் இறக்கும் சமயம் வரையிலும், இரண்டு பக்கப் படைகளுக்கும் மிகுதியான சோறு எல்லை இல்லாமல் வழங்கியவனே !

இவ்வாறு, சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் பெருந்தகை சிறப்பித்துப் பாடியுள்ளார்.

சேர மன்னன் உதியஞ்சேரல் என்பவனைப் புகழ்ந்து, அவன் செய்த அருமையான செயல்களைக் கூறும்போது இச்செய்தியைக் கூறுகிறார் புலவர் பெருமகனார்.

இதில் சொல்லப்பட்ட செய்தி இதிகாசங்களுள் ஒன்றாகிய மகாபாரதச் செய்தியாகும். பாரதச் சண்டை நடந்த இடம் குருக்ஷேத்திரம். குருக்ஷேத்திரம் என்பது இன்றைய பழைய டெல்லி எனக் கூறப்படுகிறது.

சேர அரசன் இருந்து அரசாட்சி செய்த இடம் தெற்கே தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய சேரநாடு. வடக்கே நெடுந்தொலைவிற்குச் சேர நாட்டில் இருந்து சேர மன்னன் சென்றிருக்கிறான்.

பாரதச் சண்டை நடந்த சமயத்தில் இரு திறப் படைகளுக்கும் உணவு வழங்கியிருக்கிறான். ஆகவே, பாரதச் சண்டை நடந்த சமயத்தில் சேர மன்னன் போர்க்களத்தில் இருந்திருக்கிறான் என்பது புலனாகிறது.

"பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் பாரத காலத்தைச் சார்ந்தவன் என்னும் பொருள்படும்படி மேற்கண்ட புறநானூற்றுப் பாடலுக்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர் கூறியுள்ளார்" எனவும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

எனவே, இம்மன்னன், பாரத காலத்தைச் சார்ந்தவன் என்பது தெரிகிறது.

பாரதப் போர் நடந்த சமயத்தில் உதியஞ் சேரலாதன் என்னும் மன்னன் பாண்டவர், கௌரவர் படைகளுக்குச் சோறு வழங்கினான் என்று புறநானூற்றுப் பாடலைப் பாடிய புலவர் சொல்லியிருக்கிறார்.

இவன் பாரதப் போர் நடந்த சமயத்தில் வசிக்கவில்லை எனவும் ஒரு எண்ணம் இருக்கிறது. இதற்கு ஆதாரம் என்ன ?

மாமூலனார் என்னும் புலவர் பெருமகன் வரலாற்றுச் செய்திகளை இணைத்துப் பாடல்கள் பாடும் இயல்பு உடையவர். இவர் அகநானூறு என்னும் சங்க இலக்கிய நூலில்,

" துறக்கம் எய்திய தொய்யா நல்இசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை "

எனப் பாடுகிறார்.

— சொர்க்கலோகம் அடைந்த புகழ்மிக்க முதியவர்களைப் பேணிய உதியஞ் சேரல், பெருஞ்சோறு கொடுத்த சமயத்தில்... என்று கூறுவதால், பாரதப் போரில் இறந்து போன

வர்களின் நினைவாக அவர்களுக்குப் பிண்டோதகக் கிரியைச் செய்துள்ளான் எனவும் கூறுகின்றார்கள்.

பெருஞ்சோறு என்பதற்குப் பிண்டம் போடுதல் எனப் பொருள் சொல்லுகிறார்கள். எப்படி இருந்தாலும் சரி; பாரதச் சண்டை நடந்த சமயத்தில் உதியஞ் சேரல் அங்கே இருந்தாலும் சரி; இல்லை பாரதச் சண்டையில் உயிர் நீத்தவர்களின் நினைவாகப் பிண்டம் போட்டாலும் சரி, பாரத நிகழ்ச்சிக்கும் தமிழ் நாட்டுக்கும் தொடர்பு இருந்தது என்பது மட்டும் இப்புறநானூற்றுப் பாடல் மூலம் தெரிகிறது.

பாரத நிகழ்ச்சிகள் நடந்தகாலம் கி. மு. 1400–800 என்று பேராசிரியர் ஆர். சி. டட் கூறுகிறார். கி. மு. ஆயிரத்தில் பாரத நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்று வேறு சில ஆசிரியர்கள் [Prof. R. Sathiyanatha Aiyar-History of India] கூறுகின்றார்கள்.

இன்னொரு கருத்தும் இங்கு நினைவுகூரத் தக்கது. "மேற்குறித்த உதியஞ் சேரலாதன், பாரத வரலாற்றைக் கதகளி போன்ற நடிப்பு நாடகமாக நடத்தி, அதன் இறுதியில் நடித்தவர்களுக்கும், பொது மக்களுக்கும் பெருஞ்சோறு வழங்கி யிருத்தல் வேண்டும்.'' [P. T. Srinivasa Iyengar-History of the Tamils.]

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவன் பாண்டிய மன்னன். இவனைக் காரிகிழார் என்னும் புலவர் புகழ்ந்து பாடுகின்றார். அவ்வாறு பாடும்போது,

"முனிவர் முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே
இறைஞ்சுக பெரும!" என்கிறார்.

முனிவர் பெருமக்கள் போற்றிப் புகழும்படியான மூன்று கண்களை உடைய சிவபெருமானை வணங்குவதற்காக உன் குடைதாழ்ந்து பணியட்டும் என்கிறார்.

இரண்டு கண்களுடன் நெற்றிக் கண்ணை மூன்றாவதாகக் கொண்ட சிவனைப் பற்றிய புராணச் செய்தி இங்கே கூறப்பட்டுள்ளது.

"ஆவும் ஆன் இயல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்"

— பசுக்கள், அந்தணர்கள், பெண்கள், நோயாளர், இறந்துபோய்த் தென் திசையில் வாழ்ந்து வருகின்ற முன்னோர்களுக்குப் பிண்டோதகக் கிரியை பண்ணும் புதல்வர்களைப் பெறாதவர்கள்......எனச் சொல்லுகிறார் நெட்டிமையார் என்னும் புலவர்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னனுடைய வீரத்தைப் புகழ்ந்து சொல்லும் போது, "சண்டை துவங்கப் போகிறது; நீங்கள் எல்லாரும் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று விடுங்கள்" எனப் பாண்டியன் யுத்தத்திலும் அறநெறி பிறழாத தன்மையுடன் கூறுவதாகச் சொல்லுகிறார் புலவர்.

"உயிர் நீத்தவர்கள் தென் திசையில் வாழ்வார்கள் என்பதும், அவர்களுக்கு நீத்தார் கடன் கழித்தல் கடமையாகும் என்பதும், அவ்வாறு நீத்தார் கடன் கழிப்பதற்காக மகப்பேறு வாய்க்கவேண்டும் என்பதும், பெற்றோர்க்குச் செய்யவேண்டிய நீத்தார் கடனைப் புதல்வர்கள் செய்தல் கடமையாகும் என்பதும் தொன்று தொட்டு வருகின்ற சமயக்கருத்துக்களாகும்.

தென் புலத்தார், தெய்வம், விருந்தினர், தான், சுற்றத்தினர் ஆக இவ் ஐந்து பேரையும் இல்லறத்தான் பேணுதல் கடமையாகும் என்கின்றார் வள்ளுவர். உயிர் நீத்து, தென் திசையில் வாழ்கின்ற பிதுருக்களுக்கும் புதல்வர்கள் ஆற்றவேண்டிய நீத்தார் கடன்களை ஆற்ற வேண்டும் என்பது வள்ளுவர்க்கும் உடன்பாடே.

உயிர் நீத்த உறவினர்களை எண்ணிக் கிரியைகள் செய்வதும், வழிபாடு செய்வதும் நாகரிக மக்களிடையே நடைபெறுகின்ற செயல்களாகும்.

பெற்றோரையும், சில சமயங்களில் நெருங்கிய உறவினர்களையும் உயர்வாகவே கருதுவது உண்டு. உயர்வாகக் கருதும் எண்ணத்தால்தான், அவர்களை எண்ணிக் கிரியைகள் செய்கின்ற உணர்வு தோன்றும். தெய்வத்துக்கு நிகராகக் கருதிப் பூஜை செய்கிறார்கள்; செய்பவர்களின் மனத்தில் காலம் சென்றவர்கள் தெய்வமாகத் தோற்றமளிக்கிறார்கள். இவர்களுக்குச் செய்யும் கடமைகள் "பிதுர் யக்ஞம்" எனப்படும்.

கிரியை செய்கின்றவர்கள் இறந்துபோன உறவினரைத் தெய்வமாகப் பாவனை பண்ணி வழிபாடு செய்வது ஒரு விதம். இறைவன் மீது பேரன்புகொண்டவர்கள், இறைவன் திருவருளைப் பெறுகின்றார்கள். அவ்வாறு திருவருளைப் பெறும்போது ஆன்மபோதம் சிவபோதத்துடன் இரண்டறக் கலந்து விடுகிறது. அப்போது சிவபோதமே ஓங்கி நிற்கும். அப்போது ஆத்மா தூய நிலையை அடைகிறது. அவ்வாறு தூய நிலையை அடைவதால் உலகத்தைப்பற்றி எண்ணுகின்ற எண்ணம் அறவே ஒழியும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவை அடங்கி ஒடுங்கும்.

இவ் அந்தக் கரணங்களை ஆத்மா சார்ந்து நிற்காத நிலைமையில் அதீத நிலை ஏற்படுகிறது. அதாவது, ஆத்மா தலைவனாகிய கடவுளையும், ஆத்மாவாகிய தன்னையும் அறியும் அறிவு ஏற்படும். ஜீவபோதம் அழிந்து பரபோதம் ஏற்படும். சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி ஆளுகின்ற நிலை ஏற்படும். "யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்றது" என்கிறார் அருணகிரியார். "சிற்றறிவு மெள்ளச் சிதைந்து எம்மான் பேரறிவை உற்றறியா வண்ணம் அறிந்து ஓங்கும் நாள் எந்நாளோ" என்கிறார் தாயுமானவர்.

எனவே, உறவினரைத் தெய்வமாகப்பாவனை செய்து நீத்தார்கடன் கழிப்பது ஒரு விதம். உண்மையான இறையன்பு உடையவர்கள், மனம் அழியப்பெற்று இறையாகவே ஆகிவிடுகிறார்கள். அந்நிலையில் அவர்களுக்குச் செய்கின்ற நீத்தார் கடன் புரிதல் ஒருவிதம்.

எங்ஙனமாயினும் தென்புலத்தாரை எண்ணிப் போற்றுகின்ற மரபு தொன்று தொட்டு நடைபெற்று வருகின்றதாகும்.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவன் சோழ மன்னன். அரசர்கள் செய்யக்கூடிய பெருவேள்வியான இராசசூய யாகம் என்னும் யாகத்தைச் செய்தவன்.

இம்மன்னனைப் புகழ்ந்து பாடிய புலவர் பாண்டரங்கண்ணனார். இச்சோழ மன்னனைப் புகழ்ந்து பாடும்போது, "முருகன் சீற்றத்து உருகெழுகுரிசில்" எனக் கூறுகின்றார். முருகப் பெருமான் சினங்கொண்டு அழிப்பதைப்போல, நீயும் சினம்கொண்டு பகைவர்களை அழிக்கின்றாய் என்கிறார்.

சோழன் அடைகின்ற கோபத்திற்கு உபமானம் சொல்ல வந்த புலவருக்குத் திடீரென்று நினைவுக்கு வருவது முருகன் கொண்ட கோபம் ஆகும்.

முருகனுக்குச் சினம் வந்தது; அது பொறுக்க முடியாத சினம். சினத்திலே பிறந்தவன்; அசுரர்களை அழிப்பதற்காகவே பிறந்தவன் முருகன். சிவபெருமான் தம்முடைய ஐந்து முகங்களுடன் அதோ முகம் என்ற ஆறுவது முகத்தையும் தோற்றுவித்துச் சினம் கொண்டு, வெளிப்படுத்திய ஆறு நெருப்புப் பொறிகளிலிருந்தும் தோன்றியவன் முருகன்.

ஆறு திருமுகங்களாலும், பன்னிரண்டு திருக்கரங்களாலும் அடியார்கள் அனைவர்க்கும் அருள்பாலிக்கும் அண்ணலாகத் திகழ்பவன். நற்குணக் குன்று. குணம் என்னும் குன்று ஏறி நின்றவர்களின் சினம், ஒரு கணம் கூடக் காக்கமுடியாது. நல்ல குணம் உடையவர்கள் கோபம் கொண்டால், அவர்களால் ஒரு கணம் கூடப் பொறுத்துக்கொள்ள இயலாது. அவர்களுடைய கோபத்தை மற்றவர்கள் தாங்கிக் கொள்ளவும் இயலாது.

அருள் பாலிக்கும் அண்ணலாகத் திகழும் ஆறுமுகப் பெருமான் சினம் கொண்டான்; அரக்கர் குலம் வேரோடு அழிந்தது.

இப்புராணச் செய்தியைப் பிற்காலத்தில் தோன்றிய கந்த புராண ஆசிரியர் கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுவது இங்கு நினைவுகூரத் தகும்.

"அருவமும் உருவும்ஆகி அநாதியாய்ப் பலவாய் [ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னி [ரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் [உலகம் உய்ய"

என முருகன் திரு அவதாரத் தோற்றத்தைப் புலப்படுத்துகின்றார்.

முருகனே சிவன் ஆவான் என்பதை,

"ஆதலின் நமதுசக்தி அறுமுகன் அவனும் [யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் [நின்றான்

ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்
[தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள
[வல்லான் "

— எனச் சிவபெருமானே தமது திருவாயால் முருகனாகத் தோற்றம் எடுத்ததையும், தாமும் முருகனும் ஒருவரே என்பதையும் கூறுவதாகக் கச்சியப்பர் கூறுகின்றார்.

முருகனை வணங்கிப் போற்றுவார்க்குத் திருமுருகன் பேரருள் பாலிப்பான் என்பதை,

" கையிலார் கைகள் பெற்றும்
கால்இலார் கால்கள் பெற்றும்
மொய்இலார் மொய்கள் பெற்றும்
மூங்கைகள் மொழியைப் பெற்றும்
மையல்சேர் குருடர் ஆனோர்
வாள்விழி பெற்றும் சென்றார்
ஐயன்மேல் உள்ளம் வைத்தார்க்கு
அனையதோர் அரிது மாதோ ! "

— கைகள் இல்லாதவர்கள் கைகளைப் பெற்றார்கள் ; கால்கள் இல்லாதவர்கள் கால்களைப் பெற்றார்கள் ; வலிமை இல்லாதவர்கள் வலிமையைப் பெற்றனர் ; ஊமையர் பேசும் ஆற்றலைப் பெற்றனர். விழி இழந்தோர் பார்வை பெற்றனர். இவ்வாறெல்லாம் நலம் பெறுங்கால், ஐயனாகிய முருகன் மேல் பற்று வைத்தவர்களுக்கு ஏனைய நலங்கள் பெறுவது அரிய காரியமா ? என வினவுகின்றார்.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் நல்ல பண்புகளையும், அவன் சினம் கொள்வதையும், சினம்கொண்டால் எதிரிகளுக்கு எத்தகைய கேடுகள் நேரிடும் என்பதையும்புலவர்பாண்டரங் கண்ணனார்நினைத்துப் பார்க்கும் போது, முருகனைப் பற்றிய புராணச் செய்திகள் நினைவுக்கு வருகின்றன. எனவே, முருகன் கொண்ட கோபத்தோடு, சோழன் கொள்ளும் சினத்தை ஒப்பிட்டுப்பாடுகின்றார்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் பாண்டிய மன்னருள் ஒருவன். அவனைக் கல்லாடனார் என்னும் புலவர் புகழ்ந்து பாடுகிறார்.

" கார்நறும் கடம்பின் பாசிலைத் தேரியல்
சூர்நவை முருகன் சுற்றத்து அன்ன;நின்
கூர்நல் அம்பில் கொடுவில் கூவியர் "

—[புறநானூறு] — கார்காலத்தில் மலரும் நறுமணம் மிக்க கடம்ப மரத்தின் மலர்களையும், பச்சிலைகளையும் கொண்டு கட்டப்பட்ட மாலையை அணிந்த சூரபதுமனைக் கொன்ற முருகவேளின் கூளிச் சுற்றத்தைப் போல, கூர்மையான அம்பையும் வளைந்த வில்லையும் உடைய உன் படை வீரர்கள் எனப்புகழ்கிறார்.

பாண்டியன் நெடுஞ்செழியனின் படை வீரர்கள் போரில் காட்டிய வீரச் செயலை அவர்கள் பகைவர்களை அழித்த திறனைப் பாராட்டிப் புலவர் கூறும்போது, முருகப் பெருமானின் படை வீரர்கள், சூரபதுமனைக் கொன்றழித்த புராண நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

முருகப் பெருமானுக்கும் சூரபதுமனுக்கும் நடைபெற்ற போர் பதினெட்டு ஆண்டுகள். இராமபிரானுக்கும் இராவணனுக்கும் நிகழ்ந்த போர் பதினெட்டு மாதங்கள். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் நிகழ்ந்த போர் பதினெட்டு நாட்கள்.

பழந்தமிழ்த் தெய்வம் முருகன், முருகனைப் பற்றிய புராணச் செய்தி தமிழ் நாட்டில் பழங்காலம் முதல் பேசப்பட்டு வருகிறது.

எனவே முருகன் சூரபதுமனைக் கொன்ற நிகழ்ச்சி கல்லாடனார்க்கு நினைவில் வந்தது; பாடினார்.

சோழன் நலங்கிள்ளி சோழ மன்னருள் ஒருவன். அவ்வரசனுக்கு அறிவுரை கூற நினைத்தவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர்.

"இவ்வுலகத்தில் எவ்வித வேறுபாடுகளும் இல்லாமல் பிறந்தவர்கள் பலர். அவர்களுள் புகழ் பெற்றவர் சிலர். இலைமறை காயாகப் புகழ் பெறாமல் மறைந்தவர்கள் பலர். புலவர் பெருமக்களால் புகழ்ந்து பாடும் பெருமையும் புகழும் மிக்க சான்றோர்கள்.

"விசும்பின், வலவன் ஏவா வான ஊர்தி எய்துப"
வானத்தில், பாகனால் செலுத்தப் படாத விமானத்தை அடைவார்கள் என்கிறார்.

செய்வதற்கு உரிய நல்வினையைச் செய்தவர்கள். அவ்வினைப்பயன் காரணமாக வலவன் (ஓட்டுபவன்) செலுத்தாத விமானத்தில் ஏறி விண்ணை அடைவார்கள்.

நல்வினை செய்தால் விண்ணுலகம் அடையலாம் என்ற புராண மரபு இங்கே கூறப்படுவதைக் காணலாம்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-133

764. स्वर्गापवर्गदा ஸ்வர்க அபவர்கதா— சொர்க்கத்தையும், நித்தியானந்தத்தையும் வழங்க வல்லவள் என்பது இதன் பொருள்.

பூலோக வாழ்க்கைக்கும், சொர்க்க வாழ்க்கைக்கும் வேற்றுமை உண்டு. பூலோக வாழ்க்கையில் ஒவ்வொரு சுகத்தையும் தொடர்ந்து துக்கம் வருகிறது. ஆனல் சொர்க்க வாழ்க்கை அத்தகையதன்று. துன்பமாகப் பரிணமிக்காத இன்பத்தைச் சொர்க்கலோக இன்பம் என்கிறோம். இந்த இரண்டுவித இன்பங்களும் வினைப் பயன்களாக வாய்க்கின்றன. பூலோகத்தில் வாழ்ந்து வரும் உயிர்களனைத்தும் இன்பம் துய்க்கின்றன. ஆனல் அந்த இன்பத்தைத் தொடர்ந்து துன்பமும் வருகிறது. மண்ணுலக வாழ்வை முறையாக ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இவ் உண்மை விளங்குகிறது. ஆனல் விண்ணுலக இன்பமோ தங்கு தடையின்றி யாண்டும் இன்பமாகவே நிலைத்திருக்கிறது. ஆயினும் புண்ணியம் என்னும் நல்வினைப்பயன் முடிவுற்றதும் விண்ணுலக வாசிகள் பழையபடி மண்ணுலகில் வந்து பிறந்தாக வேண்டும். ஆதலால் இம்மை, மறுமையாகிய இரண்டு உலகங்களிலும் தேகம் எடுத்தவர்கள் பெறுகிற இன்பத்துக்கு முடிவு உண்டு. இந்த நிலையற்ற இன்பம் அன்னையின் அருளால் உயிர்வகைகளுக்கு வந்து வாய்க்கின்றது. இதற்குமேலாகப் பேரின்பம் என்பது ஒன்று உண்டு. அது பரஞானம் அல்லது பிரம்ம ஞானத்தின் விளைவாக வருகிறது. அதை அடையப்பெறுகிற ஞானி யாண்டும் பிரம்மானந்தத்திலேயே திளைத்திருக்கிறன். இன்ப துன்ப மயமான பிறவிப் பிணியில் அவன் அகப்பட்டுக்கொள்வதில்லை. நிலையற்ற இன்பத்தையும் நிலையுற்ற இன்பத்தையும் நல்குபவள் அன்னை பராசக்தி என்பது இந்த நாமத்தின் உட்பொருளாகும்.

765. शुद्धा சுத்தா— யாண்டும் தூயவளாய் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள உயிர்கள் மாசு அற்று இருப்பதும், மாசு படிந்து இருப்பதும் ஆகிய இரண்டு நிலைகளில் மாறி மாறி இடம் பெற்று வருகின்றன. காலையில் துயில் எழுந்ததும் நீராடி உடையை மாற்றிக்கொண்டு நம்மை நாம் துப்புரவு படுத்துகிறோம். பின்பு புறத்திலுள்ள பொருள்களால் பாதிக்கப்பட்டு புனிதத்தை இழக்கிறோம். அப்படிப் பாதிக்கப் படாத இடத்தும் உறங்கி எழுந்திருக்கிற பொழுது புனிதம் அற்றவர்களாக நம்மை நாம் கருதிக்கொள்கிறோம். ஒருபொருள் அல்லது ஓர் உயிர் புனிதத்தை இழப்பதற்குத் தனக்குப் புறம்பான பொருளோடு, அல்லது சூழ்நிலையோடு இணக்கம் கொள்ளவேண்டும். சான்றென்று எடுத்துக்கொள்வோம். பசுவின் பாலைப் புனிதமானதெனக் கருதுகிறோம். கங்கா ஜலத்தையும் புனிதமானதாகக் கருதுகிறோம். ஆனல் பசுவின் பாலும் கங்கா ஜலமும் ஒன்றோடொன்று சேருமானல் இரண்டு பொருள்களும் தம் தூய்மையை இழக்கின்றன. மக்களாகிய நாம் நம் தூய்மையை இழப்பதற்கு நம்முடைய அறியாமை அல்லது அக்ஞானம் காரணமாக இருக்கின்றது. அக்ஞானத்தின் விளைவாக ஆத்மசொரூபமாகிய நாம் பிரகிருதியோடு நம்மை இணைத்துக்கொள்கிறோம். ஆதலால் யாண்டும்ஜீவாத்மாக்களாகிய நாம் சுத்தத்தைக் கைவிட்டவர்களாக இருந்து வருகிறோம். மற்று அன்னை பராசக்தியோ யாண்டும் தன்மயமாயிருக்கிறள். அவளை மலினப்படுத்துவதற்கு இரண்டாவது பொருள் இல்லை. ஆதலால் அவள் எப்பொழுதுமே சுத்தமாகவும், குற்றமற்றவளாகவும், மாசுபடியாதவளாகவும், நெறிபிறழாதவளாகவும், அருள்நிறைந்தவளாகவும் விளங்கி வருகின்றள். அவளுடைய இப் பெருநிலையைத் தியானிப்பது நல்ல ஆத்ம சாதனமாகிறது.

766. जपापुष्पनिभाकृति ஜபாபுஷ்பநிபாக்ருதி—செம்பருத்தி புஷ்பத்திற்கு நிகரான நிறத்தை உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னையின் சொரூபம் வேறு, இயற்கையின் சொரூபம் வேறு என எண்ணலாகாது. அன்னை தானே இவ்வுலகாக இலங்கி வருகிறள். இவ் உலகிலுள்ள வஸ்துக்களனைத்தும் அன்னை பராசக்தியின் சொரூபங்களாம். அப்படி அமைந்துள்ள வஸ்துக்களுள் மலர்களிடத்துத்

தனி மகிமையொன்றைக் காண்கின்ருேம். அவைகள் இன்று மலர்ந்திருக்கின்றன; நாளை வாடிப்போகின்றன. அன்று அலர்ந்த பூக்களைக்கொண்டே பராசக்தியை வழுத்துகின்ருேம். அப்பூக்களுள் செம்பரத்தைப்பூவின் நிறம் செக்கச்செவேலென இருக்கிறது. கவிஞர்களும், ஞானிகளும் மலரில் தெய்விகத்தைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றனர். ஆத்ம சாதகர்கள் செம்பரத்தை போன்ற மலரிலே மனதைச் செலுத்திப் பழகுவார்களேயானல் மனபரிபாகமும், ஆத்மானந்தமும் இயல்பாகவே அவர்களுக்கு உண்டாகும். மலர்தூவி அம்பிகையை வழிபடுகிறவர்கள் அம்மலரிலேயே அவளுடைய சாந்நித்தியத்தை உணருவார்களானல் வழிபாட்டில் அவர்கள் விரைந்து மேலோங்குவார்கள்.

767. ओजोवती ஓஜோவதீ— ஓஜஸ் என்னும் அருள்ஒளியை உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

நேர்மையான வாழ்க்கை வாழ்ந்து வருபவர்களுக்குப் பொலிவு தானுக வந்து வாய்க்கிறது. இப்பொலிவானது உடலின்கண் ஒளிர்ந்து கொண்டிருக்குமானல் அது தேஜஸ் என்னும் பெயர் பெறுகிறது. இதே பொலிவு உள்ளத்தினுள்ளே உள்ளத் தெளிவையும் பிரகாசத்தையும் உண்டுபண்ணுமானல் அதற்கு ஓஜஸ் என்னும் பெயர் வருகிறது. உடல் திட்பமும், பொலிவும் வாய்ப்பது எளிது. நெறியற்றவர்களிடத்தும் இச்சிறப்பைக் காணலாம். ஆனல் அகத்தெளிவும் உள்ளத்தினுள்ளே அருள் ஜோதியும் நேர்மையான வாழ்வு வாழ்கின்றவர்களுக்கே வாய்க்கின்றது. ஓஜஸின் விளைவாக அருள்திட்பமும், ஞான வல்லமையும், எண்ணியது எண்ணியாங்கு செய்து சாதிக்கும் வல்லமையும், தளராத திட்பமும் தாமாக வந்தமைகின்றன. ஆதலால் யாண்டும் ஓஜஸ் என்னும் தெய்விகச் சம்பத்து தேஜஸைவிட மேலானது. அத்தகைய ஓஜஸ் மயமாக அன்னை பராசக்தி இலங்குகின்ருள்.

768. द्युतिधरा த்யுதிதரா— பிரகாசத்தை உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னை பராசக்தி தானே உலகனைத்தும் ஆகியிருப்பதால் உலகில் அமைந்துள்ள பொருள்களனைத்திலும் பிரகாசம் பொலிந்து கொண்டிருக்கிறது. அவைகளுள் சிலவற்றை ஆராய்ந்து பார்ப்போம். பூமியில் பல வகைகளில் கற்கள் விளைந்து இருக்கின்றன. அவைகள் வெவ்வேறு நிறங்கள் படைத்திருக்கின்றன. இக்கற்களை எடுத்து முறையாகத் தேய்த்து நயப்படுத்தினல் அவைகளில் முகம் தெரியும். மேலும் சூரிய வெளிச்சம் மினுக்கெடுத்த கற்களின்மேல் படியுமானல் சூரியப் பிரகாசத்தோடுகூடி கல்லுக்குரிய நிறங்களாகிய சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் முதலிய நிறங்களுடன் சூரியப்பிரகாசம் மிளிர்வதைக் காண்போம். இதே கோட்பாடு விளைந்த மரப்பலகைகளில் அமைந்திருக்கிறது. பின்பு வெவ்வேறு நிறங்களை உடைய தங்கம், வெள்ளி, தாமிரம் ஆகிய உலோகங்களிலும் அமைந்திருக்கிறது. காலைவேளையில் புஷ்பங்களின்மீது படிந்திருக்கும் பனித்துளி ஒன்றின்மீது சூரியகிரணம் படிகிறபொழுது அதில் விதவிதமான நிறங்கள் ஒளிர்வதைக் காணலாம். இவை யாவும் அம்பிகையினிடத்து அமைந்துள்ள பிரகாசத்தின் புறத்தோற்றங்களாம்.

769. यज्ञरूपा யக்ஞரூபா— வேள்வி வடிவினள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

யக்ஞம் என்னும் நாமம் யாகம் என்றும் வேள்வி என்றும் பொருள்படுகிறது. யக்ஞம் என்னும் நாமம் பரவஸ்துவைக் குறிக்கிறது. சிவம், சக்தி, விஷ்ணு ஆகிய மூர்த்திகள் யக்ஞ மூர்த்திகளாக இலங்குகின்றனர். பிரஜைகளைப் படைத்த பிரஜாபதி அப்பிரஜைகளோடு யக்ஞத்தையும் படைத்தார். பிரஜைகள் முன்னேற்றம் அடைவதற்கு யக்ஞம் ஒன்றே உற்ற உபாயமாகிறது என்று அவர் இயம்பினர். கர்ம காண்ட முறைப்படி வேள்வித் தீ மூட்டி அதன் மூலம் செய்யப்படும் கிரியைகள் யக்ஞமாகக் கருதப்படுகின்றன. அதில் ஒரு தத்துவம் அடங்கியிருக்கிறது. தீயில் தகனமாகின்றவைகள் அழிந்துபட்டுப்போவதில்லை. அவைகள் சூட்சும நிலை யெய்துகின்றன. காற்ருேடு கலந்து அவைகள் உடனுக்குடனே ஸ்தாவரங்களுக்கு உணவாகின்றன. இலைகள் வாயிலாகக்காற்றிலுள்ள உணவை மரம் செடிகொடிகள் ஏற்றுக்கொள்ளுகின்றன. பயன்படாது கீழ்நிலையில் கிடப்பவைகளைப் பயன்படும்படி

மேல்நிலைக்கு மாற்றியமைக்கவல்லது அக்னி. அக்கருத்தைக் கொண்டே வேள்வித் தீ அல்லது ஹோமாக்னி பயன்படுத்தப்பட்டது.

பஞ்சேந்திரியங்களைப் பிரபஞ்ச வாழ்வுக்குப் பயன்படுத்தலாம். பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் பிரகிருதி அளிக்கும் சுகங்களையும் ஜீவாத்மன் பெறலாம். உடல் எடுத்துள்ள ஜங்கமங்களனைத்தும் இங்ஙனம் ஐம்பொறிகளைப் பிரபஞ்ச வாழ்வில் பயன்படுத்தி வருகின்றன. பிரபஞ்சம் நல்குகிற இன்பத்தையும் துய்த்து வருகின்றன. ஆனால் பிரபஞ்சம் அல்லது இயற்கை வழங்குகிற இன்பம் அதிவிரைவில் துன்பமாக மாறியமைகிறது. இந்த இன்பத்தின் பொருட்டு வாழ்ந்து வருகிற உயிர்வகைகள் பிறவிப் பெருங்கடலில் உழன்று வருகின்றன. ஆனால் இதே ஐம்பொறிகளைக் கடவுள் வழிபாட்டுக்காகவென்று பயன்படுத்தலாம். சுவைத்து இன்புற்று இருத்தல் பொருட்டு உணவை அருந்துகிற மனிதன் சுவையுணர்வை ஒதுக்கி வைத்து விட்டு உள்ளத்தினுள்ளேயிருக்கும் இறைவனுக்கு நைவேத்யம் படைக்கும் பாங்கில் உணவு உண்ணலாம். உடலினுள்ளேயிருக்கும் வைஸ்வானரஅக்னியை ஞானக்னியாகக்கருதி அதனிடத்து உணவை ஆஹுதியாகப் படைக்கிறவன் நல்ல யக்ஞ மூர்த்தியாகின்றான். ஆத்மசாதகன் அத்தகைய மனப்பான்மையுடன் போஜனம் பண்ணுவதால் உண்ணும்செயலை அவன் யக்ஞமாக மாற்றியமைக்கிறான். பார்க்கும் பொருள்களையெல்லாம் இன்பதுன்பங்களுக்குரியபிரபஞ்சப் பொருள்களாகப் பார்ப்பது ஒருவிதப்பான்மையாகிறது. அதே பொருள்களை இறைவனுடைய சொரூபங்களாகப் பார்ப்பது மற்றொரு விதப்பான்மையாகிறது. பிரபஞ்ச மயமாகக் காண்கின்ற பொழுது காணப்படு பொருள்கள் நல்லவைகளாகவும், கெட்டவைகளாகவும் காட்சி கொடுக்கின்றன. பின்பு அவை யாவையும் கடவுள் மயமாகக் காண்கின்ற பொழுது அப்பொருள்களிடத்துள்ள நலன்களும், கேடுகளும் தெய்விகத் திட்டத்தில் அடங்குகின்றன. எது நமக்குக் கெட்டதாகத் தோன்றுகிறதோ அதன் மூலமாகவும் உயிர்களின் முன்னேற்றத்திற்கான சூழ்நிலைகளை இறைவன் அமைத்து வைக்கிறார் என்பது வெளியாகிறது. ஆகவே காண்பனவற்றை யெல்லாம் கடவுள் மயமாகப் பொருள்படுத்துகிற பொழுது அவைகளில் அடங்கியுள்ள மேலாம் திட்டங்கள் சாதகனுக்கு விளங்குகின்றன. அது யக்ஞத்தின் விளைவு. இதே பாங்கில் காதுகொடுத்துக் கேட்பன, மேனியின் மீது படிந்து ஸ்பரிச உணர்ச்சி அல்லது ஊறு உண்டு பண்ணுபவைகளைத் தேவாராதனையாக மனிதன் மாற்றியமைக்கலாம். மூக்கால் மோப்பதைக்கடவுள் வழிபாடாகக் கருதலாம். இங்ஙனம் ஐம்பொறிகளை மேன்மைப்படுத்துவது யக்ஞமாகிறது. ஆனால் பக்திமார்க்கம், ஞானமார்க்கம் ஆகியவைகள் வாயிலாக ஆராய்ந்து பார்த்தால் யக்ஞத்தின் விளக்கம் மகோன்னதமானது என்பது வெளியாகும். கடவுள் வழிபாடு யக்ஞம் எனப்படுகிறது. உலக நடைமுறைக்குரிய கிரியைகளைத் தெய்விகம் வாய்ந்தவைகளாக மாற்றியமைப்போமானால் அச்செயல் யக்ஞம் என்னும் பெயர் பெறுகிறது. இதற்கு ஹோமாக்னி தேவையில்லை. ஞானக்னி ஒன்றே போதுமானது. தனக்காகவென்று மானுடனொருவன் மலர்கொய்கிறான். அது கர்மகாண்டம். கடவுள் வழிபாட்டுக்காகவென்று அதே மனிதன் மலர்கொய்கிறான். அப்படிச் செய்வது யக்ஞமாகிறது. ஜீவபோதத்தை வளர்க்கின்ற கர்மங்கள் யாவும் பந்தபாசத்தை உண்டு பண்ணும் கர்மங்களாம். அதே கர்மங்கள் ஆத்மபோதத்தை வளர்க்குமானால், தெய்வ பக்தியை ஓங்குவிக்குமானால், பரம்பொருளின் விபூதிகளை விளக்குமானால் அக்கர்மங்களுக்கு யக்ஞம் என்னும் பெயர் வருகிறது. கீழ் நிலையிலிருப்பவைகளைத் தெய்விகம் வாய்ந்த மேல்நிலைக்கு எடுக்கும்கர்மங்கள் யக்ஞங்கள் ஆகின்றன. மனிதன் தன்னுடைய சுக ஜீவனத்திற்கு உணவு உண்கின்றான். அது கர்ம பந்தபாசம். உள்ளிருக்கும் பரமாத்மனுக்கு ஆஹுதியாக உணவை ஏற்பானாகில் அது சிறந்த யக்ஞமாகிறது. யக்ஞமயமாக அம்பிகை இருப்பதால் தங்களை யக்ஞ மூர்த்திகளாகத் திருத்தியமைத்துக் கொள்ளும் தெய்வப்பெற்றி வாய்க்கப்பெற்ற நன்மக்களே கடவுள் வழிபாட்டுக்குத் தகுதி உடையவர்களாகிறார்கள் என்னும் கருத்து இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (210) மானுடப் பிறப்பெடுப்பதற்கேற்ற புண்ணிய கர்மங்கள் செய்துள்ள ஜீவாத்மாக்கள் இப்போதுள்ள குடும்பக்கட்டுப்பாட்டினால் மானுட ஜன்மம் எடுக்கமுடியாமல் போகிறது. அத்தகைய ஆத்மாக்கள் எவ்விதம் பிறப்பெடுக்கும்?

இறைவனுடைய சிருஷ்டியிலுள்ள ஜீவாத்மாக்கள் எண்ணிக்கையில் அடங்காதவைகள். அவைகள் பிறப்பெடுப்பதற்கேற்ற சூழ்நிலைகளும் எண்ணிக்கையில் அடங்காதவைகள். நாம் வசித்து வரும் மண்ணுலகுக்கு நிகரான உலகங்கள் அகிலாண்டங்களில் எண்ணிறந்தவைகளாக ஆங்காங்கு அமைந்திருக்கின்றன. அங்ஙனம் வசதியான சூழ்நிலைகள் கணக்கில் அடங்காதவைகளாக அமைந்திருப்பது இறைவனுடைய மகிமை. ஆதலால் சூழ்நிலை அனுகூலமாக அமையவில்லை என்னும் காரணத்தை முன்விட்டு எந்த ஜீவாத்மாவுக்காவது எக்காலத்திலாவது இடைஞ்சல் ஏதும் அமையமாட்டாது. இப்பொழுது நம் நாட்டில் அமைந்துள்ள குடும்பக்கட்டுப்பாடு சமுத்திரத்தில் கலக்கிய பெருங்காயம் போன்று மிகமிக அல்பமானது. இந்த அல்பமான இடைஞ்சலை முன்னிட்டு எந்த ஜீவாத்மாவுக்கும் பிறப்பெடுக்காவண்ணம் முட்டுக்கட்டை நேரமாட்டாது. ஆதலால் மானுடப் பிறப்பெடுப்பதற்கேற்ற பரிபாகம் வாய்த்துள்ள ஜீவாத்மாக்களுக்கு ஏற்ற பொருத்தமான சூழ்நிலை அகிலாண்டம் எங்கும் உள்ளது. தக்க தருணத்தில் ஏதேனும் ஓர் இடத்தில் மானுடப் பிறப்பு எடுக்கவேண்டிய ஜீவாத்மாக்கள் தோற்றத்துக்கு வந்துவிடும். இறைவனுடைய பேரமைப்பு அத்தகைய பெரியது. ஆதலால் மனிதன் தனக்குத்தானே அமைத்துக்கொள்ளுகிற திட்டங்கள் இறைவனுடைய மகிமை வாய்ந்த போக்குக்கு இடைஞ்சல் ஆகமாட்டா.

கேள்வி: (211) தேவதைகளுக்குப் பலியிடும் வழக்கத்தை ஆதரிக்கலாமா? அத்தகைய விழாக்களுக்கு நன்கொடை அளிக்க மறுக்கலாமா?

பலி என்னும் சொல் இக்காலத்தில் உயிர்ப்பலியை மட்டும் குறிக்கிற குறுகிய பொருள்படுகிற சொல்லாகக் குன்றியிருக்கின்றது. உண்மையில் பலி என்னும் சொல் தெய்வத்துக்குப் படைக்கிற பண்பட்டுள்ள நிவேதனத்தையே குறிக்கிறது. தேவாலயங்களுள் நாம் பிரவேசித்தவுடனே முதல் முதல் பலிபீடத்தை அணுகுகிறோம். அதை அணுகியதும் வழிபாட்டுக்கு வந்துள்ளவர்கள் வீழ்ந்து வணங்குகின்றனர். அப்படி வணங்கும்பொழுது தங்களிடத்துள்ள சிறுமைகளையெல்லாம் பலி கொடுத்து விட்டதாகக் கருதுதல் வேண்டும். புதுப்பிக்கப்பட்டுள்ள மேலாம் பாங்குகளுடன் எழுந்திருப்பதாக அன்னவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இக் கோட்பாட்டின்படி உயிர்வதைக்கு இடமில்லை. இது பண்பாடு நிறைந்த வழிபாடு ஆகும்.

பண்டைக் காலத்திலிருந்து இக்காலம் வரையிலும் தெய்வத்திற்கு விலங்குகளையும், பறவைகளையும் கொன்று பலியிடும் பழக்கம் மக்களுக்கிடையில் இருந்து வருகிறது. இத்தகைய பழக்கத்தை அறவே நிறுத்திவிட முடியாது. நிறுத்திவிடவேண்டிய அவசியமும் இல்லை. மக்கள் எதை உணவாக உண்கின்றார்களோ அதைத் தாங்கள் வழிபடும் தெய்வத்துக்கு உகந்ததாகக்கொன்று படைப்பது அவர்களுடைய இயல்பு. அந்த இயல்பு மாறும் பரியந்தம் இந்தப் பழக்கமும் நின்றுவிடாது. ஆடு, கோழி முதலியவற்றைப் பலிகொடுத்து விழா எடுக்கும் பழக்கங்கள் நம்நாட்டில் இருந்து வருகின்றன. இது பொருந்தாத பழக்கம் என அறிகிறவர்கள் இதற்கு எந்த விதமான அனுமதியும் தரலாகாது. பொருள் உதவியும் செய்யலாகாது. அமைதியாக அச்செயலில் ஈடுபடுகிறவர்களுடைய மனப்பான்மையை மாற்றியமைக்க முயலவேண்டும்.

கேள்வி: (212) பக்தி மார்க்கத்தில் ஸ்ரீமதி ராதை அடைந்திருந்த பரவச நிலையைப் பக்திமதி மீராபாய் அடையவில்லை என்று சொல்லுவதற்குக் காரணம் யாது?

பக்தி மார்க்கத்தில் மஹாபாவம் (Mahabhavam) என்னும் பாரமார்த்திகப் பெருநிலையொன்று உண்டு. சரித்திர பூர்வமாக அதை

முதன் முதல் அடையப்பெற்றவள் பாலகிருஷ்ணன் மீது பக்தி பூண்டிருந்த ஸ்ரீமதி ராதையாவாள். பராபக்தியின் கிளைகள் ஐந்து உள. அவை முறையே சாந்த பாவம், தாஸ்ய பாவம், சகா பாவம், வாத்ஸல்ய பாவம், மதுர பாவம் எனப்பகரப்படுகின்றன. பரம்பொருள் போற்றுதற்குரிய பெரிய பொருள் எனக்கருதுவதுசாந்த பாவம். ஏனைய நான்கு பாவங்களும் மக்களுக்கிடையில்உள்ள இணக்கங்களுக்கு நிகரானவைகள். இறைவன் ஆண்டவன். அவனுக்குப் பணிவிடை பண்ணும் பாங்கில் ஒரு தொண்டனாக பக்தனிருக்கிறான் என்பது தாஸ்யபாவம் அல்லது ஆண்டான்- அடிமை இணக்கம். கடவுளை மேலான நண்பனாகக் கருதுவது சகாபாவம் அல்லது தோழமை இணக்கம். தெய்வத்தோடு தாய் தந்தை இணக்கம் பண்ணுவது வாத்ஸல்ய பாவம். தெய்வத்தைத் தன் தந்தையாகவோ, தாயாகவோ கருதிக்கொள்ளலாம். இதில் மற்றொரு பகுதி; பால கணபதி, பால முருகன், பாலாம்பிகை, பால ராமன், பாலகிருஷ்ணன் ஆகிய மூர்த்திகளைப் பக்தன் தன்னுடைய செல்வர்களாகக் கருதி வழிபடுகின்றான். தெய்வத்தைத் தன் கணவனாகவும், தன்னைத் தெய்வத்தின் மனைவியாகவும் கருதிப் பக்தி பண்ணுவது மதுரபாவம்.

ஸ்ரீமதி ராதை கையாண்டது வாத்ஸல்ய பாவம். பாலகிருஷ்ணனைத் தான் பேணும் செல்வனாக அவள் வைத்துக்கொண்டாள். அத்தகைய தெய்விக இணக்கத்தில் அவள் உச்சநிலை அடைந்தாள். அவள் மேனி முழுவதுமே தெய்வப் பெற்றி வாய்ந்ததாக மாறியமைந்தது. ஐம்பொறிகளும் ராதையினிடம் பரஞான நிலையை எட்டியிருந்தன. ஆதலால் ஏதேனும் ஓர் இந்திரியம் தன் செயலையும் செய்யும், ஏனைய நான்கு இந்திரியங்களின் செயலையும் செய்யும். அதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். கண் வடிவங்களைப் பார்க்கிறது. அதே கண்ணுக்கு வடிவத்திலுள்ள ஓசையை நுகருகிற வல்லமையும், மணத்தை மோப்பவல்ல வல்லமையும், சுவையை ரசிக்கவல்ல திறனும் வந்தமைகின்றன. இது ஒரு அலாதியான பேறு. சரித்திர பூர்வமாக இந்தப் பேற்றினை அடையப் பெற்றவர்கள் மிகச் சிலரேயாம். ஸ்ரீமதி ராதை அடைந்திருந்த மகாபாவம் என்னும் இப்பெரிய பேற்றினை மாணிக்கவாசகர், ஆண்டாள், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் ஆகிய பெருமக்கள் அடையப் பெற்றிருந்தனர். இக்காலத்தில் அவதரித்து வந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்கும் இந்த மகாபாவம் வாய்த்திருந்தது என அவருடைய சிஷ்யர்கள் கூறுகின்றனர். இந்த நிலையை மீராபாய் எட்டவில்லை என்பதில் குறையொன்றுமில்லை. இந்தநிலையை அடையப்பெறுமலே அனைவரும் முக்திக்கு அருகதை உடையவர்கள் ஆகலாம். அலாதியான இந்தப் பாரமார்த்திகப் பெருநிலை அரிதினும் அரிதாக யாரோ சிலர்க்குத்தான் வாய்க்கிறது. நமக்கு இத்தகைய பெரியபேறு வாய்க்கவில்லையே என்று நாம் யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. ஈசனுடைய லவலேசான அருளைக் கொண்டு நாம் அனைவரும் உய்வுஅடையலாம்.

கேள்வி: (213) மாணவர்களிடையே குரு பக்தியை வளர்க்க ஆசிரியர்கள் என்ன செய்யவேண்டும்?

குருபக்தி தெய்வ பக்திக்கு நிகரானது. ஒரு சிலர் குரு பக்தியானது தெய்வ பக்திக்கும் மேலானது எனக் கருதுகின்றனர். காலமெல்லாம் இது நம்முடைய தேசிய லட்சியங்களில் ஒன்றாக இலங்கி வருகிறது. ஆனால் இக்காலத்திய மாணக்கர்களுக்கும், குரு பக்திக்கும் வெகுதூரம். சூழ்நிலையே பெரும்பாலும் அதற்குக் காரணமாகும். தாயன்பும், தந்தையின் பராமரிப்பும் ஆசிரியரின் ஆசாரமும் ஒன்று சேர்ந்து அமையப்பெற்றிருப்பவர் குரு ஆவார். ஆதலால்குருவின் பொறுப்பு தாய்தந்தையரின் பொறுப்பைவிட மேலானது. இத்தகைய பாங்குடைய குருமார்களை இக்காலத்தில் காண்பது அரிது. தங்களிடத்துள்ள மேலாம் பண்புகளையும் பயிற்சிகளையும் படிப்பையும் மக்களுக்கிடையில் எடுத்து வழங்க அவா மிகப் படைத்திருப்பவரே குரு ஆகிறார். தலைத்தரமான குரு தமக்குக் கிடைக்கும் சம்பளத்தையோ சன்மானத்தையோ கைக்கூலியையோ எதிர்பார்ப்பதில்லை. ஆனல் இக்காலத்திய சூழ்நிலை பணம் சம்பாதிக்க மனிதனைத் தூண்டுகிறது. பணம் சம்பாதிக்கும் மனப்பான்மை படைத்திருப்பவர்கள் குரு பக்தியை மாணக்கர்களுக்கிடையில் வளர்க்க வல்லவர்களாகமாட்டார்கள்.

சுவாமி துரியானந்தர் ஜீவிதம்

(310 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குணநலன்கள்

திதிக்ஷை பழகுதல் ஆத்ம சாதனமாகும். உடலுக்கு வரும் நோயைப் பொறுத்துப் பழகுவதும், புறத்திலிருந்து வரும் இன்னல்களை ஏற்றுப் பழகுவதும் திதிக்ஷை எனப்படும். சுவாமி துரியானந்தர் சிறந்த முறையில் இப் பண்பைப் பெற்றிருந்தார். ஒரு சமயம் அவர் தம் சிஷ்யர்களுடன் சாந்தி ஆச்ரமத்தில் தங்கி இருந்தார். அது நகரத்தைவிட்டுத் தள்ளிக் காட்டுக்குள் இருந்தது. ஆச்ரமத்தில் இருந்த அறை ஒன்றில் அவர் ஒரு நாள் தியானம் செய்து கொண்டு இருக்கும்பொழுது அவருடைய கையை விஷப்பூச்சி கொட்டியது. தியானத்தில் அமர்ந்திருந்தவாறே அதை மெதுவாகக் கையால் துடைத்தெறிந்துவிட்டுத் தியானத்தில் மூழ்கி இருந்தார். கை வீங்க ஆரம்பித்துவிட்டது. அடுத்த நாள் காலை கை முழுவதும் வீங்கி விட்டது. சிஷ்யர்கள் மிகவும் பயந்தார்கள். டாக்டரை அழைத்து வரவேண்டுமென்றால் அவர்கள் இருந்த இடத்திலிருந்து ஐம்பது மைல் சென்றாகவேண்டும். போவதற்கு வாகன வசதி எதுவும் இல்லை. குதிரைவண்டி அமர்த்திக்கொண்டுதான்போகவேண்டும். குதிரையோ மைதானத்தில் சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருந்தது. அதைப் பிடித்துக்கொண்டு வருவதும் கஷ்டமாக இருந்தது. அங்கிலையில் சிஷ்யர்களுக்கு என்ன செய்வது என்றே தெரிய வில்லை. தெய்வாதீனமாக ஆச்ரம வாழ்க்கை வாழவிரும்பி நியூயார்க்கில் இருந்து ஓர் அன்பர் அங்கு வந்திருந்தார். அவர் சிறந்த டாக்டராகவும் இருந்தார். சுவாமி துரியானந்தருடைய கையைப் பார்த்ததும் அதற்கேற்ற மருந்தைத் தன் பையில் இருந்து எடுத்து அவர் கையில் தடவி அதைக் குணப்படுத்தினர். பிற்காலத்தில் அவர் சுவாமிஜியினுடைய ஆர்வமுள்ள சிஷ்யராகி விட்டார். சுவாமி துரியானந்தர் கை வீங்கினதைப் பற்றியோ கை குணமானதைப் பற்றியோ சிந்திக்காதவராக இருந்தார். தம் உடலுக்கு வந்த துன்பத்தைப் பொருட்படுத்தாது இருந்ததன் மூலம் அவர் திதிக்ஷை பழகிவந்தார்.

சுவாமி துரியானந்தர் கள்ளங்கபடமற்ற மனம் படைத்தவராக இருந்தார். சத்தியம் தான் அவர் பேசுவார். பிறரை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காகச் சத்தியத்திற்குப் புறம்பானதைப் பேசமாட்டார். உலகத்தில் உள்ள மக்கள் அனைவரும் இறைவனுடைய குழந்தைகள் ஆகின்றார்கள். அவர்கள் யாவரிடத்திலும் இறைவன்குடிகொண்டு இருக்கிறான். நூல்கள் இவ்வுண்மையை வற்புறுத்துகின்றன என்பதைச் சுவாமி துரியானந்தர் நன்கு உணர்ந்திருந்தார். பிறரைத்திருத்தி அமைப்பதில் அன்பையே கையாண்டார். பிறர் தமக்குத் தீங்கு செய்தாலும் அதற்காக அவர்களுக்குப் பிரதி கேடு செய்யவேண்டுமென்று எண்ண மாட்டார். பல் உதட்டைக் கடித்துவிட்டால் பல்லைப் பிடுங்கி எறிந்து விடுவோமா என்று அவர் கேட்பார். உதட்டைக் கடித்த பல்லுக்கும் நாம் நலமே செய்வது போன்று நமக்குக் கேடு செய்தவருக்கும் நாம் நலமே செய்யவேண்டும் என்று பகர்வார். அங்ஙனமே அவர் நடந்தும் கொண்டார். துரியானந்த சுவாமிகள் யாரிடத்திலும் குற்றம் காணமாட்டார். சில சமயம் அவர் யாரையாவது கோபித்துக் கொள்வாரானால் அது அவருடைய நலனை முன்னிட்டே அமைந்திருக்கும். ஆத்ம சாதனம் செய்பவரின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் குறையைப் போக்குவதற்காகஅவரைக்கோபித்துக்கொள்வார். கோபித்துக்கொண்ட சமயம் அவர்கள் வருந்தினாலும் அது தங்களுடைய நலனுக்காகத்தான் என்பதைப் பின்னர் உணர்வார்கள். சுவாமி துரியானந்தரைப் பொருத்த மட்டில் புலனடக்கமே வடிவெடுத்தவராக இருந்தார். உணர்ச்சிகளை அவர் கட்டுப்படுத்தி வைத்திருந்தார்.

இறுதிக்கால வாழ்க்கை

காசியில் ராமகிருஷ்ண சேவாச்ரமம் இருக்கின்றது. அந்தச் சேவாச்ரமத்தில் சுவாமி துரியானந்தர் கடைசி நாட்களைக் கழித்தார். வாழ்க்கையின் கடைசிப் பகுதியில் அவருடைய தேகம் வலிவு குன்றுவதாயிற்று. ஆச்ரமத்தை விட்டு வெளியில் போவதற்குக்கூட அவருடைய

சரீரத்தில் போதுமான சக்தி இல்லை. ஒருநாள் குதிரைவண்டி ஒன்றில் வெளியே சென்று வந்தார். வண்டியில் ஏற்பட்ட அதிர்ச்சியை அவருடைய உடல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அடுத்தநாள் அவருடைய இடக்கை விரலில் வலி ஏற்பட்டு அது அதிகரிப்பதாயிற்று. வலி மிகவும் கடுமையாக இருந்தது. சுவாமியின் உடலில் சர்க்கரை நோய் இருந்ததால் விரலில் வீக்கம் ஏற்பட்டு அது நாளுக்கு நாள் பெரியதாகிக்கொண்டே வந்தது. அதை அறுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. வலி கடுமையாக இருக்குமென்று சொல்லிக்கொண்டே டாக்டர் அதை அறுத்தார். சுவாமிகளும் அதைப் பொறுமையாக ஏற்றுக்கொண்டார். மனதை அவ் விரலிலிருந்து அடியோடு முற்றும் விலக்கி எடுத்துக் கொண்டார். அதனால் அவர் அவ் வலியைப் பொருட்படுத்தாதவராக இருந்தார். உங்களுடைய விரலிலுள்ள வீக்கத்தை அறுத்தபொழுது வலி ஏற்படவில்லையா என்று ஒருவர் ஒருநாள் அவரைக் கேட்டார். சுவாமி துரியானந்தர் அதற்குப் பகர்ந்ததாவது : "மனம் ஒரு குழந்தை போன்றது. அதை நிறுத்திவைத்தால் ஒரு இடத்தில் நிற்காது. அது ஓடி அலையவே விரும்பும். ஒருநாள் அதை அதன் போக்கில் விட்டுவிட்டேன். அப்பொழுது கை வலியை உணர்ந்தேன். உடனே மனதைக் கட்டுக்குள் அடக்கி என்வசம் வைத்தேன். விரலை அறுக்கும்பொழுது மனதை அதிலிருந்து விலக்கி எடுத்துக்கொண்டேன். ஆகையால் வலியைப்பற்றி நான் உணராதிருந்தேன்." டாக்டர் சுரேஷ் ஒரு சமயம் தமக்கு ஏதாவது அருளுரை பகர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சுவாமிகள் அவரிடம் பகர்ந்ததாவது : "நீங்கள் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் திறமையாக உங்கள் பணியைச் செய்து வருகிறீர்கள். வைத்தியத்துறையில் மற்றவர்களுக்கு நீங்கள் வழிகாட்டியாகவும் இருக்கிறீர்கள். நீங்கள்மன அடக்கமும், உங்கள் தொழிலில் மன ஒருமுகப்பாடு உடையவராகவும் இருப்பதால் உங்கள் தொழிலில் நீங்கள் வெற்றி அடைந்து வருகிறீர்கள். அதே மன ஒருமுகப்பாட்டையும் ஊக்கத்தையும் கடவுள்பால் திருப்புவீர்களானால் அதிலும் வெற்றி அடைவீர்கள். வைத்தியத் தொழிலிலுள்ள மனதை எடுத்துக் கடவுள்பால் வையுங்கள். நீங்கள் பாரமார்த்திகத்துறையிலும் வெற்றி அடைவீர்கள். இதே பிறவியில் நீங்கள் கடவுள் காட்சி பெற்றாகவேண்டும் என்று தீர்மானம் செய்யுங்கள். காலதாமதம் செய்யாதீர்கள். சிரத்தைக்கேற்ற அளவு விரைவில் பலன் அடைவீர்கள். உப்புக்கணக்கு வைக்கத் தெரிந்தவன் சர்க்கரைக்கும் கணக்கு வைத்துக்கொள்வான். உலகவிஷயத்தில்செல்லும் மனதைப் பாரமார்த்திகத்தில் திருப்ப முடியுமானால் அதிலும் வெற்றி அடையலாம். கடவுள் நம் எல்லாரிடத்திலும் இருக்கின்றார். அவர் நம் உள்ளத்திலுள்ள ஆசைகளை எல்லாம் தெரிந்து வைத்திருக்கின்றார். ஊக்கத்தோடு சாதனை பயிலுகின்றவர்கள் ஞானம் பெறுவது திண்ணம்." சுவாமிஜியினுடைய அறவுரையைக் கேட்ட டாக்டர் சுரேஷ் ஊக்கமும் உற்சாகமும் உடையவராக வீட்டுக்குத் திரும்பினர்.

நாளுக்கு நாள் சுவாமி துரியானந்தருடைய உடல்நிலை மோசமாகிக்கொண்டே வந்தது. படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியாதவரானர். உடலை அசைப்பதற்கும் அவருக்குச் சக்தியில்லாது போயிற்று. பாட்னா கிளை ஸ்தாபனத்திலிருந்த சுவாமி ஞானேஸ்வரானந்தர் துரியானந்த சுவாமிகளைப் பார்ப்பதற்காகக் காசிக்கு வந்திருந்தார். சுவாமி துரியானந்தர் அவருடைய நலனை விசாரித்துவிட்டுப் பாட்னாவில் நடந்துவரும் பணிகளைப்பற்றி விசாரித்தார். ஞானேஸ்வரானந்த சுவாமி ஆங்கு நிகழ்ந்துகொண்டிருக்கும் சேவைகளைப்பற்றி விரிவாகச் சொன்னர். அவற்றைக் கேட்டு சுவாமி துரியானந்தர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். பாட்னாவில் எடுத்துக்கொண்ட பணி நல்ல முறையில் வளர்ச்சி அடைந்து வரட்டும் என்று கூறினர். நீங்கள் செய்கின்ற பணி இறைவனுடைய பணியாகும். உங்கள் முழு மனதையும் அப்பணியில் ஈடுபடுத்துங்கள். டார்ஜிலிங்கில் இருந்தபொழுது சுவாமி விவேகானந்தர் தாம் ஒரு புது மாற்றத்தைக் கண்டு பிடித்திருப்பதாக என்னிடம் கூறினர். தத்துவ விசாரத்தின் மூலமாகவும், ஜபத்தின் மூலமாகவும், தியானத்தின் மூலமாகவும் முக்தி பெறலாம் என்று எண்ணி வந்தனர். இப்பொழுது

கடவுள்பணி செய்வதன் மூலமாகவும் முக்தி அடையலாம் என்று தமக்குத் தோன்றுகிறது என்ருர். சுவாமி விவேகானந்தர் கூறியது முற்றிலும் உண்மை. இதில் ஐயத்துக்கு இடமே இல்லே. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் இப்பொழுது நரசேவையை நாராயண சேவையாகச் செய்வதன்மூலம் தங்களே முக்திக்கு ஆயத்தப்படுத்திவருகிருர்கள். ஞானனந்த சுவாமிகளிடம் சுவாமி துரியானந்தர் இங்ஙனம் பகர்ந்தார்.

சுவாமி துரியானந்தருக்கு முதுகுப் பிளவை நோய் வந்தது. அதை அறுக்கவேண்டிய நிலே ஏற்பட்டது. மருந்து மூலம் உடல் உணர்வை இழக்கச்சுவாமி துரியானந்தர் மறுத்துவிட்டார். மயக்க மருந்து தராமல் உடலே அறுக்கலாம் என்று டாக்டரிடம் பகர்ந்தார். டாக்டரை அறுவை சிகிச்சையைச் செய்யச் சொல்லிவிட்டு மனதை உடலிலிருந்து விலக்கி எடுத்துக் கொண்டார். டாக்டர் அறுவை சிகிச்சையைச் செய்து முடித்தார். அறுவை சிகிச்சையின் பொழுது சாந்தமாக இருப்பதைப் பார்த்து அனேவரும் ஆச்சரியப்பட்டனர். அடுத்தநாள் அப்புண்ணிலிருந்த தசையை விலக்குவதற்குக் கத்தரிக்கோலேப் புண்ணில் வைத்தபொழுது சுவாமி துரியானந்தர் வலியினுல் துடித்தார். முதல்நாள் அமைதியாக இருந்த நீங்கள் இரண்டாம் நாள் துடித்தது ஏன் என்று கேட்டார்கள். முதல் நாள் டாக்டர் எனக்கு எச்சரிக்கை தந்ததால் மனதைச் சரீரத்திலிருந்து விலக்கி எடுத்துக்கொண்டேன். ஆகையால் அன்று அறுவைசிகிச்சையின்பொழுது அமைதியாக இருந்தேன். இரண்டாம் நாள் எனக்கு அறிவிப்பில்லாது புண்ணில் கத்தரிக்கோலே வைத்தார். அது எனக்குப் பெரும் வேதனேயாக இருந்தது. நம்மைச் சரீரமயமாக உணரும்பொழுது சரீரத்திலுண்டாகும் துன்பம் நம்மைத் தாக்குகிறது. சரீரத்திலிருந்து நம்மைப் பிரித்துக்கொண்டால் சரீரத் துன்பத்தை நாம் உணர்வதில்லே என்று சுவாமி துரியானந்தர் பகர்ந்தார்.

1922ல் சுவாமி பிரம்மானந்தர் கல்கத்தாவில் சமாதி அடைந்துவிட்டார். அதற்கும் கொஞ்ச காலத்துக்கு முன்புதான் அன்னேயாருடைய பூதவுடலும் இவ்வுலகத்தைவிட்டு மறைந்தது. சுவாமி அற்புதானந்தர் மறைவைச் சுவாமி துரியானந்தர் நேரிலேயே கண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அருட்செல்வர்கள் ஒருவர்பின் ஒருவராக இவ்வுலகத்தைவிட்டு மறைந்தனர். இந்த நிகழ்ச்சிகளெல்லாம் சுவாமிதுரியானந்தருடைய உள்ளத்தில் ஒன்றன்பின் ஒன்ருக வந்தன. சுவாமி துரியானந்தரும் இவ்வுலகத்திலிருந்து மனதை விலக்கி எடுத்துக்கொண்டார். ஒருநாள் அவர் பகர்ந்ததாவது: "இன்னும் மூன்று மாதங்களுக்குள் நானும் இவ்வுலகத்தை விட்டுப்போகப் போகிறேன். குருதேவரும், சுவாமி விவேகானந்தரும் சென்ற இடத்துக்கு நானும் செல்வேன்.'' இங்ஙனம் அவர் கூறியது போன்றே மூன்று மாதங்களுக்குள் அவர் மறைந்தார். 1922ஆம் ஆண்டு மத்தியில் மீண்டும் ஒரு பெரிய அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. அப்பொழுதும் அவர் மயக்க மருந்து எடுத்துக்கொள்ளாமல் அவ் அறுவை சிகிச்சையை ஏற்றுக்கொண்டார். ஆனல் அதன் பிறகு அம் முதுகுப் பிளவை நோய் குணமாகாது முதுகு முழுவதும் பரவியது. டாக்டர்களும் நம்பிக்கையை இழந்துவிட்டனர். சுவாமி துரியானந்தருடைய உடல்நிலே மிகவும் சீர்கெட்டு வருகின்றது என்ற செய்தி எல்லாக் கிளே ஸ்தாபனங்களுக்கும் பரவியது. கிளே ஸ்தாபனங்களிலுள்ள தலேவர்கள் சுவாமிகளேப் பார்க்க வந்தார்கள். அப்படி வந்த சாதுக்களுள் சுவாமி அகண்டானந்தர் சுவாமி துரியானந்தருடன் தங்கி இருந்தார். சுவாமி துரியானந்தருக்குத் தாங்கமுடியாத வலி உண்டானபொழுது சுவாமி அகண்டானந்தர் இறைவனுடைய நாமத்தை உரக்க உச்சரித்தார். சுவாமி துரியானந்தர் அதைக் கேட்டு அமைதி அடைந்தார்.

சரீரத்தை விட்டுப் பிரியவேண்டிய காலம் நெருங்கி வரவர அவருடைய உள்ளம் அழியாத ஆனந்த நிலேயைப்பற்றி எண்ண ஆரம்பித்தது. அப்பெரு நிலேயைத் தியானிப்பதற்குச் சுவாமி துரியானந்தர் எழுந்து உட்கார முயன்ருர். அவருக்குத் துணேயாகப் பக்கத்தில் இருந்தவர்கள் சரீரத்தைத் தாங்கிப் பிடித்தார்கள். ஆனல் சுவாமி துரியானந்தர் உதவி தேவை இல்லே என்றும் தாமே எழுந்து உட்கார்ந்து கொள்ளமுடியும் என்றும் கூறினர். அவ்வளவு

தன்னம்பிக்கை உடையவராக இருந்தார். அவர் சரீரம் மறைவதற்கு ஒரு நாளைக்கு முன்பே நாளைக்குத்தான் கடைசி நாள் என்று பகர்ந் தார். அவர் கூறியதனுடைய பொருள் மற்ற வர்களுக்கு விளங்கவில்லை. மரணமடைவதற்கு முதல் நாள் அவர் தெளிவாகப் பேசினர். தமக்கு நோயின் துன்பம் எதுவும் இருப்பதாக அவர் காட்டிக்கொள்ளவில்லை. 1922ஆம் ஆண்டு ஜூலைமாதம் 21ஆம் நாள் இவ்வுலகத்தை விட்டு அவர் பூத உடல் மறைந்தது. அன்று அதி காலை சுவாமி அகண்டானந்தர் சுவாமி துரியா னந்தரைப் பார்ப்பதற்கு வந்தார். அவரிடம் சுவாமி துரியானந்தர் பகர்ந்ததாவது: "நாம் அன்னை பராசக்திக்கு உரியவர்களாகின்றோம். அன்னை பராசக்தி நமக்குரியவளாகின்றாள். இதை நீங்கள் அடிக்கடி கூறுதல் வேண்டும்." இங்ஙனம் அவருக்குக் கூறிவிட்டு அதை அவர் பலமுறை திருப்பித் திருப்பிச் சொன்னர். தேவிக்கு நமஸ்காரம் செய்து சர்வமங்கள மாங்கல்யே என்று துவங்கும் தேவி ஸ்தோத் திரத்தை நண்பகலிலும் மாலையிலும் பாடினர். அன்று மாலை அவர் எழுந்து தியானநிலை யில் உட்காருவதற்கு முயன்றார். சரீரத்தில் சக்தி இல்லாததால் அவரால் உட்கார முடிய வில்லை. அப்பொழுது அவர் பகர்ந்ததாவது: "சரீரம் விழப்போகிறது. பிராணன் உடலை விட்டுப் பிரியப்போகிறது. என்னுடைய கால் களை நீட்டி விடுங்கள். என்கைகளை உயர்த் துங்கள்." அவருடைய கைகளை உயர்த்திய தும் கைகளைக் கூப்பிக்கொண்டு தேவியின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு பலமுறை நமஸ்காரம் செய்தார். கடைசியாக அவர் தெளிவாக யாவற்றிலும் பிரம்மத்தைக் காணும் காட்சியைப் பெற்றவர் போன்றுபேசியதாவது: "இப்பிரபஞ்சம் சத்தியம். பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் சத்தியம். எல்லாம் சத்தியம். பிரம்மம் சத்தியம். இவ்வுலகம் பிரம்மம். யாவும் பிரம்மம். பிரம்மத்தில் பிராணசக்தி இருக்கிறது. ஜெய் குருதேவா! ராமகிருஷ்ணரே போற்றி! ராமகிருஷ்ணரே போற்றி! சத்தியமே ராம கிருஷ்ணர். ஞானமே ராமகிருஷ்ணர்." சுவாமி அகண்டானந்தர் 'சத்தியம்ஞானனந்தம்பிரம்மம், பிரக்ஞானம் ஆனந்தம் பிரம்மம்' என்று பகர்ந் தார். அதைக்கேட்கச் சுவாமி ஆனந்தம் அடைந் தார். மீண்டும் மீண்டும் அதைச் சொல்லுங்கள் என்று சுவாமி துரியானந்தர் மகிழ்ச்சியோடு கூறினர். சுவாமி அகண்டானந்தர் இரண்டு முறை கூறினர். முதல் முறை சுவாமி அகண் டானந்தரோடு சேர்ந்து கொண்டு சுவாமி துரி யானந்தர் தாமும் கூறினர். பிறகு அமைதியானர். அவருடைய மனது பிரம்மத்தில் லயமாகிவிட அவர் சரீரத்தில் இருந்து நிரந்தரமாக விலகிக் கொண்டார். 1922ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் தேதி பிற்பகல் ஆறேமுக்கால் மணிக் குப் பூத சரீரத்திலிருந்து விலகிக்கொண்டார்.

பிராணன் சரீரத்தை விட்டுப் பிரிந்த பின் அவர் பார்ப்பவர்களுக்கு அமைதியாகத் தூங்குபவர் போலக் காட்சியளித்தார். துயர அறிகுறிகள் எதுவும் அவர் முகவிலாசத்தில் தெரியவில்லை. அவருடைய முகத்தில் ஒளியும் இனிமையும் தென்பட்டன. அவ்வளவு அமைதி யான முறையில் பூரணப் பிரக்ஞையோடு அவர் உலகத்தைவிட்டு மறைவார் என்று யாரும்எதிர் பார்க்கவில்லை. அவர் வாழ்க்கையின் கடைசி யில் சில நாட்கள் உள்முகப்பட்ட மனமுடைய வராகவே இருந்தார். பெரும்பாலான நேரம் கண்களை மூடிக்கொண்டு இருந்தார். கடைசி நேரத்தில் கண்கள் இரண்டையும் நன்கு திறந் தார். சுற்றிலும் அருள் உணர்வோடு பார்த்தார். ஐம்பத்து ஒன்பது ஆண்டுகள் இம்மண்ணுல கில் வாழ்ந்து பாரமார்த்திகப் பெருவாழ்வை மக்களுக்கு அளித்துச் சென்றார். பாரமார்த்திக வாழ்வு எப்படி வாழவேண்டும் என்பதைத் தம் வாழ்க்கை மூலம் நிரூபித்துக்காட்டினர். தியாக வாழ்வும், தூய வாழ்வும் அவர் மூலம் விளக்கம் பெற்றன. அவருடைய பாரமார்த்திக வாழ்வு நமக்கு ஒரு வழிகாட்டியாக அமைவது ஆகுக.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நேர் சிஷ்யர்கள் அனைவரையும் அறிந்துகொண்டால் நாம் ராம கிருஷ்ணரை அறிந்தவர்களாவோம். ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய ஒவ்வொரு பேரியல்பும் அவ ருடைய சிஷ்யர்களாக உருவெடுத்து வந்தது எனலாம். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தியாகமும் தூய்மையும் சுவாமி துரியானந்தராக வடி வெடுத்து வந்தது எனலாம். சுவாமி துரியா னந்தர் வாழ்வு தூய்மைக்கும், தியாகத்துக்கும், பக்திக்கும் தெளிவான சிறந்ததொரு விளக்க மாக அமைந்திருக்கிறது. (முற்றும்)

முஸ்லீம்பண்டிதரும் ஸநாதன தர்மமும்

[பாரத்வாஜ ஆச்ரமத்தை நிறுவிய காலம் சென்ற ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் பால பாரதியில் எழுதியது]

முஸ்லீம்கள் ஹிந்து தர்மத்தைக் கேவலமாக மதிக்கிறார்கள் என்பது நாட்டில் பெரும்பாலரின் அபிப்பிராயமாக இருக்கிறது. முஸ்லீம்கள் ஹிந்துக்களைக் காப்பிரிகள் என்று சொல்வதும், அதற்குப் பதிலாக ஹிந்துக்கள் முஸல்மான்களை மிலேச்சர்கள் என்று சொல்வதும் இன்னும் தீர்ந்தபாடில்லை. ஆனால் இஸ்லாம் மதத்தின் தத்துவங்களையும் ஸநாதன தர்மத்தின் தத்துவங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பண்டிதர்களும் உலேமாக்களும் ஒருவரையொருவர் மரியாதையோடும் கௌரவத்தோடும் பாவிப்பார்கள் என்பதில் தடையில்லை. தற்காலம் உத்தியோக ஆசையால் தோன்றி வளர்ந்திருக்கிற பரஸ்பர அசூயையும் குரோதமும் இந்தச் சத்தியத்தை மேகம் மூடுவது போன்று மூடிவிட்டிருக்கிறது. ஹிந்துஸ்தானத்தைப் படையெடுத்து, அதிலுள்ள அநேக ராஜ்யங்களின் சுதந்திரத்தை அழித்து, சிற்சில வேளைகளில் மனிதர் செய்யத்தகாத அக்கிரமங்களைச் செய்த அன்னியர்கள் பெயருக்குமாத்திரம் இஸ்லாம் தர்மத்தைத் தழுவி, அதன் வெளிப்படையான சம்ஸ்காரங்களைப் பெற்று இருந்தமையாலும் கடவுளுடைய மகாகூடமான சங்கற்பத்தில் இஸ்லாம் தர்மமும் இந்த அன்னியருடைய சைனியத்தின் பின்னணியிலே தான் வந்து இந்நாட்டில் பரவத் துவங்கினதாலும், ஹிந்துக்களுக்கு இஸ்லாம் தர்மத்தின் மீது அசூயை பிறப்பது இயற்கையே. பகிர்முகமாகப் பார்க்கையில் பல்வேறு தெய்வங்களை வணங்கச் செய்யும் ஹிந்துக்களை 'லா இலாஹி இல் அல்லாஹ்' என்று கம்பீரமான சிங்கநாதத்தை மூலமந்திரமாகக்கொண்ட முகமதியர்கள் கேவலமாக மதிப்பதும் சகஜமே. ஆனால் ஹிந்துக்கள் கஜனிமாமூதையும், கவுரி ஷஹாபுதீனையும், பாபரையும், ஔரங்கஜேபையும் இஸ்லாமிய தர்மத்தின் பிரதிநிதிகளாகப் பாவிக்கக் கூடாது. மற்று, அக்கிரமம் செய்த அன்னிய அரசர்களாகத்தான் அவர்களை எண்ண வேண்டியது. அவர்கள் பங்கில் முஸ்லீம்கள் ஸநாதன தர்மத்தின் மூல தத்துவங்களை ஆராயாமல் அதைக் குறைவாக மதிப்பது அறியாமை என்று உணரவேண்டியது.

இவ்விரு திறத்தவரும் ஒருவரையொருவர் நன்கு மதித்துக்கொள்ள வேண்டுமானால் ஒவ்வொருவரும் மற்றவருடைய வேத சாஸ்திரங்களின் போக்கை அறிந்து கொள்ளவாவது முயலவேண்டும். மனித ஜாதியில் ஒரு பிரதானமான வகுப்பு உண்மை ஞானமில்லாமல் அநேக நூற்றாண்டுகள் ஜீவித்துவர முடியுமா என்றும், அதிலும் ஜயம்பெற்று நிற்குமா என்றும், தனக்குள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஹிந்துக்கள் மூட ஆவேசத்தினால் முஸ்லீம்களை அசுத்தமான மாக்கள் என்றும், மிலேச்சர்களென்றும் சொல்லலாம்; முஸல்மான்கள் ஹிந்துக்களைக் காப்பிரிகள் என்று சொல்லி அவமதிக்கலாம். ஆனால் இவ்விரு வகைக் கொள்கையினரும் கடவுளின் சரி சமமான புத்திரர். கடவுளுக்குப் பாரபக்ஷம் கிடையாது. அவனவனுடைய யோக முயற்சிக்கு ஏற்ற வண்ணம் அவனவனுக்கு அத் தனிப்பெருஞ் சுடர் தன்னைத்தான் பிரகாசிப்பித்துக்கொள்கிறது. ஜீவகோடிகள் அனைவரிடத்தும், ஜாதி மத வேற்றுமை பாராட்டாமல், பராசக்தி தாயினும் பன்மடங்கு கொண்ட அன்பு செலுத்தி வருகிறாள் என்பதில் யாரேனும் ஐயப்படுவார்களா? ஆகையால் இதை மனதில் ஆழமாகப் பதியவைத்துக்கொண்டு முஸல்மான்களும் ஹிந்துக்களும் ஒருவர் மற்றவர்களுடைய பழக்க வழக்கங்களையும், சாஸ்திர வேத புராணங்களையும், இதிகாசங்களையும் ஆராய்ந்து பார்க்கக் கடவர்.

சில முஸ்லீம் மகா பண்டிதர்கள் இவ்வாறு ஹிந்துக்களின் தர்மங்களையும் பழக்க வழக்கங்களையும் ஆராய்ந்து பார்த்துத் தங்கள் அபிப்பிராயங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். முஸல்மான் அரசர் ஹிந்துக்களை இம்சிக்கப்போந்தபோது பல ஆலீம்கள் ஸநாதன தர்மத்தின் பெருமைகளை — தங்களுக்குத் தெரிந்த அளவுக்கு—எடுத்துக்காட்டி இம்சிக்காதபடி தடுத்திருக்கிறார்கள். இக் கட்டுரையில் இவ்வாறு முகம்மதிய உலேமா மனச் செம்மைகாட்டிய சந்தர்ப்பங்கள் சிலவற்றை எடுத்துப் படிப்

போருக்குக் காட்டுவதுடன், சில உலேமாக்கள் ஹிந்து தர்மங்களைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயங்களையும் மொழி பெயர்த்து எழுதுவோம். இதனல் முஸல்மான்களும் தங்கள் ஆலிம்கள் கொண்டாடியிருக்கிற ஸநாதன தர்மத்தைக் கீழாக மதித்தல் தவறென்று நினைத்து அந்த உயரிய தர்மத்தை ஆராயத் துவங்குவார்கள் என்றும், ஹிந்துக்களும், முஸ்லீம் கல்விமான்கள் தர்மத்தை ஆராய்ந்து பார்த்து அதை நன்கு மதிக்கிருர்கள் என்று கண்டு,முஸ்லீம்களின் மீது அசூயை இருப்பின் அதை விட்டுவிடுவார்கள் என்றும் நம்புகிறோம்.

ஸிக்கந்தர் லோதி என்று ஓர் அரசன் தில்லியில் ஐந்நூறு வருஷங்களுக்கு முன் அரசாண்டு வந்தான். சில விஷமப் புத்தியுள்ள முஸ்லீம் பண்டிதர்கள் ஸ்தானேசுவரத்தில் ஹிந்துக்கள் புண்ணிய தீர்த்த ஸ்நானம் செய்து உற்சவம் கொண்டாடுவதைத் தடுத்து விட வேண்டுமென்று அவனுக்கு யோசனை சொன்னுர்கள். ஆனல் அவன் சபையில் மியான் அப்துல்லா அஜோதினி என்ற ஒரு மேதாவி இருந்தான். அவன் ஹிந்துக்களுடைய தர்மங்களைப் பற்றி ஆராய்ந்திருந்ததோடு, அரசன் பிரஜைகளை எவ்வாறு பரிபாலிக்க வேண்டும் என்கிற விஷயத்தைப் பற்றியும் ஆழமாக யோசித்து வைத்திருந்தான். ஆகையால் மேற்சொன்ன உலேமாவின் யோசனையைக் கண்டித்து, ஹிந்துக்களின் உற்சவங்களை ஒருநாளும் தடுக்கக்கூடாது என்று ஸிக்கந்தருக்குச் சொல்லி அத்திருவிழாவை வழக்கம்போல நடைபெறும்படி செய்தான். இதனல் ஸிக்கந்தரின் அரசாட்சியில் ஹிந்துக்களும் முஸல்மான்களைப் போலவே திருப்தியுடன் வாழ்ந்து அவ்வரசனிடம் ஆழ்ந்த அன்பு செலுத்தி வந்தார்கள். தில்லியில் வசித்த பெரிய சட்ட நிபுணனை மௌலானுஷா அஜிஜ் என்பவன் 'பஷாரத் அஹமதி' என்ற தனது நூலில் ராமனைப்பற்றி அவமதிப்பாகப் பேசக்கூடாது என்று கூறியுள்ளான். கண்ணபிரானைப் பற்றிப் பின் வருமாறு எழுதுகிருன்.

"கன்னையாஜியைப் பற்றி (பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றி) நாம் கேவலமாகப் பேசக்கூடாது. ஹிந்துக்களின் சத்திய நூல்களில் சிறந்ததான பகவத்கீதையினின்று கன்னையாஜி ஆத்ம போதம் நிறைந்த ஒரு பரமகுருவாக இருந்தார் என்று ஏற்படுகிறது. அவருடைய திருக்கோயிலான மதுரா அன்புக்கே ஆயதனம் என்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை."

லக்னௌவுக்குப் பக்கத்திலிருக்கிற பன்ஸாவிலிருந்த மௌலானு ஷா அப்துல் ரஜாக் என்பவன் அவன் காலத்தில் உத்தமோத்தமனை யோகியாகவும் பக்தனுமாகவும் இருந்தான். இன்றைக்கும் அவனுடைய சமாதிக்கு ஆயிரக்கணக்கான முகம்மதியர் சென்று தரிசனம் செய்து கொண்டு பிரார்த்தனை செலுத்துகிருர்கள். இந்த மகான் மக்கா ஷரீபுக்கு ஹஜ் போகும் பொழுது கண்ணன் பிறந்த திருநகராகிய மதுராவில் தங்கின தினத்தில், கிருஷ்ண பரமாத்மாவை ஸ்வப்னத்தில் தரிசித்துப் பரமானந்தம் கொண்டதாகத் தனது நண்பரோடு அடிக்கடி சொல்லுவானும்.

அக்பர் சக்கரவர்த்தியின் சகாவும் சபாபூஷணமுமான அபுல் பஜலை அறியாதார் இல்லை. இவன் பாரசீக முகம்மதியன். ஆனல் ஸம்ஸ்கிருத பாஷையை ஆழமாகக் கற்று, அதிலுள்ள வேத சாஸ்திரங்களையும் நன்கு ஆராய்ந்து அவன் ஹிந்து தர்மத்தின் பெருமைகளை நன்ருக உணர்ந்து கொண்டிருந்தான். அவனுடைய அயின்—இ—அக்பரி என்னும் நூலில் ஹிந்து தர்மத்தின் புகழ் அனேக இடங்களில் காணப்படும். அதினின்று ஓரிரண்டு வார்த்தைகள் தாம் ஈண்டு எடுத்துக் காட்ட முடியும். அவை பின்வருமாறு:

"ஹிந்து நூல்களில் அனேகம் உயர்ந்த, விலை மதிப்புக்கடங்காத தர்மோபதேசங்கள் காணப்படுகின்றன. தங்கள் பிராணனைக்கூடக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய ஹிந்துக்கள் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிருர்கள். கடவுள் ஒருவனே என்பது அவர்களுடைய மதம்... ...தனிப்பெருங் கடவுள் ஒருவனே திரிமூர்த்தி ஆகிருன் என்று அவர்கள் கூறுவர். இது கிறிஸ்துவர்களின் திரிமூர்த்தி மதம்போன்றதோர் மதம். அவர்களில் இன்னெருசாரர் பக்தியினலும்,ஆத்ம சுத்தியினலும் யம நியமங்களாலும் மனிதன் மேன்மையை அடைகிருன் என்பர். ஆனல் எது எவ்வாறு இருப்பினும் இவர்களிடம் காணப்படும் ஒழுக்கமும் தவமும் உலகத்தில் வேறு எங்கும் காணமுடியாது."

கஜினி மாமூதின் காலத்தில் பரத கண்டத்துக்கு வந்துஇந்நாட்டின்நாகரிகமனைத்தையும் ஆராய்ந்து பார்த்திருக்கும் அல்பருனிஎன்பவன் நம்மைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறான்.

"கடவுளைப் பற்றி ஹிந்துக்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் இதுவாகும். அவன் ஏகன்; ஆதியும் அந்தமும் இல்லாதவன்; சாசுவதன்; எதனாலும் கட்டுப்படாத சுயேச்சா சங்கற்பன்; சர்வ சக்தன்; சர்வக்ஞன்; உயிருக்கெல்லாம் உயிராய் நிற்கிறான்; அவனே உயிர்க்கடல்; நேதா; ரக்ஷிதா; உவமைக்கும் அனுபமைக்கும் அதீதமாக நின்று சர்வத்தையும் ஆளுகிறவன்; அவனோடு எதையும் ஒப்பிட முடியாது; அவனையும் எதற்கும் ஒப்பிடுதல் முடியாது!"

மிர்ஜா மஜேர் ஜன்ஜன என்று ஒரு மகான் இருந்தான். அவனுடைய பாதரக்ஷையை அவன் காலத்துப்பெரிய ஆலிமான காஜிஸனு-உல்-லா என்பவன் கையில் தூக்கிச் செல்வான் என்றால் அவனுடைய பெருமை ஒருவாறு படிப்போரால் ஊகிக்கப்படும். அவன் ஒரு கடிதத்தில் ஹிந்துக்களைப்பற்றி எழுதுகிறான். அக்கடிதம் இன்னும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அதன் முக்கியமான பாகம் பின் வருமாறு:

"ஹிந்துக்களுக்குள்ளே உள்ள ஒவ்வொரு சமயத்தவரும் கடவுள் ஒருவனே என்று பூரணமாய் உணருகிறார்கள்......அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள் என்பது தவறு. விக்கிரகங்களில் கடவுளை ஆவாகனம் செய்து அவ்வாறு ஆவாகனம் செய்யப்பட்ட கடவுளைத் தான் அவர்கள் வணங்குகிறார்கள்...இதிலிருந்து ஹிந்து தர்மம் தெய்வீகமான ஒரு தர்மமென்றும், யூத தர்மத்தைப் போலவும் கிறிஸ்தவ தர்மத்தைப் போலவும், தற்பொழுதுதான் (இஸ்லாம் தர்மம் தோன்றிய பிறகு) ரத்து செய்து விடப்பட்டது என்றும் தெளிவாக ஏற்படுகிறது. நம்முடைய வேத நூல்கள் ஹிந்துக்களைப்பற்றிப் பேசாததால் அவர்கள் காப்பிரிகள் என்று கூறுதல் சரியாகாது. ஈசுவரனுடைய குணங்களை உருவமாக்கி விக்கிரகங்கள் செய்து, அக்குணங்களைத் தாங்கள் பெறுவதற்காக அவ்விக்கிரகங்களுக்கு முன்னே நின்று அவர்கள் தியானம் செய்கிறார்கள். உண்மையில் முஸ்லீம் ஸூபிகள் சாதனை புரிகின்ற ஜிகர்-இ-ராப்தா என்கிற மார்க்கத்துக்கும் இதற்கும் யாதொரு பேதமுமில்லை. அஸத் தர்மத்தில் வீழ்ந்திருந்த அராபியர்களின் விக்கிரகாராதனைக்கும் ஹிந்துக்களின் விக்கிரகாராதனைக்கும் சம்பந்தமே இல்லை!

தேனூட்டும் தென்மொழியும் தெருவோட்டும்
வடமொழியும் தெளியத் தேர்ந்து
மேனாட்டின் பலமொழியும் மிகக்கூட்டிக்
கடைந்தறிந்த ஞானமெல்லாம்
தாய்நாட்டின் விடுதலைக்கே தனிநாட்டித்
தவம்புரிந்த தகைமை யாரோ!
வானாட்டின் சிறந்த தென்பாய் தமிழ்நாட்டைத்
துறந்துநீபோய் வாழ்வ தெங்கே?

முழுமதி உயிர்த்தா லன்ன முகந்திகழ் கருணை நோக்கும்
மூர்க்கரும் நேரிற் கண்டால் முகந்திடும் சாந்த வீச்சும்
குழலினும் இனிய தானக் குழந்தையின் மழலைப் பேச்சும்
குவிந்திடும் உதட்டின் மீது கூத்திடும் சிறப்பின் கூட்டும்
தழலினும் தூய வாழ்வும் தாயினும் பெரிய அன்பும்
சத்திய நிலையும் முன்னாள் தவமுனி இவனே யென்னப்
பழகிய பேயும் போற்றும் படித்தொரு வடிவந் தன்னைப்
பாரிடை இனிமேல் வேறு யாரிடைப் பார்ப்போ மையா!

(நாமக்கல் ஸ்ரீ வே. ராமலிங்கம் பிள்ளை பால பாரதியில் வ. வே. சு. ஐயரைப்பற்றி எழுதியது)

அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்

(சுவாமி துருவானந்தர்)

குழந்தையொன்று உணவு உண்ண மறுக்கிறது. தாய் எவ்வளவோ சொல்லியும் அது கேட்பதாக இல்லை. அதனுடைய நினைவெல்லாம் விளையாட்டில்தான் ஊறிக் கிடக்கிறது. தன் குழந்தையை எப்படியாவது உணவு உண்ணச் செய்யவேண்டுமென்று விரும்புகிற தாய் என்ன செய்கிறாள்? விளையாட்டுச் சாமான்கள், மரப்பாச்சி, பொம்மை முதலியவற்றைக் குழந்தைக்குக் காட்டி 'நீ முதலில் சாப்பிட்டால் தான் இந்தப் பொம்மைகளை உனக்குத்தருவேன்' என்று ஆசை வார்த்தை காட்டி குழந்தையை எப்படியோ உண்ண வைத்து விடுகிறாள். இது நாம் காணுகிற காட்சி. அன்னை பராசக்தி அகிலாண்டத்திலும் உள்ள ஜீவர்களை விளையாட வைத்து வேடிக்கை காட்டுகிறாள். விளையாட வைத்துக் கொண்டேயிருப்பது அவள் நோக்கமன்று. ஜீவர்களுக்கு உலக சம்பத்தாகிய பொம்மைகளைக் காட்டி அதில் சலிப்படைய வைத்துப் பிறகு தன்னிடம் வரவழைத்துக் கொள்கின்றாள். பெருநிலையைத்தர அவள் கையாளும் யுக்தி அதுவாகும்.

தான் எதைக் கேட்டாலும் மறுக்காது அதை உடனே கொடுக்கும்தாயைத்தான் எந்தக் குழந்தையும் நேசிக்கும். அதேபோன்று அகிலாண்ட நாயகி வழங்குகின்ற இகலோக சம்பத்துக்களை எண்ணி வியந்த அபிராமிபட்டர் அவளின் கருணைத்திறனை,

" தனம் தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும்
தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி
கடைக்கண்களே " என்கிறார்.

மக்களனைவரும் ஏதாவது ஒரு பயன் கருதியே எந்தக் காரியத்திலும் பிரவேசிப்பர். ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை தெற்றெனப் புலப்படும். கோயிலுக்குப் போவதைச் சான்றாக எடுத்துக் கொள்வோம். கோயிலுக்குப் போகிற கூட்டமனைத்தும் ஆயுள், ஆரோக்கியம், செல்வம், குழந்தைப்பேறு, பதவி உயர்வு முதலியவைகளை நாடித்தான் போகிறார்கள். பக்தி வேண்டும், முக்தி வேண்டும் என்று போகிற கூட்டம் அரிதிலும் அரிது. இகலோகத்துக்கு மகிழ்ச்சியும், இன்பமும் தந்து நிம்மதியாக வாழ வழி கொடுப்பது செல்வம். அது தனம் என்று சிறப்பாகச் சொல்லப்படுகிறது. தனம் படைத்தவன் தனவான் என்று புகழப்படுகிறான். பணம் படைத்தவனிடம் கல்வி கற்ற பண்டிதனும் கைகட்டி நிற்பதைக் காண்கிறோம். எவ்வளவு பெரிய கல்விமானாக இருந்தாலும் அவனிடம் செல்வம் மட்டும் இல்லாது போனால் அவனுடைய மனைவியோ, தாயோ யாரும் அவனை மதியார். செல்வத்திற்கு அதிதேவதை லக்ஷ்மிதேவி. அம்பிகை அஷ்டலக்ஷ்மியாகத் தன்னைப் பக்தர்களுக்குக் காட்டி அருள்பாலிக்கின்றாள்.

தனம் தந்ததோடு அவளுடைய அருள் முடியவில்லை. அவள் கருணையோடு கல்வியையும் வழங்குகின்றாள். தனம் தரும் கல்வி தரும் என்பதே பாட்டின் துவக்கம். இக்காலத்தில் பலர் பெற்றுவருகிற B. A, M. A., போன்ற பட்டப் படிப்பைத் தான் கல்வி என்று கருதுகின்றனர். விவேக வைராக்யத்தை எது ஊட்டவல்லதோ அதுவே கல்வி ஆகும். வள்ளுவரும் இதைத்தான் 'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து' என்கிறார். ஒரு பிறவியில் தான் கற்ற கல்வி பிறவி எடுக்கும் தோறும் தொடர்ந்து வரும் என்பது இந்தக் குறட்பாவின் பொருள். ஆனால் S.S.L.C. அரசாங்கத்தேர்வு நடத்துகிற அன்று கேள்வி அனைத்திற்கும் மாணவர்கள் சிறப்பாகப் பதில் எழுதுகிறார்கள். ஆனால் ஓரிரு மாதத்திற்குப் பிறகுமீண்டும்திடீர் என்று முன்னறிவிப்பின்றித் தேர்வு வைத்து அதே கேள்விகளைக் கொடுத்தால் எத்தனை மாணக்கர்கள் தேறுவார்கள்? தேர்ச்சி பெற்ற மாணக்கர்கள்கூடத் தேறுவார்களா என ஐயுறவேண்டியுள்ளது. அப்படி இரண்டு மாதத்திலே மறந்துபோகிற இக்காலக் கல்வி எப்படி அடுத்தடுத்து வருகிற பிறவியில் தொடர்ந்து வரும் என்று சொல்ல முடியும்?

இதுவா உண்மையான கல்வி? விவேகம், வைராக்யத்தை ஊட்டுகிற கல்வியே சாகாக் கல்வி. அதுதான் மரணமிலாப் பெருவாழ்வை நல்குகிற கல்வி. இந்தக் கல்விதான் வேண்டும் என ஆதிசங்கரரும் அன்னபூரணியிடம் வேண்டுகிறார்.

अन्नपूर्णे सदापूर्णे शंकरप्राणवल्लभे
ज्ञानवैराग्य सिद्ध्यर्थं भिक्षां देहि च पार्वति ।

தாயே, கருணை உள்ளம்கொண்ட அன்னபூரணி எனக்கு ஞானம், வைராக்யம் என்ற பிச்சை அளித்து அதிலே நான் நிலைத்திருக்கும்படி அனுக்ரஹம் செய்வாயாக என்று வேண்டுகிறார்.

லக்ஷ்மிதேவியை மாமியார் என்றும், சரஸ்வதிதேவியை மருமகள் என்றும் புராணம் கூறுகிறது. மாமியாரும், மருமகளும் ஒரே இடத்தில் ஒத்து இருப்பதில்லை என்ற உலக நடைமுறையைச் சுட்டிக்காட்டி, செல்வம் இருக்கிற இடத்தில் கல்வி இராது, கல்வி இருக்கிறஇடத்தில் செல்வம் இராது என்று நகைச்சுவையாகக் கூறுகின்றனர். ஆனல்அம்பாள் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிருள். இடப் பக்கம் லக்ஷ்மிதேவியும், வலப் பக்கம் சரஸ்வதியும்சாமரங்கொண்டு அம்பாளுக்கு விசுகிருர்கள் என்று சொல்லப்படுகிறது. ஸசாமர-ரமாவாணி ஸவ்யதக்ஷிண ஸேவிதா என லலிதா ஸஹஸ்ரநாமம் கூறுகிறது. எப்போதும் ஒன்று சேராத கல்வியும், செல்வமும் அம்பிகையின் முன்னிலையில் பேதத்தை மறந்து ஐக்கியப்படுகின்றன. ஆக அம்பிகையே லக்ஷ்மிதேவியாகவும் சரஸ்வதியாகவும் காட்சி கொடுக்கிருள். ஆகவே அம்பிகையை முறையாக வழிபடுகின்றவர்களுக்கு அம்பிகையின் கடைக்கண்கள் தனம் தரும்; கல்வி தரும் என்று சொல்லப்படுகிறது.

மூசுவரிவண்டு போல எங்கெங்கோ அலைந்து பொருள் சேர்க்கிருன் ஒருவன். அப்பணத்தை எடுத்து ஒரு வியாபாரத்தில் முதலிடு செய்கிருன். எதிர்பாராத விதத்தில் வியாபாரம் நஷ்டமடைந்து போட்ட பணமெல்லாம் கை நழுவிப்போகிறது. இந்த நிலையில் ஒருவனுடைய மனம் என்ன பாடுபடும்! அவனுடைய மனம் தளர்ந்து, நிலைகுலைந்து போகிறது. வாழ்க்கையே அவனுக்குக் கசக்கிறது. ஆனல் உறுதியான உள்ளம் படைத்த விவேகி ஒருவனுக்கும் மனத்தளர்ச்சிக்கும் வெகுதூரம். செல்வத்தின் நிலையாமையை நன்கு உணர்ந்ததனல் அவன் யாண்டும் திண்ணிய மனம் படைத்தவனகவிருப்பான். ஒருவன் நாள்தோறும் வெகு நேரம் விழுந்து விழுந்து படிக்கிருன். நிறைய மதிப்பெண் பெற்று முதல் மாணக்கனக வர வேண்டும் என்ற ஆவல் மிகுந்தவனகவிருக்கிருன். இறுதி ஆண்டுத் தேர்வு வருகிறது. பரீட்சை அறைக்குள் நுழைகிருன். ஏதோ ஒருவித பீதியின் காரணமாகப் படித்தது அனைத்தும் அடியோடு மறந்து போகிறது. சரியாகத் தேர்வு எழுதாத காரணத்தால் மனத்தளர்ச்சி அடைகிருன். கல்வி மீது அவனுக்குப் பெரிய வெறுப்புத் தோன்றுகிறது. தளராத மனம் படைத்தவன் தான் இழந்த செல்வத்தை முன்னிட்டோ, பயன்படாக் கல்வியை முன்னிட்டோ மனம் கலங்கான். ஆகவே செல்வத்தை விடக் கல்வியை விட ஒரு நாளும் தளராத மனம் படைத்திருப்பது பாராட்டத்தக்க பண்பு. அதனல்தான் ஆற்றல் சொரூபமான அம்பிகை 'ஒருநாளும் தளர்வறியா மனம் தருவாள்' என்று சொல்லப்படுகிறது. யார் மன உறுதி படைத்தவர்களாக இருக்கிருர்களோ அவர்கள் எந்தத்துறையிலும் சுலபமாகப் பிரவேசிப்பார்கள். எந்தத் துன்பம் வந்தாலும் அதனை இலகுவாகச் சமாளித்து வெற்றி வாகை சூடுவார்கள். மாணவர்கள் முதல் ஆத்ம சாதகர்கள் வரை யாரும் மனத்தளர்ச்சிக்கு இடம் தரலாகாது.

எப்படிப்பட்ட வீரனுக்கும் மனத்தளர்ச்சி வந்துவிட்டால் அவனுடைய ஆண்மை, சாமர்த்தியம் அனைத்தும் அழிந்துவிடும். அர்ஜுனன் மாபெரும் வீரன். அவனுக்கே ஒருதடவை மனத்தளர்ச்சி ஏற்பட்டதின் விளைவாக ஒரு நெருக்கடியில் சிக்கித் தவித்தான். கண்ணனுடைய துணையிருந்ததால் அவனுடைய மனத்தளர்ச்சியைக் களைய முடிந்தது. இல்லையென்ருல் மகாபாரதத்தின் போக்கே வேறு மாதிரியாகப் போயிருந்திருக்கும். உபாசன மூர்த்தியின் மகிமையனைத்தும் உபாசகனுக்கும் வருகிறது என்பது ஒரு மாபெரும் உண்மை. அன்னை பராசக்தியை வழிபட்டவர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாக, மன உறுதி படைத்தவர்களாக இருந்து வந்துள்ளனர்.

அவதார புருஷர்களில் இராமகிருஷ்ண பரம ஹம்சரும், சுதந்திர வீரர்களில் சுப்பிரமணிய பாரதியையும் சான்ருகச் சொல்லலாம்.

அம்பிகையை நாடுபவர்களுக்கு அவள் தெய்வீக அழகை நல்குகின்ருள். அழகு என்பது மேனியில் அமைந்துள்ள அழகு அன்று. பண்பில் அமைந்த அழகே தெய்வவடிவு என்று சொல்லப்படுகிறது. மகாத்மா காந்தியின் மேனியைச் சற்று மனக்கண் முன் நிறுத்திப் பார்ப்போம். எலும்பும் தோலுமான சரீரமும், பல்லில்லாப் பொக்கை வாயும், நீண்ட காதுகளும் உடைய அம்மனிதரை 'பக்கிரி' என்றுதான் முதலில் உலகம் பரிகசித்தது. அவருடைய நோக்கமும், தெய்வீகப் பண்பும், சலியாத உழைப்பும் அவரைத் தெய்வநிலைக்கு உயர்த்தின எனலாம். அவரிடம் இருந்த நற்குணங்கள்தாம் அவரிடம் ஒரு கவர்ச்சியை உண்டு பண்ணியனவே தவிர அவருடைய உடலமைப்பன்று. எண்ணம் உடலை ஆளுகிறது என்ற கோட்பாட்டிற்கொப்ப நல்ல மனப்பான்மை படைத்திருப்பவனிடமே ஒருவித அழகு பொலியும். அதுவே தெய்விக அழகு எனப்படும். சாதனத்தில் முறையாக ஈடுபட்டுவரும் சாதகர்களின் வதனங்களில் மிளிரும் அழகு அவர்கள் அடைந்த பண்பாட்டையே விளக்குகிறது. அதற்கு மாருக நவீன உலகம் என்ன செய்கிறது? உடலை அழகு படுத்துவதாக எண்ணி ஏராளமான பணத்தை ஆடம்பரப் பொருள்களில் கொட்டி அவைகளுக்குப்பலர் அடிமையாகின்றனர். ஆடம்பரப் பொருள்களை உபயோகிப்பது வெறும் உடல் தோலை மினுக்குவதாகும். உடல் ஆபாசத்தின் இருப்பிடம் என்பதை மறந்து விடக்கூடாது. மனதைக் கவர்ந்திழுக்கக்கூடிய மேனியழகு தெய்வீகக் குணங்கள் வாய்க்கப் பெற்றவர்களுக்கே வாய்க்கும். ஆகவே மனதைத் திருத்தியமைப்பதே முறை. அம்பிகையை நாடும் பக்தர்களுக்கு 'தெய்வ வடிவும் தரும்' என்பதன் கோட்பாடு இதுவாம்.

"இந்த உலகம் ஒரு சுயநலம் பொருந்திய சுடுகாடு" என்று ஒரு அறிஞன் கூறினன். ஏன்? நம்மிடம் வசதிகள், பதவிகள், வாய்ப்புக்கள், உடைமைகள் இருந்தால் ஒட்டி உறவாட உறவினர்கள் என்றும், நண்பர்கள் என்றும் சொல்லிக்கொண்டு நம்முடன் இணக்கம் வைப்பார்கள். உயிர் போன உடலைக் குழியில் தள்ளிவிட்டு உறவினர் அனைவரும் தங்கள் போக்கில் பிரிந்து விடுவது போன்று நம்மிடமிருந்து பெறுவதற்கு எதுவுமில்லை என்பது தெரிந்தவுடன் தாங்களாகவே கௌரவமாகக் கழன்று விடுவார்கள். நம்மோடு அவர்கள் இணக்கம் வைத்தது வஞ்சகத்தோடு கூடிய இணக்கம். இது உலகெங்கும் எப்போதும் இருந்துவருகிற உறவுமுறை. ஆனல் அம்பிகையை நாடுகிறவர்களுக்கு வந்தமைகிற உறவு பக்தர்களின் திருக்கூட்டமாகவே இருக்கும். உள்ளொன்று வைத்துப் புறமொன்ருக நடிக்கும் வஞ்சக இயல்பை அவர்கள் மாட்டுக் காண முடியாது. ஆகவேதான் அவளை நாடுபவர்கள் நெஞ்சில் வஞ்சமில்லாப் பண்பைப் பெறுகிருர்கள்.

இளைஞன் ஒருவன் கடைக்குப் போகிருன். சில சாமான்களை வாங்குவதற்காக வந்த அவனிடம் கடைக்காரனும் வேண்டிய சாமான்களை அவன் முன் வைக்கிருன். வாங்க வந்தவன் ஒவ்வொரு சாமானை ஊடுருவிப் பார்க்கிருன். நல்ல சாமானை இருக்கிறதாவென்று நோட்டம் இடுகிருன். சரியில்லாத சாமானை ஒதுக்கிவிட்டு வேறு நல்ல சாமான் இருக்கிறதாவெனக் கேட்கிருன். நம்மில் ஒவ்வொருவரும் அங்ஙனம்தான் செய்கிறோம். தரங்கெட்ட பொருள்களை ஒதுக்கிவிட்டு நல்லதைத் தேர்ந்து எடுப்பது போலத் தீய, சிற்றியல்புகளைக் களைந்துவிட்டு நல்லவைகளை மட்டும் நாம் ஏன் கைக்கொள்ளக் கூடாது? அம்பிகையை வழிபடுபவர்களுக்கு நல்லனவெல்லாம் நாடி வருகின்றனவாம்.

மேகத்தைப் போன்ற பூவை யணிந்த கேச பாரத்தை உடைய அபிராமியின் கடைக்கண்கள் மேற்சொன்ன எல்லா நலன்களையும் வாரி வழங்குகின்றன. இவ்வுலக வாழ்வில் சிறப்புற்று வாழ்வதற்கு வேண்டிய அனைத்தையும் அவள் கொடுப்பதோடு வாழ்வின் முடிந்த இலட்சியமாகியமுக்தியாம் பெருநிலையையும் மனமுவந்து அளிப்பதே அன்னை அபிராமியின் தனிப் பெரும் கருணையாகும். உலகம் உய்வடையவும், உயிர்கள் மகிழ்ச்சியுறவும் அருள் அன்னை அபிராமி நம்மையும் தன் கடைக்கண்ணுல் காத்து ரக்ஷிப்பாளாக.

சாதகர்களின் படித்தரங்கள்

(திரு V. S. நரசிம்மன்)

நீதிக்கதைகள் (Parables) மூலமாக உயர்ந்த தத்துவக் கருத்துக்களை வழங்குவது சமயங்கள் அனைத்திலும் காணப்படும் முறை. ஸ்ரீ ராம கிருஷ்ணர் உபகதைகளைப் பயன்படுத்தி நுட்ப மான கோட்பாடுகளை எளிய மொழியில் அனை வரும் எளிதில் அறியும் வண்ணம் எடுத்துரைத் தார். ஜைனமத நூல்களும் இந்த முறையைக் கையாளுகின்றன. அங்க ஞான தர்ம கதா (अङ्ग ज्ञान धर्म कथा) என்ற நூலில் ஜைனர்களின் ஐம்பெரும் விரதங்களை அனுஷ்டிப்பதில் சாத கர்களிடையே உள்ள வித்தியாசத்தை ஒரு கதை மூலம் அழகாக உணர்த்துகின்றனர்.

வியாபாரி ஒருவனுக்கு நான்கு மருமக்கள் இருந்தனர். அவர்களை அழைத்து ஒவ்வொரு வருக்கும் ஐந்து நெல்மணிகளைத் தந்தார். 'நான் திரும்பிக் கேட்கும் பொழுது இவற்றைத் தர வேண்டும்' என்ற நிபந்தனையைக் கூறிச் சென் ருர். அவர் கண் பார்வையினின்று மறைந்த தும் முதல் பெண் அவற்றை வீசி எறிந்துவிட் டாள். அடுத்தவளோ வாயில் போட்டு மென்று துப்பினுள். மூன்ருவது பெண் மிகவும் கவனத் தோடு ஓரிடத்தில் பத்திரமாகப் பாதுகாத்தாள். நான்காவது மருமகள் விளை நிலத்திற்குச் சென்று முறையாக அவற்றை விதைத்தாள். காலம் கழிந்த பின் ஐந்து மணிகளோடு நில் லாது, மேலும் அதிக மணிகளைப் பெறுவதற்கு ஏற்ற உபாயத்தை அவள் கடைப்பிடித்தாள். அனைவரினும் சிறந்தவள் இவளே என அவர் பாராட்டும்படி நடந்துகொண்டாள்.

இந்தக் கதையில் குறிப்பிடப்படும் ஐந்து நெல் மணிகள் ஜைன மதத்தினர் மேற்கொள் ளும் ஐந்து விரதங்களைக் குறிக்கின்றன. அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், அபரிக் கிரஹம், பிரம்மச்சரியம் ஆகியவை ஐம்பெரும் விரதங்களாம். ராஜயோகத்தில் யமம் என்னும் பகுதியில் இவ் ஐந்து ஒழுக்கங்களும் சொல்லப் படுகின்றன. அனுஷ்டிக்கும் முறையை ஒட்டி 'அனுவிரதம்' என இல்லறத்தாருக்கும் 'மகா விரதம்' என துறவிகட்கும் இவை உரித்தா கின்றன. கதையில் வரும் முதல் பெண்ணைப் போல, விரதங்களைக் கருத்தில் கொள்ளாது அலட்சியப்படுத்தும் சாதகர்கள் கடைத்தர மானவர்கள். அவர்கள் வாழ்க்கையில் எவ் வித முன்னேற்றமும் அடைவதில்லை. விரத நியமத்தின் முக்கியத்துவத்தை உணரா[illegible] ஏதோ ஒரு போக்கில் கடைப் பிடிப்போர் இரண்டாவது நிலையில் உள்ளோர். அவர்கள் கிரியைகளை யந்திரம் போன்று செய்பவர்களா கிருர்கள். அவர்களுக்கு முன்னேற்றம் மிக மெதுவாக வருகின்றது. மூன்ருவது படியில் உள்ள வெகு கவனத்தோடு, நெறி பிசகாது அனுஷ்டானம் செய்யும் முனிவர்கள் போற்றுத லுக்கு உரிய பெரியோர்கள். அவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படுவதை அவர்கள் நன்கு அறிவார்கள். தாங்கள் மட்டும் அல்லாது, அனை வரும் பெருவாழ்வு வாழவேண்டும் என்ற எண் ணத்தோடு நெறியைப் பாதுகாத்து, வளர்த்து, பலரிடையே பரப்பும் தொண்டைச் செய்யும் முனிவர்களே சாலச் சிறந்தோர். அவர்கள் இப் பிறவியிலேயே முக்தி என்னும் முடிந்த நிலையை அடைகின்றுர்கள். முறைப்படி விதைத்துப் பயிராக்கி அறுவடை செய்து அனைவருக்கும் பகிர்ந்தளிப்பது போல் நெறியோடு விரதம் காத்து, தவ வாழ்வு வாழ்ந்து, ஏனையோரையும் ஈடுபடுத்தி, தெய்வீக நெறிதழைக்கும் வண் ணம் வாழ்வோரே உயர்ந்தோர் என்ற உண்மை யைச் சாதாரணக் கதையின் மூலம் வெகு அழ காக விளக்கியுள்ளனர்.

செய்திகள்

நிகழ்பவை

செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று மாலை வித்யாவன குருகுல மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து சரஸ்வதி பூஜையைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலப் பள்ளி மாணவர்கள் தீபாவளி விடுமுறைக்காக அக்டோபர் மாதம் 11ஆம் தேதி வியாழக் கிழமை மாலை 3 மணிக்கு மேல் அவரவர்கள் ஊருக்குப் புறப்படுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

திருவாசகம் - பிரசார விலை		ரூ. 14-00
ஸ்ரீமத் பகவத்கீதை - பிரசார விலை		... 12-00
ஞானயோக விளக்கம்		... 8-00
ராஜயோக விளக்கம்		... 8-00
பக்தியோக விளக்கம்		... 6-00
பரமஹம்சரின் பெருமை		... 6-00
விவேகானந்த விவரணம்		... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்		... 4-00
விவேகானந்த உபநிஷதம்		... 4-00
கடவுளின் வடிவங்கள்		... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I		... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II		... 3-50
தினசரி தியானம் - பிரசார விலை		... 3-50
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ஏழாம் பதிப்பு-பிரசார விலை		... 3-00
அனுஷ்டான வேதாந்தம்		... 3-00
எதிர்கால இந்தியா		... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம்		... 2-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)		... 2-00
ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம்		... 2-00
கண்ணன் என்னும் கடவுள்		... 2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை	... 3-50
பரிபூரணானந்தம்	ஷை	... 3-00
சின்மயானந்த குரு	ஷை	... 3-00
ஆனந்தமானபரம்	ஷை	... 3-00
சுகவாரி	ஷை	... 3-00
மௌனகுரு வணக்கம்	ஷை	... 3.00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை	... 2-50
பரசிவ வணக்கம்	ஷை	... 1-00
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்)	... 1-50
பஜனைப் பாடல்கள்		... 1-50
சந்நியாசி		... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்		... 1-00
இராவண தத்துவம்		... 1-00
சகோதரி நிவேதிதை		... 1-00
காயத்ரீ		... 1-00
வாலிமோக்ஷம்	(நாடகம்)	... 1-00
தவப்புதல்வர்கள்	(நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன்		... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்		... 1-00
நோய்க்கு இடம் கொடேல்		... 0-80
நன்மக்களைப் பெறுதல்		... 0-80
பாண்டவ கௌரவ பெருமை	(நாடகம்)	... 0-80
*ஆத்ம சக்தி		ரூ. 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா ?		... 0-75
*மனிதனது நிஜசொரூபம்		... 0-70
*சக்தி தத்துவம்		... 0-70
*சிவ தத்துவம்		... 0-70
பிரஹ்லாதன்	(நாடகம்)	... 0-65
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்		... 0-60
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்		... 0-60
*ஆலய வழிபாடு		... 0-60
*சூரிய நாராயணன்		... 0-50
*முருகக் கடவுள்		... 0-50
*விஷ்ணு தத்துவம்		... 0-50
தெய்வீக மகிமைகள்		... 0-50
சைவன் யார் ?		... 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது		... 0-50
மார்க்கண்டேயன்	(நாடகம்)	... 0-40
தபோபலன்	(நாடகம்)	... 0-40
*கணபதி		... 0-40
வர்ணாச்ரம தர்மம்		... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்		... 0-30
The Bhagavad Gita (9th Imp.)		... 15-00
The Indian National Education		... 8-00
Sri Lalithambika Sahasranama Stotram		... 8-00
Ramakrishna Lives Vedanta		... 8-00
Facets of Brahman or The Hindu Gods		... 5-00
Daily Divine Digest (DELUXE)		... 4-50
Daily Divine Digest (Ordinary)		... 2-50
Mahabharata (with plastic cover,		... 4-50
Ramayana	(do)	... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)		... 4-00
Sri Vishnu Sahasranama Stotram		... 4-00
Siva Sahasranama Stotram		... 3-50
The Bhagavad Gita (Small Size)		... 3-00
Hinduism Hosts Christianity		... 3-00
Holy Bible—In the Light of Vedanta		... 1-50
*Introducing the Gita		... 1-50
TAT TVAM ASI (*That Thou Art*) IN Tayumana Swami		... 1-00
*Key to Higher Life		... 0-75
*The Teacher		... 0-60
*The Student		... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-25ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் அந்தர்யோகம்

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதி 22—9—79 முதல் 24—9—79 வரை சக்தி பூஜை அந்தர்யோகம் ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் நடைபெறும். இதில் கலந்து கொள்ள விரும்பும் தாய்மார்கள் மட்டும் செப்டம்பர் மாதம் 21ஆம் தேதி இரவே நேரில் வந்து நாள் ஒன்றுக்கு ரூபாய் 5·00 வீதம் ரூபாய் 15·00 மட்டும் உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளவேண்டும். அமைதியைக் காக்க 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளும், கைக்குழந்தையுடன் வரும் தாய்மார்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயிலெழுதல்		4-30
நாம ஜபம்	5-00	5-30
ஸ்நானம்	6-00	7-30
ஆரதி	7-30	
சிற்றுண்டி	7-45	
பஜனை	8-30	9-30
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை	10-00	11-00
அர்ச்சனை	11-30	12-30
உணவு, ஓய்வு	1-00	3-00

மாலை

	மணிமுதல்	மணிவரை
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை	3-00	3-45
நாம ஜபம்	4-00	4-30
சிற்றுண்டி	4-30	
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை, ஆரதி, பிரார்த்தனை	6-00	7-00
தியானம்	7-00	7-30
உணவு	7-45	
ஸத் ஸம்பாஷணை	8-30	9-30

குறிப்பு:— 1. செப்டம்பர் 22, 23 ஆகிய இரண்டு தினங்களிலும் ஸ்ரீ ஸாரதா கல்லூரி பிரார்த்தனைக் கொட்டகையிலும், 24ஆம் தேதி ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்திலும் காலை 10-00 மணிமுதல் 11-00 மணிவரை ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களால் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம விளக்கம் நடைபெறும். இவைகளில் அன்பர்களும் கலந்து கொள்ளலாம். மேற்படி மூன்று தினங்களிலும் மாலை 3-00 முதல் 3-45 மணிவரை ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை யதீஸ்வரிகளால் நடைபெறும். இவைகளில் தாய்மார்கள் மட்டும் கலந்துகொள்வார்கள்.

2. ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் செப்டம்பர் 24ஆம் தேதி மாலை அர்ச்சனை 4-30 மணிமுதல் 5-30 மணிவரை நடைபெறும். அன்று மாலை 6-00 மணிக்கு ஸ்ரீ ஸாரதா கல்லூரியில் ஸ்ரீ ஸாரதா ஸ்தாபனங்களின் மாணவிகளால் கலாநிகழ்ச்சிகள் நடைபெறும். அன்பர்களும் இதில் கலந்துகொள்ளலாம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai. Tiruchi Dt.